32°c
கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 26°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சாரதி பயிற்சியில் நம்பிக்கையை வென்ற நிறுவனம்
216, கண்டி வீதி ,வவுனியா.
(வசந்தம் திரை)
024 2227777, 077 7100444

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/= | சுடர்: 29 | கதிர்: 142 | வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 04 , வியாழன் 17.04.2014

# இலங்கை தமிழர்களை கைவிடாது காங்கிரஸ்

## அவர்களுக்காக உயிரையும் கொடுத்தார் ராஜீவ். வேறென்ன வேண்டும்? சோனியா காந்தி தெரிவிப்பு

சென்னை, ஏப்ரல் 17
"இலங்கைத் தமிழர்களை ஒருபோதும் காங்கிரஸ் கட்சி கைவிடாது. இலங்கைத் தமிழர்களுக்காகக் காங்கிரஸ் கட்சி எதுவுமே செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றன அரசியல் கட்சிகள். இலங்கைத் தமிழர்களுக்காக உன்னதமான தலைவர் ராஜீவ் காந்தி இரத்தம் சிந்தியதை மறக்க முடியுமா? அதைவிடவும் என்ன தியாகம் செய்ய முடியும்?."- என்று உருக்கமாகக் கூறியுள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவியும் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவியுமான சோனியா காந்தி.
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஆரம்பமாகியுள்ளது. தேர்தல் பரப்புரைகளும் சூடு பிடித்துள்ளன. தமிழகத்தின் தேர்தல் பரப்புரைகளில் ஈழத் தமிழர்கள் விவகாரமே அரசியல் கட்சிகளின் மையப்புள்ளியாக மாறியுள்ளது. அதை முன்னிலைப்படுத்தியே அரசியல் கட்சிகள் தமது பரப்புரைகளை தீவிரப்படுத்தியுள்ளன.
காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று கன்னியாகுமாரியில் நடந்தது.

> “அரசியல் ஆதாயத்துக்காக காங்கிரஸ் கட்சியைக் குறை கூற வேண்டாம். இலங்கைத் தமிழர்களுக்கு காங்கிரஸ் கட்சி இனியும் உதவிகள் செய்யும்.”




23ஆம் பக்கம் பார்க்க

## கனடாவின் நிலைப்பாடு கவலை தருகிறது

கொழும்பு,ஏப்.17
இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகளைக் காரணம் காட்டி பொதுநலவாயத்துக்கான நிதியுதவியை கனடா நிறுத்தியுள்ளமை ஏமாற்றமளிக்கின்றது என்று தெரிவித்துள்ளார் பொதுநலவாய அமைப்பின் செயலர் கமலேஸ் சர்மா.
பொதுநலவாய அமைப்புக்கு இலங்கை தலைமை தாங்கும் அடுத்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில், தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான பொதுநலவாயத்தின் நிதியத்துக்கு வழங்கப்படும் நிதியை நிறுத்துவதாக கனடா அரசு முடிவெடுத்துள்ளது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

— 23ஆம் பக்கம் பார்க்க



எதிர்பார்ப்பை நிறைவேற்றுமா இந்திய நாடாளுமன்ற தேர்தல்?

பக்கம் 14

எம்மைப் பின்தொடருங்கள்...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint

## தென்னாபிரிக்கா எதற்கு? தெரிவுக் குழுவே போதும்

### அடம்பிடிக்கின்றது இலங்கை



கொழும்பு, ஏப்.17
தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, தென்னாபிரிக்காவின் அனுசரணையுடன் இலங்கை அரசுடன் பேசுவதற்குத் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ள நிலையில், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே இனப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று கூறுகின்றது இலங்கை.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சின்போது

23ஆம் பக்கம் பார்க்க

## யாழில் கலந்துரையாடவுள்ள கூட்டமைப்பு உறுப்பினர்கள்

### தற்போதைய களநிலவரம் தொடர்பாக

யாழ்ப்பாணம்,ஏப்.17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கிடையிலான மூன்றாவது கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் ஐ.நா சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், வடக்கு - கிழக்கு மாகாணசபைச் செயற்பாடுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தென்னாபிரிக்கப் பயணம் என்பன குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு நாடா

23ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் சிறுநீரக மோசடியா?

### இந்தியப் பொலிஸார் தீவிர விசாரணை

சென்னை, ஏப்.17
கொழும்பை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது எனக் கூறப்படும் சிறுநீரக மோசடி தொடர்பில் இந்தியாவின் ஹைதராபாத் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
கொழும்பில் மேற்கொள்ளப்படும் சிறுநீரக மோசடியில் சிக்கி ஹைதராபாத்தைச்

— 23ஆம் பக்கம் பார்க்க

## இறுதிப் போரில் இந்தியாவா? இல்லை என்கிறார் பொன்சேகா

கொழும்பு,ஏப்.17
இறுதிக் கட்டப் போரின்போது தரையில் இலங்கை இராணுவம் மட்டுமே போரில் ஈடுபட்டது. அங்கு வெளிநாட்டவர்கள் எவரும் இருக்கவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, இந்தியப் படையினர் இறுதிப் போரில் பங்கெடுத்தனர் என்று கூறப்படுவது திட்டமிட்ட பொய் என்றும் தெரிவித்துள்ளார்.
இறுதிக் கட்டப் போரில் இந்திய இராணுவம், இலங்கை இராணுவத்திற்கு உதவி செய்யும் வகையில் பங்கெடுத்துள்ளது. இந்திய நாடாளுமன்றத்துக்கோ, குடியரசுத் தலைவருக்கோ தெரியாமல் இந்திய இராணுவம் பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இந்திய உயர் நீதிமன்றத்தில் சிறப்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இறுதிக் கட்டப் போரில் பங்

23ஆம் பக்கம் பார்க்க

## மாகாணத்தின் அதிகாரத்தை சீர்குலைக்கிறது மத்திய அரசு

### சாடுகிறார் அமைச்சர் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஏப்.17
மாகாணத்தின் அதிகாரங்களை மத்திய அரசு சீர்குலைக்க முனைகிறது. அதற்கான செயற்பாடுகளையும் திட்டவட்டமாக முன்னெடுத்து வருகிறது - இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.
வடமராட்சி கிழக்குப் பகுதியில் மண் அகழ்வு தொடர்பான மக்களின் முறைப்பாடு தொடர்பான கலந்துரையாடல் அமைச்சின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்ற அனுமதியின்றி படைகளை அனுப்ப இடமுண்டு

### இந்திய இராணுவத்தின் முன்னாள் அதிகாரி கேணல் ஹரிஹரன் கூறுகின்றார்

சென்னை,ஏப்.17
நாடாளுமன்ற அனுமதி பெறப்படாது, நிலைமைகளுக்கு ஏற்றவாறு படைகளை அனுப்ப இந்தியப் பிரதமருக்கு அதிகாரம் இருப்பதால், இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இந்திய இராணுவம் நாடாளுமன்றத்துக்கும், குடியரசுத் தலைவருக்கும் தெரியாமல் பங்கெடுத்தமை தவறில்லை என்று தெரிவித்துள்ளார் இராணுவ ஆய்வாளரும், இந்திய இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியுமான கேணல் ஹரிஹரன்.
இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் இந்தியப் படையினர் நேரடியாகப் பங்கெடுத்தது தொடர்பாக விசாரிக்க சிறப்பு விசாரணைத் தீர்ப்பாயம் ஒன்றை அமைக்கக் கோரி இந்திய உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுத்

23ஆம் பக்கம் பார்க்க

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.17
இணைந்த தலைமையில் இடம்பெறும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்கும் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன்.
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்.மாவட்டச்

— 23ஆம் பக்கம் பார்க்க

## முன்னைய காலங்களைப் போன்று மணல் ஏற்றுவதற்கு அனுமதியுங்கள்

### யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம்.ஏப்.17
கடந்த காலங்களைப் போன்று மாவட்ட செயலகத்தின் அனுமதியுடன் மணல் ஏற்றுவதற்கான அனுமதியைப் பெற்று மணல் ஏற்றும் சேவையில் ஈடுபட ஆவன செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர் யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்கள்.
வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும்

23ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசியல்வாதிக்கு கோபியுடன் தொடர்பாம்

## விசாரணைகளை ஆரம்பித்தது படைத்தரப்பு

கொழும்பு.ஏப்.17
புலிகள் அமைப்பை மீளுருவாக்குவதற்கு முயற்சித்தார்கள் என்று கூறப்பட்டு, அண்மையில் நெடுங்கேணியில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கோபி மற்றும் அப்பனுக்கும், தமிழ் அரசியல்வாதி ஒருவருக்கும் இடையே இருந்ததாகக் கூறப்படும் நெருங்கிய தொடர்பு குறித்து பாதுகாப்புப் படைத் தரப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று பாதுகாப்புத் தரப்பை மேற்கோள்காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.
தமிழீழ விடுதலைப் புலிகளை மீளிணைக்கும் செயற்பாட்டில் கோபி ஈடுபட்டதாக இலங்கை பாதுகாப்புப் பிரிவு தெரிவித்திருந்தது. அதற்கமைய அவரைத் தேடி தேடுதல் வேட்டை நடத்தப்பட்டிருந்தது. இறுதியில் கடந்த 11 ஆம் திகதி நெடுங்கேணிகாட்டுப்பகுதியில் வைத்து கோபி இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.
இந்த நிலையில் கோபியின் தொலைபேசி மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்தார். 'தமிழ் அரசியல்வாதி ஒருவருடன் அடிக்கடி தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு கோபி பேசியுள்ளார் என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளதுடன், அந்த உரையாடல்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.
இதேவேளை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய தகவலில், கோபிக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் போக்குவரத்து வசதிகளை வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.
குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் கடந்த வருட வரவு - செலவுத் திட்ட விவாதம் நாடாளுமன்றில் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது நவம்பர் 26 ஆம் திகதி ஆற்றிய உரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை வீரன் என்று குறிப்பிட்டிருந்தார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-5)

## ஆஸி. அரசு பயண எச்சரிக்கை

மெல்போர்ன், ஏப்.17
பிரிட்டனைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவும் இலங்கைக்கு பயணம் செய்யும் தமது பிரஜைகளுக்கு எச்சரிக்கை அறிவிப்பு விடுத்துள்ளது. அந்த எச்சரிக்கையில் இலங்கையில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.
பாதுகாப்பு நிலைமைகள் மோசமாக இருப்பதால் அங்கு செல்லும் தமது பிரஜைகள் கவனமாக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது ஆஸ்திரேலியா.
"இலங்கையில் இடம்பெறும் தாக்குதல் சம்பவங்களில் ஆஸ்திரேலியப் பிரஜைகள் சிக்கிவிடக் கூடாது. இலங்கையில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் மற்றும் போராட்டங்கள் நடைபெறலாம். அவற்றை கலைக்கக் கண்ணீர்ப் புகை குண்டு தாக்குதல்களை நடத்துமாறு இலங்கை அரசு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. இந்தப் போராட்டங்களில் கலவரங்கள் வெடிக்கலாம். அவை நடைபெறும் பிரதேசங்களுக்கு ஆஸ்திரேலியப் பிரஜைகளை செல்லவேண்டாம்" என்று அந்த எச்சரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ர)

## குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்க நாம் தயார் - பொதுபல சேனா

கொழும்பு,ஏப்.17
நாம் இனவாதத்தைத் தூண்டுவதாகவும், மதவாதத்தை தூண்டுவதாகவும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு தனியாகப் பதிலளிக்கத் தயார் என்று ஆளும் கட்சியின் அமைச்சர்கள் ஐந்து பேருக்கு பொதுபல சேனா அமைப்பு சவால் விடுத்துள்ளது.
அமைச்சர்களான டிலான் பெரேரா, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, ரிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோரை விவாதமொன்றில் மோதுமாறு குறித்த அமைச்சர்களுக்கு, பொது பலசேனா இயக்கத்தின்பொதுச் செயலர் கலபொடத்தே ஞானசார தேரர் கோரியுள்ளார்.
தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்குத் தனியாகப் பதிலளிக்கத் தயார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# குருநகர் யுவதி உயிரிழந்தமைக்கு இரு மதகுருக்களே காரணமாம்

## நீதி வேண்டும் என்று கோரி உறவினர்கள் போராட்டம்


போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்.

யாழ்ப்பாணம், ஏப்.17
குருநகர் பகுதியில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட கொன்சலிற்றாவின் சாவுக்கு நீதி வேண்டும் என்று தெரிவித்து யாழ்.ஆயர் இல்லத்தின் முன்பாக நேற்றுக் காலை அவரது உறவினர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
குருநகர் அடப்பன் வீதியில் வசித்து வந்த மண்டை தீவைச் சேர்ந்த ஜெரோமி கொன்சலிற்றா (வயது - 22) என்ற யுவதி அங்குள்ள ஆல யத்தில் மறைக்கல்வி கற்பித்து வந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் அவரைக் காணவில்லை என்று அவரது தந்தையால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை கிணற்றிலிருந்து சடலமாகக் கொன்சலிற்றா மீட்கப்பட்டார்.
குறித்த யுவதியின் சாவுக்கு இரு மதகுருமார்தான் காரணம் என்றும், குறித்த இரு கிறிஸ்தவ மதகுருமாரும் யுவதிக்குத் தொடர்ச்சியாக ஏற்படுத்தி வந்த பாலியல் ரீதியான துன்புறுத்தலே யுவதியின் சாவுக்குக் காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.
தொடர்ச்சியான பாலியல் துன்புறுத்தலால் கொன்சலிற்றா மன அழுத்தத்துக்கு உள்ளாகி இருந்தார் என்றும், அதன் காரணமாகவே அவர் உயிரை மாய்ந்துக் கொண்டிருக்கலாம் என்றும் கூறும் அவரது பெற்றோர், கொன்சலிற்றாவின் கைத் தொலைபேசியில் உள்ள, பாலியல் தொல்லை [illegible] என்று கூறப்படும் மதகுரு அனுப்பிய குறுஞ் செய்திகளையும், ஆபாசப் படங்களையும் ஆதாரமாகக் குறிப்பிடுகின்றனர். தற்போது அந்தக் கைத் தொலைபேசி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
தனது மகளுக்கு மதகுருமார் பாலியல் ரீதியில் தொல்லை கொடுத்து வந்தனர் என்று ஆயர் இல்லத்திலும் முறைப்பாடுசெய்யப்பட்டது என்று கொன்சலிற்றாவின் தாய் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனது மகளின் மரணத்துக்கு காரணமானவர் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
உயிரிழந்த யுவதியின் இறுதிச் சடங்கு மண்டைதீவில் நேற்று இடம்பெற்றது. சடலம் குருநகரிலிருந்து ஊர்வலமாக எடுத்து வர[illegible]பட்டது. அப்போது ஆயர் இல்லத்துக்கு அருகில் சிறிது நேரம் உறவினர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
'பாவமன்னிப்புக் கொடுக்கும் உனக்கு யார் மன்னிப்புக் கொடுப்பது'. 'இல்லறம் வேண்டுமாயின் துறவறத்தைத் துறந்து விட்டுப் போ', 'இனி மதத்தைப் பற்றிப் போதிப்பாயா பெண்ணைப் பற்றிப் போதிப்பாயா ?' என்று பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் அப்போது ஆயர் இல்லம் மூடியிருந்தது.
அதன் பின்னர் அவர்கள் ஏ-9 பிரதான வீதியில் சிறிது நேரம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து அங்கு வந்த பொலிஸார் அவர்களை கலைந்து செல்லுமாறு கோரினர். அதனைத்தொடர்ந்து அவர்கள் சென்றனர்.
அதேவேளை, குறித்த யுவதியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில், யுவதி நீரில் மூழ்கியதாலேயே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யுவதியின் மரணம் தொடர்பில் இதுவரையில் யாரும் கைதுசெய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ர-5)

## தங்க மீன்களுக்கு 3 விருதுகள்

சென்னை, ஏப்ரல், 17
'தங்க மீன்கள்' திரைப்படம் 3 தேசிய விருதுகளை வென்றுள்ளது. திரைப்படத் துறைக்கான 61ஆவது தேசிய விருதுகள் நேற்று இந்திய மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 'தங்கமீன்கள்' திரைப்படம் 3 தேசிய விருதுகளை வென்றுள்ளது.
மறைந்த இயக்குநர் பாலு மகேந்திராவின் 'தலைமுறைகள்' தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் பிரிவில் சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. (ர-10)

# இலங்கை அரசின் தடையை ஏற்றுக்கொள்ள முடியாது

## கனேடிய எதிர்க்கட்சி கூறுகின்றது

றொறன்ரோ, ஏப்.17
சர்வதேச பொது அமைப்புக்கள் பலவற்றின் மீது இலங்கை அரசு அண்மையில் கொண்டு வந்திருக்கும் தடை, ஏற்றுக்கொள்ள முடியாதது. அவற்றை உடனடியாக மீளப்பெறவேண்டும் - என்று வலியுறுத்தியுள்ளது கனேடிய எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் நிழல் அமைச்சர் போல் டேவர்.
"கனடாவில் இருக்கும் சில அமைப்புக்கள் உட்பட சர்வதேச தமிழ் அமைப்புக்கள் மீதான இந்தத் தடை, இலங்கையில் பொறுப்புடைமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளைப் பலவீனப்படுத்துகின்றது.
சமூகப் பொது அமைப்புக்கள் கனடாவின் ஜனநாயக வாழ்க்கை முறையில் அடிப்படையான பங்குதாரர்கள் ஆவர். அதிலும் குறிப்பாகக் கனடாவில் இயங்கும் அமைப்புக்கள் இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் பொறுப்புடைமையை நிறுவுவதிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றன." - என்று தெரிவித்துள்ளார்.

> **சமூகப் பொது அமைப்புக்கள் கனடாவின் ஜனநாயக வாழ்க்கை முறையில் அடிப்படையான பங்குதாரர்கள் ஆவர்.**

அதேவேளை, குறித்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் கருத்துத் தெரிவிக்கும்போது, "மக்களுக்காகக் குரல் கொடுக்கும் கனேடியப் பிரஜைகளைப் பாதுகாப்பதற்காகவும் இலங்கையில் பொறுப்புடைமையை ஏற்படுத்துவதற்காகவும் கனேடிய அரசு தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்"- என்று தெரிவித்தார். (ர)

# கண்டாவளைப் பிரதேச செயலகத்தை இடம் மாற்றுவதற்கு மக்கள் எதிர்ப்பு

## பிரதேச செயலகம் முன் திரண்டு கவனவீர்ப்புப் போராட்டம்


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிரதேச மக்கள்.

கிளிநொச்சி, ஏப்.17
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலக அலுவலகத்தைப் புளியம்பொக்கணைச் சந்திக்கு இடம்மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச சபையின் முன்பாக பிரதேச மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். கண்டாவளைப் பிரதேச செயலக அலுவலகத்தைப் புளியம்பொக்கணைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பிரதேச செயலகத்தின் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடத்துக்கு இடமாற்றப்படுவதற்கே மக்கள் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.
போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், முப்பது வருடங்களாக இயங்கிவரும் பிரதேச செயலகத்தை இடமாற்ற வேண்டாம், பழம்பெரும் கிராமத்தின் பழைமையைச்சிதைக்காதீர்கள் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
குறித்த பிரதேச செயலக அலுவலகம் அரச காணியில் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது. ஒரு சிலரின் அரசியல் தலையீடு காரணமாக அலுவலகத்தைப் புளியம்பொக்கணைச் சந்திக்கு மாற்ற முயற்சிக்கின்றனர். நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பகுதி பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான தொழிற்பயிற்சி நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.
இவ்வாறு படிப்படியாக பிரதேச செயலக அலுவலகத்தை இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இடம் மாற்றும் திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
இதுகுறித்து கண்டாவளைப் பிரதேச செயலர் முகுந்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,
கண்டாவளைப் பிரதேச செயலக அலுவலகம் தற்போது அமைந்துள்ள பகுதி மிகவும் தாழ்வான பகுதியாகும். 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் இரண்டு முறை குறித்த பகுதியில் நீர் தேங்கி, பெறுமதியான சொத்துக்கள் அழிந்துள்ளன.
அத்துடன் தற்போதுள்ள கட்டடத் தொகுதி போதுமானதாக இல்லை. சகல பிரிவுகளையும் உள்ளடங்கிய செயற்பாடுகளை மேற்கொள்வது சிரமாக உள்ளது. இந்தநிலையில் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பகுதியை மாத்திரம் எமது பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான தொழிற்பயிற்சி நிலையக் கட்டடத்துக்கு மாற்றும் நடவடிக்கை உயரதிகாரிகளின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டது. எனினும் பிரதேசசெயலகம் இடமாற்றப்படாது. அதேவேளை, பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்துக்கான நிதி 2010ஆம் ஆண்டின் பின்னர் இரு தடவைகள் கிடைத்தபோதும், அதற்கான காணிகள் கிடைக்காமையால் நிதி திருப்பியுள்ளது"- என்று தெரிவித்தார். (ர-402-426)

## இறால் தொழிலாளருக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

*கோயிற் குடியிருப்பு கடற்றொழிலாளர் கிராமிய அமைப்பினர் கோரிக்கை*

தென்மராட்சி, ஏப்.17
இறால் உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சியடைந்ததால் இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்ட ஆயிரக் கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப் படல் வேண்டும்.
இவ்வாறு சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு கடற்றொழிலாளர் கிராமிய அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கடந்த வருடம் போதிய மழை வீழ்ச்சி இல்லாததாலும் தற்போது நிலவும் காலநிலையாலும் இறால் உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.
இதனால் இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் போதிய வருமானமின்றி நடுத்தெருவுக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது.
இந்த நிலையில் இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளான குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சாட்டியிலிருந்து பவுசர் மூலம் நயினாதீவுக்குக் குடிதண்ணீர்

*வேலணைப் பிரதேச சபை ஏற்பாடு*

யாழ்ப்பாணம், ஏப்.17
சாட்டியில் இருந்து பவுசர் மூலம் குடிதண்ணீரை நயினாதீவுக்கு எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கு வேலணைப் பிரதேச சபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
தற்போதைய கடும் வறட்சியால் நயினாதீவில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவும் அறிகுறி ஏற்பட்டுள்ளது.
இதனை நிவர்த்தி செய்வதற்குச் சாட்டியில் இருந்து பவுசர் மூலம் குடிதண்ணீரை குறிகாட்டுவான் இறங்கு துறை முகத்துக்கு எடுத்து வந்து அங்கிருந்து கடற்பாதை வழியாக நயினாதீவுக்குக் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபை உறுப்பினர் சி.ந.கருணாகர குருமூர்த்தி தெரிவித்தார்.

**தற்போது நயினாதீவில் உள்ள நன்னீர்க் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து உள்ளது.**

தற்போது நயினாதீவில் உள்ள நன்னீர்க் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்தும் உள்ளது. (வ-17)

# மாநகர சபைத் தொழிலாளர் நேற்று பணிப்புறக்கணிப்பில்

*தற்காலிக தொழிலாளருக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி*



தற்காலிக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் யாழ். மாநகரசபைத் தொழிலாளர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.17
பிரதேச சபைகள் தற்காலிக தொழிலாளர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கிய போதும், யாழ்.மாநகர சபை அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதை இழுத்தடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் நேற்றுப் புதன்கிழமை மாநகர சபையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஐந்நூறுக்கும் அதிகமான தொழிலாளர்கள் தற்காலிக வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.
வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் யாழ்.மாநகர சபைத் தலைவர் ஆ.ஜோண்சன் இவ்விடயம் தொடர்பில் கூறுகையில்;
"நேற்றைய வேலை நிறுத்தத்தில் யாழ்.மாநகர சபையின் அனைத்துப் பகுதித் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.
வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டும். தற்காலிகத் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். இது குறித்து ஆணையாளரின் பதிலை எதிர்பார்க்கின்றோம்.
பல்வேறு தொழிலாளர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் பொது மக்களுக்கான பல்வேறு சேவைகள் பாதிக்கப்படுவதாகவும், எனவே எமது பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.
இது தொடர்பாக மாநகர சபை ஆணையாளரிடம் கேட்ட போது;
தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்ததும் நியமனம் வழங்கப்படும். இது தொடர்பில் சுமுகமான தீர்வு எடுக்கப்படும் என்று ஆணையாளர் தெரிவித்தார். (வ-7)

# வாழ்வெழுச்சி புத்தாண்டுச் சந்தையை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்

*யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு*

அச்சுவேலி, ஏப்.17
"மக்களின் வாழ்வாதார மேம்பாட்டையும் உள்ளூர் நுகர்ச்சியாளர்களின் வசதியையும் கருத்தில் கொண்டு நடத்தப்படும் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தையை உற்பத்தியாளர்களும் -நுகர்ச்சியாளர்களும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்வாதார மேம்பாட்டுக்கான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு பிரதேச செயலர் பிரிவு வாரியாகச் செயற்படும் சமூக அபிவிருத்தி மன்றங்கள் தயாராக உள்ளன. எனவே உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும்" இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம்.
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை நிகழ்வு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றது.
கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அரச அதிபர் தொடர்ந்தும் உரையாற்றும்போது;
"வாழ்வாதார மேம்பாட்டுக்கு வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்ட உதவிகள், உபகரணங்களை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்ற வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தையை பார்வையிடும் யாழ்.அரச அதிபர்

கொள்ள வேண்டும்.
இந்த வகையில் பயனாளிகளுக்கான சகல உதவிகளையும்வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உயர் மட்ட கலந்துரையாடலிலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
கிராமிய மட்டத்தில் உள்ள வளங்களை திட்டமிட்ட முறையில் திரட்டி கிடைக்கின்ற உதவிகளை உரிய முறையில் உச்சப்பயன்பாட்டுக்கு உள்ளாக்கிக் கொள்ளவேண்டும்.

சியாளர்களின் தேவையை நிறைவு செய்வதற்கு ஏற்றதாகவும் தொடர்ச்சியான சந்தை வாய்ப்போடு கூடியதாகவும் இருக்க வேண்டும்.
வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்கு மாவட்ட ரீதியில் வாழ்வின் எழுச்சி மத்திய சந்தை யாழ்ப்பாணத்தில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.
இதுபோன்ற அமைப்புக்கள் பிரதேச செயலர் பிரிவு மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் செயற்பட வேண்டும். இதன்

களை நிறைவு செய்வதோடு உற்பத்திப் பொருள்களையும் நியாய விலையில் சந்தைப் படுத்திக்கொள்ள முடியும்.
கடந்த கால போரால் பெரும் இழப்புக்களைச் சந்தித்தோம். அதில் இருந்து விடுபட வேண்டும். இழப்புக்களை நினைத்துக் கொண்டிருப்பதால் பயன் இல்லை. தன்னார்வத்தோடு, சுய ஊக்கத்தோடு முயன்று முன்னேற வேண்டும்.
அதற்கு ஏற்புடைய வகையில் வாழ்வின் எழுச்சி வேலைத் திட்டங்கள் அமைந்துள்ளன" - என்றார்.

## தொடர் குடியால் குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.17
தொடர்ச்சியான குடி காரணமாக ஈரல் செயலிழந்ததன் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
புதுவருடத் தினத்தன்று நடந்த இந்தச் சம்பவத்தில் நீர்வேலி தெற்கைச் சேர்ந்த 47 வயதுடைய செல்லையா ஞானசீலன் என்பவரே உயிரிழந்துள்ளார்.
இருபிள்ளைகளின் தந்தையான இவர், குடும்பச் சச்சரவு காரணமாக 2006ஆம் ஆண்டில் இருந்து தனியாக வசித்து வருகின்றார். இவர் புதுவருடத் தினத்தன்று நிறை போதையில் வந்து வீட்டில் படுத்துள்ளார். அதன் பின்னர் அவரில் அசைவுகள் காணப்படாததை அவதானித்த உறவினர்கள் உடனடியாக அவரை யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.
எனினும் மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முன்னரே அவர் உயிரிழந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. தொடர்ச்சியான குடி காரணமாக அவரது ஈரல் செயலிழந்தமையே சாவுக்கான காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, தொடர்ச்சியாக நோய்வாய்ப்பட்டிருந்த முதியவர் ஒருவர் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.
யாழ்ப்பாணம் அரசடி வீதியைச், சேர்ந்த 74 வயதுடைய கந்தையா சோமசுந்தரம் என்பவரே இவ்வாறு சாவடைந்தவராவார். திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்டபின்னர் முதியவரின் உடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ற-14-4)

## பத்துரூபா தாள், நாணயம் குடாநாட்டில் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.17
யாழ்.குடாநாட்டில் பத்து ரூபா நாணயத் தாள் மற்றும் அதன் நாணயக் குற்றிக்கும் தட்டுப்பாடு தொடர்ந்து நிலவி வருகின்றது.
பத்து ரூபா நாணயத் தாளுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால் வர்த்தக நிலையங்களில் நுகர்வோருக்கு மிகுதிப் பணத்தை வழங்குவதில் வர்த்தகர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.
பத்து ரூபா நாணயத் தாளின் புழக்கம் கடந்த சில மாதங்களாக குடாநாட்டில் வெகுவாகக் குறைந்து காணப்படுவதால் வர்த்தகர்கள், நுகர்வோர், போக்குவரத்துப் பிரிவினர் சிரமங்களை எதிர்நோக்கியும் வருகின்றனர். சித்திரைப் புத்தாண்டுக்காக அநேகமான வங்கிகள் பத்து ரூபா புதிய நாணயக் குற்றிகளைத் தருவித்து வாடிக்கையாளர்களுக்கு மட்டுப்படுத்தியும் வழங்கின. அத்துடன் ஆயிரம் , ஐந்நூறு, நூறு, ஐம்பது, இருபது ரூபா புதிய நாணயத் தாள்களை வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கின என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-17)



## இந்தோனேசிய சிறையிலிருந்து விடுதலை கோரி 9 ஈழத்தமிழர்கள் பட்டினிப்போர் அறிவிப்பு

*கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இந்தோனேசிய சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் 9 ஈழத்தமிழ் உறவுகள், தம்மை விடுவித்து குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து எதிர்வரும் திங்கள் முதல் சாகும்வரை உணவுதவிர்ப்பில் ஈடுபடப் போவ தாக அறிவித்துள்ளனர்.*

# தமிழரும், சிங்களவரும் இணைந்து வாழ முடியாது

## *சீமான் கூறுகிறார்*

சென்னை, ஏப்.17

ஈழத்தில் தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை என்று நாம் தமிழர் கட்சி மாநில ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை எமது நட்பு நாடு என்று சொல்கிறது பாரதீய ஜனதா. இலங்கை நம் நட்பு நாடு. ராஜபக்ஷ நமது நண்பன் என்கிறது காங்கிரஸ் கட்சி. இலங்கை பகை நாடு என்று அறிவிக்க வேண்டும் என்கிறார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா எனவே அதற்காகவே அவரை நாம் ஆதரிக்கின்றோம்.

ராஜபக்ஷ ஒரு போர் குற்றவாளி. அவரையும் அவருடைய சகாக்களையும் பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனை வாங்கி தர வேண்டும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் நட்புறவைத் துண்டிக்க வேண்டும் என்றும் அழுத்தம் கொடுத்து தீர்மானம் நிறைவேற்றி இருப்பவர் அம்மையார் ஜெயலலிதா. இதையெல்லாம் மனதில் கொண்டு நீங்கள் வாக்களிக்க வேண் டும்.

**அழிவின் விளிம்பில் இருக்கிற தமிழ் சமுதாயத்துக்கு ஒரே தீர்வு தனி ஈழ சோசலிச குடியரசு. இலங்கை ஒரு நாடு அல்ல. அங்கு தமிழர்களும், சிங்களர்களும் வாழ்கிறார்கள். அவர்கள் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை.**

முள்ளிவாய்க்கால் முற்றத்தை இடித்து விட்டார்களே. அவர்களை போய் சீமான் ஆதரிக்கலாமா? என்று கேட்கிறார்கள். முள்ளிவாய்க்கால் முற்றத்தை இடித்து விட்டார்கள். அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறோம். சத்தியமாக அதை திருப்பி கட்டி விடுவோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.

அழிவின் விளிம்பில் இருக்கிற தமிழ் சமுதாயத்துக்கு ஒரே தீர்வு தனி ஈழ சோசலிச குடியரசு. இலங்கை ஒரு நாடு அல்ல. அங்கு தமிழர்களும், சிங்களர்களும் வாழ்கிறார்கள். அவர்கள் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை.

எனவே அங்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இலங்கையும், ஈழமும் பிரிய ஒரே வழி பொது வாக்கெடுப்பு தான் என்று தீர்மானம் நிறைவேற்றிய இந்தியாவின் ஒரே தலைவர் ஜெயலலிதா தான். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தான் இலங்கையில் நடந்தது திட்டமிட்ட இனப்படுகொலை என்றும் அதற்கு ஒரே தீர்வு தனி ஈழம் தான். இந்த நிலைப்பாட்டை ஏற்கிறோம். அதனால் இரட்டை இலைக்கு வாக்கு கேட்கிறோம். ராஜீவ் காந்தி படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தூக்கு தண்டனையை நிறுத்தியவர் இந்த மாநில முதலமைச்சர் ஜெயலலிதா. தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர் சிறப்பு முகாம்களை மூட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்"-என் றார். (வ)

## புதுவருடத்தில் வெற்றிலைக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்.குடாநாட்டில் சித்திரைப் புத்தாண்டு வேளையில் வெற்றிலைக்குப் பெரும் கிராக்கியும் மவுசும் ஏற்பட்டிருந்தது. புதுவருடப் பிறப்பின் காரணமாக அவற்றின் விலை சடுதியாக அதிகரித்தது. ஒரு வெற்றிலை மூன்று ரூபா முதல் நான்கு ரூபா வரை விற்கப்பட்டது. (வ-17)

## வண்ணை காமாட்சி அம்பாள் ஆலய பூங்காவனம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.17

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலின் பூங்காவனத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 7 மணிக்கு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட வாகனத்தில் காமாட்சி அம்பாள் வெளிவீதியுலா வருவார். சிறப்பு நிகழ்வாக இந்தியாவில் இருந்து அழைக்கப்பட்ட தவில் வித்துவான்களின் தவில் கச்சேரி இடம்பெறவுள்ளதுடன், வருடாவருடம்பூங்காவனத் திருவிழாவின்போது இளைஞர்களின் கை வண்ணத்தில் தயாரிக்கப் படும் விசேட வாகனத்தில் அம்பாள் காட்சி கொடுப்பது சிறப்பம்சமாகும். (ற)

## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை சீவரத்தினம்

(ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர்)

தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை சீவரத்தினம் நேற்று (16.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் சபாரட்ணம், விஜயரட்ணம், ஜெயரட்ணம், ரத்தினவேல், ரத்தினகுமார், மயூரேசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்லமணி, ஜெயராணி, ரதி, கோமதி, வசந்தகுமாரி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

உடையார் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்
077 4294609,
077 5015191, 077 0794715

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி ஆனந்தசுந்தரம்

இல. 04 சின்னாலங்கண்டு லேன் அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆனந்த சுந்தரம் நேற்று (16.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.04, சின்னாலங்கண்டு லேன். அரியாலை.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி பாலயோகினி பாலபாஸ்கரன்



கொத்தாவத்தை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலயோகினி பாலபாஸ்கரன் நேற்று (16.04.2014) புதன்கிழமை சிவதபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - மகேஸ்வரி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி மற்றும் சொர்ணம் தம்பதியரின் மருமகளும் பொ. பாலபாஸ்கரனின் அன்புமனைவியும் பாலகரன், லால்கரன் ஆகியோரின் அன்புத் தாயும் பாலச்சந்திரன், இராமச்சந்திரன், ரவிச்சந்திரன், ஜெயச்சந்திரன், விமலச்சந்திரன், சந்திரிகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவபாஸ்கரன் மற்றும் பேபிசறோஜா, தவபாஸ்கரன், குணபாஸ்கரன் காலஞ்சென்றவர்களான பாஸ்கரன், ஜெயபாஸ்கரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. வீதி மல்லாகம்

தகவல்
குடும்பத்தினர்

# தாக்குதலாளிகள் கைது செய்யப்படாதுவிடில் பாதுகாப்பு தரப்பே பொறுப்பேற்க வேண்டும்

## *ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக க.விந்தன் கண்டனம்*

யாழ்ப்பாணம்,ஏப்.17

ஊடகங்கள் மற்றும் ஊடக வியலாளர்கள் மீதான தாக்குதல்களின் சூத்திரதாரிகளைப் பொலிஸார் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்தாத வரையில், இத்தகைய தாக்குதல்களுக்கான பொறுப்பை பாதுகாப்புத் தரப்பினரே ஏற்க வேண்டிவரும் என்று தெரிவித்துள்ளார், வடக்கு மாகாண சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர் க.விந்தன்.

யாழ்.தினக்குரல் செய்தியாளரான சிவஞானம் செல்வதீபனை, கடந்த திங்கட்கிழமை இரவு வடமராட்சி வல்லைப் பகுதியில் வைத்து இனம் தெரியாத இருவர் காட்டுமிராண்டித்தனமாக இரும்புக் கம்பிகளால் தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம், புது வருடப் பிறப்பிற்கு முன்னைய நாள் உதயன் பத்திரிகைப் பணிமனையின் அச்சுப்பகுதிப் பிரிவுக்குள் புகுந்த இனம் தெரியாதோர் அச்சியந்திரங்களை துப்பாக்கியால் சுட்டும் தீயிட்டும் நாசப்படுத்தி பெரும் சேதத்தை விளைவித்திருந்தனர். இத்தாக்குதல் நடந்து ஒரு வருடமாகியும் குறித்த சம்பவம் தொடர்பாக இன்று வரை யாரும் கைது செய்யப் பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படாத நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு (புதுவருடப் பிறப்பன்று) யாழ். தினக்குரல் பத்திரிகையாளர் மீதான தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது. இது உதயன் பத்திரிகையின் தாக்குதலின் ஒரு வருடத்தினை பூர்த்தி செய்யும் நினைவு நிகழ்வின் பரிசாக அமைந்துள்ளதோ என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

### முடிவுறாத தாக்குதல்கள்

உள்நாட்டிலுள்ள ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள், பாதுகாக்கப்பட வேண்டு மென்றும் ஊடக சுதந்திரம் மதிக்கப்பட வேண்டுமென்றும் தொடர்ச்சியாக குரல் எழுப்பப்பட்டு வந்த நிலையில் தற்பொழுது இவ்விவகாரம் ஐ.நா. மனித உரிமை பேரவை மாநாட்டின் 25 ஆவது கூட்டத்தொடரின் தீர்மானத்திலும் உள்ளடக்கப்பட்ட விடயமாக இருக்கின்ற சூழ்நிலையில் இனந்தெரியாதவர்கள் என்ற பெயரில் மீண்டும் ஓர் ஊடகவியலாளன் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டிருக்கின்றாரென்றால் இந்த நாட்டில் இன்னமும் மனித நேயமும், மனித பண்பும், மனித நாகரிகமும், இரக்கமும் அற்ற அரக்கர் கூட்டத்தின் அடாவடி ஓய்வில்லை என்பதையே எடுத்துக் காட்டி நிற்கின்றது.

### வேலியே பயிரை மேய்கின்றதா?

யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரையில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு பொலிசார் போதியளவு இருந்தும் கூட இத்தகைய மிலேச்சத்தனமான செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியவில்லை யென்றால் வேலியே பயிரை மேய்கின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வலுவாக எழுந்து நிற்பது தவிர்க்க முடியாததொன்று.

தாக்கப்பட்ட ஊடகவியலாளர் தொடர்பாக உடனடியாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தாலும் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவார்களா? என்ற சந்தேகம் எம்மத்தியிலே நியாயமாக எழுந்து நிற்கின்றது. ஏனெனில் கடந்த கால சம்பவங்கள் இத்தகைய நிகழ்வுகளுக்கு சாட்சியாக அமைந்திருக்கின் றன. இத்தகைய வன்செயல்களை நாம் வன்மையாக கண்டிப்பதோடு தாக்குதலோடு சம் பந்தப்பட்ட சூத்திரதாரிகளை கைதுசெய்து தண்டிக்காவிட்டால் பாதுகாப்பு தரப்பினரே இத்தாக்குதல் சம்பவத்தினையும் பொறுப்பேற்க வேண்டி வரும் - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## திருத்தம்

கடந்த (15.04.2014) பக்கம் 4இல் பிரசுரமாகிய இளையவி குண்டுமணியம் என்பவரின் நினைவஞ்சலியில் தவறுதலாக வேறு ஒருவரின் படம் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் கட்டட நிர்மாண வேலைகளுக்கு மேசன், லேபர், சட்டறிங் வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத்தேவை. வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்பு - 077 2020634

## கல்லாரை மல்லாகம் வளர்மதி சனசமூக நிலையம்

### அதிஸ்டலாபச்சீட்டிழுப்பின் முடிவுகள்

1 ஆம் பரிசு - 59137
2ஆம் பரிசு - 7706
3ஆம் பரிசு - 4041

**ஆறுதல் பரிசு**

| | |
|---|---|
| 1ஆம் பரிசு - 24941 | 2ஆம் பரிசு - 32904 |
| 3ஆம் பரிசு - 10003 | 4ஆம் பரிசு - 59110 |
| 5ஆம் பரிசு - 10200 | 6ஆம் பரிசு - 55290 |
| 7ஆம் பரிசு - 45317 | 8ஆம் பரிசு - 5505 |
| 9ஆம் பரிசு - 6192 | 10 ஆம் பரிசு -47455 |

# பனை உற்பத்திகள் ஆரம்பிக்கவில்லை

## கொடிகாமம் பிரதேசத்தில்

தென்மராட்சி, ஏப்.17
தென்மராட்சிப் பிரதேசத்தில் பனாங்கள்ளு 'சீஸன்' ஆரம்பமாகியுள்ள போதிலும் கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் பனை, வெல்ல உற்பத்தி மற்றும் போத்தலில் கள் அடைக்கும் பணி போன்றவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் சங்க அங்கத்தவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கள் உற்பத்தியை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் பனை வளம் அதிகமாக இருப்பதால் கடந்த காலங்களில் எட்டு வெல்ல உற்பத்தி நிலையங்கள் இயங்கி வந்ததுடன், மதுசார உற்பத்தி போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

போர்க் காலத்தில் வெல்ல உற்பத்தி நிலையங்கள் முழுமையாகச் சேதமடைந்தாலும், மதுசார உற்பத்தி நிறுத்தப்பட்டதாலும் சங்க அங்கத்தவர்கள் குறைந்த அளவு கள்ளையே உற்பத்தி செய்து வருகின்றனர்.

கடந்த வருட சீஸனில் சங்கத்தால் வரணி நாவற்காட்டில் போத்தலில்கள் கள் அடைக்கும் நிலையம் செயற்படுத்தப்பட்ட போதிலும் இவ்வருடம் இன்னமும் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)


# கடும் வெப்பம் காரணமாக விலங்கு விசர்நோய் அபாயம்

அச்சுவேலி, ஏப். 17
கடும் வறட்சி, அளவுக்கதிகமான வெப்பநிலைவீச்சால் குடாநாட்டின் கிணறுகளின் நீர்மட்டம் அளவுக்கு அதிகமாக குறைந்து வருவதோடு குளங்கள் வற்றி வறட்சியடைந்து வருகின்றன. கால்நடைகள் குடிக்கத் தண்ணீர் தேடி அலைவதோடு வறட்சி காலத்தில் ஏற்படும் விலங்கு விசர்நோய் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சூரியன் யாழ்ப்பாணத்துக்கு மேல் நேரில் உச்சம் கொடுப்பதால் வெப்பநிலை அதிகரித்திருப்பதோடு கடந்த இரண்டு மாதங்களுக்கு மேல் மழை இல்லாமல் இருப்பதால் கிணறுகளின் நீர்மட்டம் அளவுக்கு அதிகமாக கீழ் இறங்கி உள்ளது. அத்துடன் குளங்கள் நீர் வற்றிக் காணப்படுவதால் மேய்ச்சல் ஆடு, மாடுகள் தண்ணீருக்கு அலைகின்றன.

கிணறுகளின் நீர்மட்டம் குறைந்திருப்பதோடு ஊற்றின் அளவும் குறைவடைவதால் விவசாயிகள் செய்கை பண்ணிய பயிர்களுக்கு உரிய முறையில் நீர்பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டிருப்பதோடு நீர் இறைப்பதற்குப் பயன்படுத்தும் கிணறுகள் மீள் நிரம்புவதற்கும் நீண்டநேரம் செல்கின்றன. இதனால் ஒன்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தும் பங்குக் கிணறுகளில் இருந்து நீர்பாய்ச்சுவதில் எதிர்பாராத நெருக்கடி நிலையை எதிர் கொள்ள வேண்டி இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அளவுக்கதிகமான வெப்ப நிலை வீச்சு காணப்படுவதால் வெப்பநிலையால் ஏற்படக் கூடிய விலங்கு விசர்நோய் ஏற்படும் ஏதுநிலை காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பொதுமக்களைப் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாக்கும் தொற்று நோய்கள் பரவத் தொடங்கி இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (வ-11)



கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.விக்னேஸ்வரன் சென்றிருந்தார். அவ்வேளை அங்குள்ள சமையலறைக்குச் சென்று முதியோர்களுக்குச் சமைக்கப்பட்ட உணவை அவர் பார்வையிட்டார். (ஒ-51)

# வைக்கோல் பட்டடை விஷமிகளால் தீக்கிரை

வலி. வடக்கு.ஏப். 17
விஷமிகள் இரண்டாவது தடவையாகவும் வைக்கோல் பட்டடைக்குத் தீயிட்டமையால் ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான வைக்கோல் எரிந்து சாம்பலாகிய சம்பவம் ஒன்று புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. வருடப் பிறப்பன்று இரவு ஈவினையைச் சேர்ந்த தர்மலிங்கம் ஜெகதீஸ்வர் என்பவரின் வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏற்கெனவே குறித்த நபர் கொழும்பு சென்றிருந்த வேளையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் வைக்கோல் பட்டடைக்கு விஷமிகள் தீயிட்டதில் இரண்டு வைக்கோல் பட்டடைகள் எரிந்து சாம்பலாகி இருந்தன.

தற்போது மீண்டும் வைக்கோல் பட்டடைக்குத் தீயிட்டமையால் ஒரு வைக்கோல் பட்டடை முற்றுமுழுதாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் மற்றும் ஒரு பட்டடையும் சிறிது எரிந்த நிலையில் அணைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

## மைத்துனரின் தாக்குதலில் அவரது அண்ணியின் கை முறிந்தது

வலி.வடக்கு. ஏப்.17
குடிபோதையில் வந்த மைத்துனர் தாக்கியதில் அவரது அண்ணியின் கை முறிவடைந்ததால் அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று ஏழாலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தில் விமலநாதன் ரஜிதா (வயது- 25) என்பவரின் கையில் முறிவு ஏற்பட்டுள்ளது. இது குறித்து வைத்தியசாலைப் பொலிஸார் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். (வ-86)

## வீடுகளில் தவறுதலாக விழுந்த இருவர் காயம்

தென்மராட்சி, ஏப்.17
தமது வீடுகளில் தங்கியிருந்த வேளை தவறுதலாக வீழ்ந்து காயங்களுக்கு உள்ளானதாகத் தெரிவித்து இருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவ்விருவதும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியைச் சேர்ந்த பிரான்சிஸ் மகிந்தன் (வயது-22), சாவகச்சேரி ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த சண்முகவடி வேலு அம்மணி (வயது-60) ஆகியோரே இவ்விதம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் ஆவர். (வ-ஓ)

# தண்ணீரை பெறுவதில் சிக்கலுக்குள்ளாகும் குருநகர் தொடர்மாடிக் குடியிருப்பாளர்கள்

கொழும்புத்துறை, ஏப்.17
குருநகர் ஐந்து அடுக்குகளைக் கொண்ட தொடர் மாடிக் கட்டடக் குடியிருப்பாளர்கள் குடிதண்ணீர் மற்றும் பாவனை நீரைப் பெறுவதில் தாம் பல இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

160 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் குறித்த தொடர் மாடிக்கு உரிய தண்ணீர்த் தாங்கி வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் மாடிக் குடியிருப்பாளர்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீர், குளிப்பதற்கான பாவனைத் தண்ணீர் என்பவற்றைப் படிகளுடாகத் தூக்கிச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த மாடிக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், அங்கிருக்கும் தண்ணீர்த் தாங்கி திருத்தம் செய்யப்படாமையாலேயே தண்ணீரைப் பெறுவதில் இவ்விதம் இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர். அதேவேளை குறித்த பகுதியில் உள்ள 3 பொதுக் கிணறுகள் உவர் நீராக இருந்த போதிலும் மாடிகளுக்கு பிளாஸ்ரிக் தாங்கிகள் வைக்கப்பட்டு முன்னர் நீர் நிரப்பப்பட்டு வந்ததாகவும் புனரமைப்புக்காக நிறுத்தப்பட்ட தண்ணீர் விநியோகம் மீண்டும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



தண்ணீரை எடுத்துச் செல்லும் குருநகர் மாடிக் கட்டட குடியிருப்பாளர்கள்

யாழ்.மாநகர சபையின் பிரதான நீர்த் தாங்கியில் இருந்து விநியோகிக்கப்பட்டு வந்த குடிதண்ணீர் இந்தப் பகுதியில் இருந்த தண்ணீர்த் தாங்கிக்கு நிரப்பப்பட்டு குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

குறித்த பகுதியில் யாழ்.மாநகர சபையால் அமைக்கப்பட்டுள்ள நிலத்தடி குழாய் நீர் கம்பங்கள் 3 இல் இருந்தே தற்போது 160 இற்கு மேற்பட்ட குடும்பங்களும் குடி தண்ணீரைப் பெற்று வருகின்றன. குறிப்பிட்ட விநியோக நேரத்துக்குள் தமது நீர்த்தேவையைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-135)

## தாயின் சாவு வீட்டுக்குச் சென்ற தருணம் பார்த்து திருடர் கைவரிசை

தென்மராட்சி, ஏப்.17
தாயின் சாவு வீட்டில் தங்கியிருந்த தருணத்தை அவதானித்து அவரது மகளின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான (40 பவுண்) நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீசாலை வடக்கு வரணி வீதியில் இடம்பெற்றுள்ளது.

சனிக்கிழமை மாலை தமது தாய் இறந்ததால் சுமார் 100 மீற்றர் தூரத்துக்கப்பால் உள்ள அவரது மகள் தமது குடும்பத்தினருடன் சாவு வீட்டில் அன்றிரவு தங்கியிருந்தனர்.

அந்த வேளையில் அதிகாலை வேளை மகளின் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 40 பவுண் தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# கீரிமலை - மாவிட்டபுரம்வரை பஸ் சேவை நடத்தப்படாததால் மக்கள் சிரமம்

வலி.வடக்கு. ஏப்.17
கீரிமலை- மாவிட்டபுரம் பஸ் சேவை நடைபெறாமையினால் பொது மக்கள் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த காலங்களில் காங்கேசன்துறை வீதி வழியாக கீரிமலை வரை பஸ் சேவைகள் நடத்தப்பட்டு வந்தன.

மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்படாத நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வீதி வழியாகப் பயணிக்கும் பஸ்களுக்குத் தெல்லிப்பழைவரை போக்குவரத்து ஆணைக்குழுவால் அனுமதி அளிக்கப்பட்டு இரண்டாம் கட்டமாக மாவிட்டபுரம்வரை செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது கீரிமலைவரை மக்கள் மீளக்குடியேற அனு மதிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகிய போதிலும் கீரிமலைவரை பஸ்கள் செல்வதற்கான அனுமதியை போக்குவரத்து ஆணைக்குழு வழங்க மறுப்பதால் மாவிட்டபுரம் வரும் ஒருவர் கீரிமலை செல்ல வேண்டுமாக இருந்தால் மீண்டும் சுமார் 10-12 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. சுன்னாகத்துக்குச் சென்று அங்கிருந்து மீண்டும் அளவெட்டி ஊடாகச் செல்லும் பஸ்களில் கீரிமலைக்குச் செல்ல வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது.

மாவிட்டபுரத்தில் இருந்து கீரிமலை வரையான சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்துக்கு பத்து ரூபா பயணக்கட்டணத்துடன் பயணம் செய்யத்தக்க வாய்ப்பிருந்தும் அந்த மார்க்கத்தில் பஸ் சேவை அனுமதிக்கப்படாததால் சுமார் இருபத்தைந்து ரூபாவுக்கும் மேல் செலவு செய்ய வேண்டியுள்ளதுடன் நேரத்தையும் விரம் செய்ய வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. (வ-86)

## கருத்துக் கணிப்புகளை வெளியிட வேண்டாம்

*தேர்தல் ஆணையம் அறிவிப்பு*

புதுடில்லி,ஏப் .17

பத்திரிகை மற்றும் இதர ஊடகங்களும் தேர்தல் குறித்த கருத்துக் கணிப்புகளை வெளியிட வேண்டாம் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், 4 கட்டத்தேர்தல் நடந்து முடிந்துள்ள நிலையில், இது வரை நடந்த வாக்குப்பதிவுகளை அடிப்படை யாக வைத்து கருத்துக் கணிப்பு ஒன்றைச் சில ஊடகங்கள் வெளியிட்டன.

இது குறித்து முறைப்பாடுகள் வந்துள்ளன. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, பத்திரிகை மற்றும் இதர ஊடகங்களும் தேர்தல் குறித்த கருத்துக் கணிப்புகளை வெளியிட வேண்டாம். தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெற இது உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



வேலூர், இறையன்காட்டில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற தமிழக முதல்வர் ஜெயலலிதா, தொண்டர்களைப் பார்த்து உற்சாகமாகக் கையசைக்கிறார். (த)

## பயணிகள் ரயில் ஏரியில் பாய்ந்தது

*அசாமில் 50 பேர் காயம்*

குவகாத்தி,ஏப் .17

அசாம் மாநிலம் மோரிகான் மாவட்டத்தில் பயணிகள் ரயில் ஒன்று தடம்புரண்டு ஏரியில் விழுந்ததில்.

அதில் பயணம் செய்த 50 பயணிகள் காயமடைந்தனர்.

திமாப்பூர் - காமாக்யா ரயில் நள்ளிரவு 2 மணியளவில், ஏரி மீது அமைக்கப்பட்ட ரயில் பாலத்தில் சென்று கொண்டிருந்தபோது திடீரெனத் தடம் புரண்டு ஏரியில் விழுந்தது.

இதில், 3 பெட்டிகள் முழுவதுமாக ஏரியில் மூழ்கிவிட்டது.

சம்பவம் குறித்துத் தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் உடனடியாக விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். மீட்கப்பட்ட 50 பேரில் 17 பேர் படுகாயங்களுடன் குவகாத்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த)

## காங்கிரஸின் விரோதச் செயலை கருணாநிதி ஏற்றுக்கொள்கிறாரா?

*ஜி.ராமகிருஷ்ணன் கேள்வி*

சென்னை.ஏப். 17

காங்கிரஸ் கட்சியின் அனைத்து மக்கள் விரோதச் செயல்களையும் கருணாநிதி ஏற்றுக் கொள்கிறாரா? எனக் கேள்வி எழுப்பினார் ஜி. ராமகிருஷ்ணன்.

தென்காசி மக்களவைத் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பொ.லிங்கத்தை ஆதரித்து, திருவில்லிபுத்தூரில் பிரசாரம் செய்த ஜி.ராமகிருஷ்ணன் பேசியதாவது:-

பா.ஜ.க தேர்தல் அறிக்கையில் அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 400 ஆண்டுகள் பழமையான பாபர் மசூதியை இடித்துவிட்டு, 22 ஆண்டுகளுக்குப் பின்னரும் கோயில் கட்டப்போவதாக அறிவித்துள்ளார்கள். தற்போது மீண்டும் தேர்தல் அறிக்கையில் அயோத்தியை குறிப்பிட்டுள்ளது மத வெறியை உருவாக்கும் செயல்.

அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி அவரது படத்துக்கு மோடி மாலை அணிவித்துள்ளார். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து, பா.ஜ.க தேர்தல் அறிக்கையில் இல்லை. காங்கிரஸ் கூட்டணியில் 10 ஆண்டுகள் திமுக. இடம் பெற்றிருந்தது. கடைசி 6 மாதம் வெளியே வந்தவர்கள் இப்போது, காங்கிரஸ் மன்னிப்புக் கேட்டால் தேர்தலில் ஆதரவு அளிப்போம் என்கிறார் கருணாநிதி. காங்கிரஸ் கட்சியின் அனைத்து மக்கள் விரோதச் செயல்களையும் கருணாநிதி ஏற்றுக்கொள்கிறாரா?-என்றார். (த)

**கடைசி 6 மாதம் வெளியே வந்தவர்கள் இப்போது, காங்கிரஸ் மன்னிப்புக் கேட்டால் தேர்தலில் ஆதரவு அளிப்போம் என்கிறார் கருணாநிதி.**

# மோடி பிரதமரானால் இந்தியாவுக்கு ஆபத்து

*சல்மான் ருஷ்டி, தீபா மேத்தா கருத்து*

புதுடில்லி,ஏப் .17

நரேந்திர மோடி பிரதமரானால், அது இந்தியாவின் எதிர்காலத்துக்குக் கெடுதல் ஏற்படுத்தும் என்று எழுத்தாளர் சல்மான் ருஷ்டி, திரைப்பட இயக்குநர் தீபா மேத்தா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'தி கார்டியன்' பத்திரிகைக்கு அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

2002 ஆம் ஆண்டு குஜராத்தில் நிகழ்ந்த கலவரத்தின் போது நரேந்திர மோடி தலைமையிலான அரசின் செயல்பாட்டை யாரும் மறந்து விட முடியாது. கொலை, கொள்ளை, வன்முறைக்கு முஸ்லிம்கள் இலக்காகினர். 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.



தீபா மேத்தாவுடன் சல்மான் ருஷ்டி

கலவரம் தொடர்பாக மோடி மன்னிப்புக் கேட்கவில்லை. அந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்கவுமில்லை. இத்தகைய நடத்தையையும், அரசியல் நெறிமுறைகளையும் கொண்டிருக்கும் மோடி, இந்தியாவின் மதச்சார்பற்ற அரசியல் சாசனச் சட்ட வழிகாட்டுதலுக்கு ஒத்துப் போகமாட்டார் என்று தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடிதத்தில் டர்னர் பரிசு வென்ற சிற்பக் கலைஞர் அனீஷ் கபூர், சல்மான் ருஷ்டி, கல்வியாளர் ஹோமி கே.பாபா, தீபா மேத்தா, புகைப்படக் கலைஞர் தயானிதா சிங், சிற்பக் கலைஞர் விவான் சுந்தரம், திரைப்பட இயக்குநர்கள் குமார் சஹானி, எம்.கே. ரய்னா, பொருளாதார நிபுணர்கள் ஜெயத்தி கோஷ், பிரபாத் பட்னாயக், டெல்லி தேசிய நாடகப் பயிற்சி மையத்தைச் சேர்ந்த அனுராதா கபூர், லண்டன் பொருளாதார கல்வி மையப் பேராசிரியர் சேத்தன் பட் உள்ளிட்ட 21 பிரமுகர்கள் கையெழுத்திட்டுள்ளனர். (த)

## பா.ஜ.க வெற்றி பெறப் பாடுபடுமாறு ஆதரவாளர்களுக்கு அழகிரி உத்தரவு

மதுரை,ஏப் .17

பா.ஜ.க தலைமையிலான கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறப் பாடுபடவேண்டும் என்று தனது ஆதரவாளர்களுக்கு முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தி.மு.வில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி மதுரையில் நேற்று முன்தினம் இரகசியக் கூட்டம் நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் கூட்டத்தில் அழகிரி பேசியது குறித்து அவரது ஆதரவாளர்கள் கூறியதாவது:-

எந்தத் தவறும் செய்யாத மதுரை மாநகர் தி.மு.க நிர்வாகிகளைக் கூண்டோடு கலைத்தனர். அவர்களுக்காக தி.மு.க., தலைவர் கருணாநிதியிடம் நியாயம் கேட்டேன். என் மீது அபாண்டமான பழி போட்டனர். கட்சியையும், கட்சி தலைவரையும் மீட்டெடுப்போம். அதற்கு இனி நாம் தயாராக வேண்டும். என் ஆதரவாளர்களான, உங்களுக்காக, மன்னிப்பு கேட்கவும் தயார் என்றேன். ஆனால், அவர்கள் இதை ஏற்கவில்லை. திட்டமிட்டும், சதி செய்தும், நம்மைப் பழி வாங்கி விட்டனர். நீதி கேட்டு நெடும்பயணம் செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது.

தேர்தலில் நம் ஆதரவாளர்கள் எல்லோரிடம் நான் தனிப்பட்ட முறையில் கருத்து கேட்டேன். அதன் அடிப்படையில் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியை ஆதரிப்பது என, முடிவெடுக்கப்பட்டுள்ளது. இரவோடு இரவாக வைகோ போன்றவர்களுக்குச் சாதகமாக உடனே தேர்தல் பணியாற்ற வேண்டும். மதுரையில் தே.மு.தி.க வேட்பாளரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

தமிழகத்தில் பா.ஜ.க தலைமையிலான கூட்டணி கட்சிகளை ஆதரிப்போம். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நம் ஆதரவால் தான் தி.மு.க. தென் மண்டலத்தில் 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். தற்போது தென் மண்டலத்தில் தி.மு.க வேட்பாளர்கள் தோல்வி அடையும் போது நம்முடைய சக்தி தெரியும்.



மு.க.அழகிரி

இவ்வாறு அழகிரி பேசியதாக, அவரது ஆதரவாளர்கள் கூறினர். மேலும் விரைவில் அழகிரி-மோடி சந்திப்பு நடக்கவுள்ளதாக அழகிரியின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர். (த)

## பிரியங்காவை விமர்சிப்பதா?

*சுப்பிரமணியசுவாமி வீடு முன் மறியல்*

புதுடில்லி,ஏப். 17

பிரியங்கா காந்தி குறித்து விமர்சித்த பா.ஜ.க மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி வீட்டின் முன் காங்கிரஸார் மறியலில் ஈடுபட்டனர்.

மதியம் மூன்று மணி அளவில் சுப்பிரமணிய சுவாமியின் டில்லி வீட்டின் முன்பு காங்கிரஸார் கூடினர். அவர்கள் பா.ஜ.க மற்றும் சுப்பிரமணிய சுவாமிக்கு எதிரான கோஷமிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் கூறுகையில், சுப்பிரமணிய சுவாமி கூறியது தனிப்பட்ட தலைவர் மீதானது அல்ல. தவிர ஓர் அரசியல் குடும்பத்தையே அவர் விமர்சித்துள்ளார். அவர் கூறியது மிகவும் தவறு எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சுப்பிரமணிய சுவாமி மீது தேர்தல் ஆணையத்திலும் முறைப்பாடு அளிக்க இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

நரேந்திர மோடியை எதிர்த்து வாரணாசித் தொகுதியில் பிரியங்கா போட்டியிட இருந்ததாகவும் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் அதனைத் தடுத்துவிட்டனர் என்றும் நாளிதழ்களில் அண்மையில் செய்திகள் வெளியாகின. இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த சுப்பிரமணியசுவாமி, பிரியங்கா காந்தி மது அருந்திய பிறகு நிதானத்தை இழப்பதாகவும் அவர் எடுத்த முடிவு சரியானதே எனவும் விமர்சனம் செய்திருந்தார்.

இந்த விவகாரத்தில் பா.ஜ.க மௌனம் காத்து வருகிறது. பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியின் மனைவி மீது ராகுல் காந்தி விமர்சனம் செய்ததற்குப் பதிலடியாகவே இது கருதப்படுகிறது. (த)

# உக்ரைன் கிழக்குப் பிராந்தியத்தையும் கைப்பற்ற ரஷ்ய ஆதரவாளர்கள் முயற்சி

கிவி.ஏப் 17
கிரைமியா பிராந்தியத்தைத் தமது நாட்டுடன் இணைத்துக்கொண்ட பின்னரும் ரஷ்ய ஆதரவாளர்கள் தொடர்ந்தும் உக்ரைனை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

க்ரமடோஸ்க் விமானத் தளத்தை ரஷ்ய ஆதரவாளர்கள் கைப்பற்றியுள்ளதை, தமது ஜெட் விமானம் பதிவு செய்துள்ளதாக உக்ரைனின் பதில் ஜனாதிபதி ஒலெக்ஸாண்டர் டர்ச்சினோவ் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள சுமார் 10 நகரங்களின் அரச கட்டடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தம்வசப்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




இராணுவ வாகனங்களில் இராணுவத்தினரும் ஆதரவாளர்களும்

உக்ரைனின் எல்லைப் பகுதியில் ரஷ்ய ஆதரவாளர்கள் நிலைகொண்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் இவ்வாறான நடவடிக்கைகளை ரஷ்யா தொடர்ந்தும் மேற்கொள்ளும் பட்சத்தில், ரஷ்யா மீது மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்கப்படும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை இரண்டு இராணுவ விமானங்களில் வருகைதந்த சுமார் 200 ரஷ்ய ஆதரவாளர்கள் க்ரமடோஸ்க் விமானத் தளத்தில் நிலைகொண்டுள்ளதுடன், அங்கு மோதல்கள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் அச்சம் வெளியிட்டுள்ளன. (கு)

## 100 பள்ளி மாணவிகள் நைஜீரியாவில் கடத்தல்



அபுஜா.ஏப் 17
நைஜீரியாவில் சுமார் 100 பாடசாலை மாணவிகள் அடையாளந்தெரியாத குழுவினரால் கடத்தப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் வட கிழக்கு பிராந்தியத்திலுள்ள பாடசாலையொன்றிலேயே இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜீரியாவில் அண்மைக் காலங்களாகத் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகரித்து வருவதுடன் நேற்று முன்தினம் அபுஜா நகரில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 70 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

எவ்வாறாயினும் இந்தக் கடத்தலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளிவரவில்லை என்பதுடன் பொக்கோ ஹராம் குழுவினரே இதனை மேற்கொண்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (கு)

## நடுவானில் விமானக் கதவை திறப்பதற்கு முயன்றார் பயணி

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் இருந்து சிகாகோசர்கரமென்டோவுக்கு பயணிகள் மற்றும், விமான ஊழியர்கள் உட்பட 139 பேருடன் பயணிகள் விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது.

விமானம் நடுவானில் பறந்து கொண்டி ருந்த போது விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் திடீரென விமானத்தின் கதவைத் திறக்க முயன்றார். அதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த மற்றப் பயணிகள் கத வைத் திறக்க விடாமல் தடுத்து அவரை உள்ளே இழுத்தனர்.

இதனையடுத்து ஓமேகா விமான நிலையத்தில் விமானம் அவசரமாகத் தரை இறக்கப்பட்டு அந்தப் பயணி வெளியேற்றப்பட்டார். பின்னர் விமானம் புறப்பட்டு சென்றது.

ஒருவேளை விமானத்தின் கதவை அவர் திறந்திருந்தால், பெரும் விபத்து ஏற்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## 470 பயணிகளுடன் தென்கொரியாவில் கவிழ்ந்தது கப்பல்

சியோல், ஏப் 17
தென் கொரியாவின் தென் கடற்கரைக்கு அருகே 470 பயணிகளை ஏற்றி சென்ற கப்பல் கவிழ்ந்ததை அடுத்து அதை மீட்கும் பணியில் கப்பல்களும் ஹெலிகளும் ஈடுபட்டு வருகின்றன.

இதுவரை இரண்டு உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பயணிகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. அதில் பலர் அந்த கப்பலின் ஜன்னல்கள் வழியாக மீட்கப்பட்டு வருகின்றனர். மேலும் சிலர் கப்பலிலிருந்து கடலில் குதித்துள்ளனர். ஆனால் நூற்றுக்கும் அதிக மான பயணிகள் கதி குறித்து இதுவரை எந்தத் தகவல்களும் இல்லை.

பயணித்தவர்களில் பெரும்பாலானோர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள். ஜெஜு என்ற ஒரு சுற்றுலாத் தீவுக்கு அவர்கள் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

மோசமான காலநிலை நிலவுவதாகச் செய்திகள் இருந்த நிலையில், ஏன் கப்பல் பயணிக்க அனுமதி தரப்பட்டது என்று பெற்றோர் கேள்வி எழுப்புகின்றனர். (கு)

## ஜோர்தான் தூதுவர் கடத்தல்

திரிபோலி.ஏப் 17
லிபியாவில் ஜோர்தான் நாட்டுத் தூதர் பாவாஸ் ஐடனை மர்ம நபர்கள் கடத்திச் சென்றனர்.

இது குறித்து லிபிய அரசு செய்தித் தொடர்பாளர் லாசெளட் கூறுகையில், திரிபோலியில் செவ்வாய்க்கிழமை பாவாஸ் ஐடன் சென்ற வாகனத்தின் மீது 2 கார்களில் வந்த மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். பின்னர் அவரைக் கடத்திச் சென்றுவிட்டனர். இந்தத் தாக்குதலில் அவரது கார் ஓட்டுநர் காயம் அடைந்தார்" என்றார்.

லிபியாவில் தன் மீதும், தனது குடும்ப உறுப்பினர்கள் மீதும் தாக்குதல் நடத்தப் படுவதாகக் கூறி பிரதமர் அப்துல்லா அல்தானி, தனது பதவியை 2 நாள்களுக்கு முன்பு ராஜிநாமா செய்தார். இதனைத் தொடர்ந்து இந்த கடத்தல் சம்பவம் நடைபெற் றுள்ளது. (கு)

## விமானத்தை தேடும் நீர்மூழ்கி திரும்பியது

பேர்த்.ஏப் 17
காணாமற்போன மலேசிய விமானத்தின் சிதிலங்களைத் தேடி இந்து சமுத்திரத்தின் ஆழத்துக்கு அனுப்பப்பட்ட சிறிய நீர்மூழ்கி இரண்டாவது தடவையாகவும் மேலே திரும்பி வந்துவிட்டது.


இந்த ரோபோ- தானியங்கி நீர்மூழ்கி கடந்த திங்களன்று முதன்முறையாக அனுப்பப்பட்டது.

எனினும், அப்போது அதனால் இயங்கக்கூடிய சுமார் 4,500 மீற்றர் அதிகபட்ச ஆழத்தை அடைந்துவிட்டதால் இடைநடுவில் தனது பயணத்தை முடித்துக் கொண்டு நீர்மூழ்கி திரும்பியிருந்தது.

இந்த ஆளில்லா நீர்மூழ்கியில் ஏதோ இனம்புரியாத தொழில்நுட்பப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும், அது மீண்டும் கடலின் ஆழத்துக்கு அனுப்பப்படும் என்றும் தேடுதல் பணிகளை ஒருங்கிணைத்துவரும் ஆஸ்திரேலிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

கப்பலில் இருந்து ஆரம்ப கட்டமாகக் கிடைத்த தகவல்களிலிருந்து எந்தவிதமான குறிப்பிடத்தக்க சமிக்ஞைகளும் கிடைக்கவில்லை என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த வாரம் மேற்கு ஆஸ்திரேலிய கடற்பரப்பில் கிடைத்த சமிக்ஞைகள் உண்மையில் விமானத்தின் கறுப்புப் பெட்டியிலிருந்து தான் கிடைத்தனவா என்பது தொடர்பில் தெளிவில்லை. (கு)



நேற்று ஆஸ்திரேலியாவை அடைந்த பிரிட்டன் இளவரசர் வில்லியம் தம்பதியினரை சிட்னி விமான நிலையத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு வரவேற்றனர். (கு)

## கும்பாபிஷேகம்

பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீசட்டநாதர் சிவன் கோயிலில் சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜப் பெருமானுக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி, முற்பகல் 11 மணிக்கு நிறைவடையும். பிரதமகுரு பிரம்மஸ்ரீ -தாணு - வாசுதேவ சிவாச்சாரியார் தலைமையில் கிரியைகள் நடைபெறும். (வ)

## பரிசுத்த வார வழிபாடுகள்

குருநகர், ஏப்.17

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறவுள்ள பரிசுத்த வார வழிபாடுகள் பற்றி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா.றோய் பேடினண்ட் அடிகளார் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, பெரிய வியாழன் தினமான இன்று மாலை 5.30 மணிக்கு கால் கழுவும் சடங்கும் நடைபெறும். நாளை பெரிய வெள்ளியன்று காலை 6 மணிக்கு சிலுவைப் பாதையும், மாலை 5 மணிக்கு இயேசுவின் திருப்பாடுகள் வழிபாடும் நடைபெறும். நாளை மறுதினம் சனிக்கிழமை நள்ளிரவு 11.30 மணிக்கு திருவிழிப்பு ஆராதனையும், மறுநாள் காலை 6.15 மணிக்கு உயிர்ப்பு ஞாயிறு திருப்பலியும் நடைபெறும். (வ-51)

* * *

நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம், நாவாந்துறை பரலோக மாதா ஆலயம் ஆகியவைகளில் நடைபெறவுள்ள பரிசுத்த வார வழிபாடுகள் தொடர்பாக நாவாந்துறைப் பங்குத் தந்தை வணபிதா பா.பி.இராஜசிங்கம் அடிகளார் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

பெரிய வியாழன் தினமான இன்று மாலை 5 மணிக்கு கால் கழுவும் சடங்கும், நாளை பெரிய வெள்ளி தினத்தன்று காலை 6.30 மணிக்கு திருச்சிலுவைப் பாதை யும் மாலை 4 மணிக்கு இயேசுவின் பாடுகள் பற்றிய வழிபாடும், சனிக்கிழமை நள்ளிரவு 11.30 மணிக்கு திருவிழிப்புத் திருப்பலி நிகழ்வும் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெறும். உயிர்ப்பு ஞாயிறு தினமான எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருப்பலி நாவாந்துறை பரலோகமாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். (வ-51)

* * *

குருநகர் புனித யாகப்பர் ஆலயம், குருநகர் புதுமை மாதா ஆலயம் ஆகியவைகளில் நடைபெறவுள்ள பரிசுத்த வார வழிபாடுகள் பற்றி குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண. பிதா. றோ. நேசராஜா அடிகளார் தகவல்களை வெளியிட்டுள்ளார். இன்றும், நாளையும் மாலை 5மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் போர்டிகோ மண்டபத்தில் வழிபாடுகள் நடைபெறும்.

மறுநாள் சனிக்கிழமை நள்ளிரவு11.30மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருவிழிப்பு பூசை நடைபெறும். எதிர்வரும் 20ஆம் திகதி உயிர்ப்பு ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் பூசை நடைபெறும்.

இதேவேளை அன்று காலை 7 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் பூசை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து உயிர்த்த இயேசுவின் திருச்சொரூப பவனி இடம்பெறும். (வ-51)

## சதாவதானி கதிரவேற்பிள்ளையின் குருபூசையையொட்டிப் போட்டிகள்

நெல்லியடி, ஏப்.17

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளையின் குருபூசையையொட்டி பேச்சுப்போட்டி, மனனப் போட்டி, பண்ணிசைப் போட்டி, பொது அறிவுப் போட்டி என்பன நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் மற்றும் இலக்கங்கள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக நிலையத் தலைவர் ப.சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஓ)


குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பாஸ்போட் பெற்றுத்தரும் சேவையும் வழங்கப்படும்.
*Conditions apply

ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818
Skyline

ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து
செல்வி ஸ்ரீஜனனி ஸ்ரீபிருந்திரன் 17.04.2014
5 Wish you a Happy Birthday



சுயமெனும் ஆண்டிது, வெற்றியில்
ஸ்ரீஜனனி நயமுறு கல்வி, கலைநிறை
ஒழுக்கம் சுயமெனச் சிந்திக்கும் திறன்
இனி(ய) அவள்பெற வயமுணர்ந்து
ஒற்றுமை, இணைவும் வேண்டுவள்
மனமொத்துணர்வுடன் மனையிடை
மகிழ்ந்திட பிறந்தநாளில்
பெருமையில் வாழ்த்துவோம்.
'வாழ்க வளமுடன்'
தந்தை தாய்
'வசந்தா வாசா',
லவ் லேன், உடுவில்.

பழைய வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு
கோப்பாய் பழைய வீதியில் இருபாலைச் சந்தியில் இருந்து 300m தூரத்தில் 15 பரப்பு $12\frac{1}{2}$ குழி காணி பழைய வீட்டுடன் சேர்த்து விற்பனைக்குண்டு.
முழுமையாகவும், பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 011 259 1720 (46793) (4.6.3)

தேவை
நகர பகுதியில் வசிக்கும் 2014, பரீட்சை எடுக்கும் மாணவனுக்கு கணக்கீடு, பொருளியல் பாடங்கள் வீட்டில் வந்து கற்பிக்கும் ஆசிரியர் தேவை.
(46791) (12.3.6)
தொடர்பு: 077 706 2068

காணி விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு மணியகாரன் (ஒழுங்கை) லேனில் கிணற்றுடன் சுற்றுமதில் கட்டப்பட்ட $3\frac{3}{4}$ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
(46794) (12.3.6)
தொடர்பு: 077 554 6523

உடன் தேவை
21, சட்டநாதர் வீதி, நல்லூரில் இயங்கி வரும் அச்சகம் ஒன்றிற்கு அச்சக வேலைகளில் அனுபவம் உள்ள Coreldrow, Photoshop, Pagemaker.வேலைகள் செய்யக்கூடிய கணினி அறிவுடைய ஆள்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.
(46795) (12.3.6)
தொடர்பு: 077 716 5589

பொன்விழா வாழ்த்துக்கள்



Best Wishes
இன்று 17.04.2014 வியாழக்கிழமை
50ஆவது திருமண ஆண்டைக்
கொண்டாடும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த
துரைசாமி சண்முகநாதன்
(இளைப்பாறிய அதிபர்)
திருமதி சண்முகநாதன் இராசம்மா
(இளைப்பாறிய ஆசிரியை)
தம்பதிகளை இன்றுபோல் என்றும் சிறப்போடும் ஆரோக்கியத்தோடும் பல்லாண்டு காலம் வாழ வேரற்கேணி கந்தன் ஆசி வேண்டி மனதார வாழ்த்துபவர்கள்:
து.பரோதரன் (பெறாமகன்)
திருமதி ப.சகுந்தலா (மருமகள்)
தேவி
சர்மிளா-செல்வநாதன் (பேர்த்தி)
பேரப்பிள்ளைகள்- சஞ்ஜீவ்-மது, பிரவீன்
பூட்டப்பிள்ளைகள்.
பிரான்ஸ்
(46752)(7.6.3)

இந்த வார இதழில்...



'சாயியே சரணம்'
(பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர்)

- பெண்களை வன்புணர்வு செய்யும் தமிழ் சினிமா
- விளங்க முடியாத அதிசயப் புத்தகம்




......இறுதிப்போரில் தப்பித்த தளபதி ராம் தலைமையில் புலிகள் ஒன்றிணைகிறார்கள் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் பின்னர் அவர் கே.பி.யின் துணையோடு படையினரால் பிடிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. அதன் பின்னர் மிக அண்மையில் தடுப்பிலிருந்த புலிகளின் திருமலை மாவட்டத் தளபதி பதுமன் விடுவிக்கப்பட்டு அவர் தலைமையில் புலிகளை உருவாக்க அரசுபடாதபாடுபட்டது. ஆயினும் இந்தக் கதை வெளி வந்தவுடனேயே பதுமனின் சுயரூபத்தை ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதால் ஒருபோதும் அவரை தங்களுடைய தலைவராக தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பது அரசுக்கு புரிந்தது. எனவே தெரியாத புதிய முகம் ஒன்றை புலிகளின் புதிய தலைவராக காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த நிலையில்தான் இந்த வருடம் மார்ச் 11 ஆம் திகதி கோபி என்பவர் தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் இவர்தான் புலிகளின் புதிய தலைவர் என்று..........

கணினி விற்பனைக்கு
ஆசிரியரின் பாவனையிலுள்ள கணினி விற்பனைக்குண்டு
தொடர்பு: 41/32, ஆஸ்பத்திரிமுன் ஒழுங்கை,நாயன்மார்கட்டு.
021 222 8859/077 496 8391
(46796)

தொழிற் பயிற்சிகள்

➢ Mobile Phone Repairing
சகல Phone களின் Hardware, Software கள் செயன் முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
(காலம் : 3 மாதம்)

➢ Electronics
றேடியோ, ரெலிவிசன் DVD மற்றும், இலத்திரனியல் பொருள்கள் திருத்தம்.
(காலம் : 10 மாதம்)

➢ Air Conditioning
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை, பராமரிக்கும் முறை பயிற்சியளிக்கப்படும்.
(காலம் : 6 மாதம்)

➢ Electrical Wiring
வீட்டு மின்சுற்று வேலைகளை Single Phase Three Phase Wiring வீட்டு மின்சார பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
(காலம் : 3 மாதம்)

➢ Rewinding
மின்விசிறி Motor, Transformer, Three Phase Motor கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
(காலம் : 6 மாதம்)

பயிற்சிகள் ஆரம்பம் 20.04.2014
மேலதிக விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
No. 23, பலாலி வீதி (அப்பலோ ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம். T.P : 077 824 9949
O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்.
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன்,
நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.
(C/13639) (7.6.3)

# வடக்கில் (யாழ் - கிளிநொச்சி) குடிநீர்த் தட்டுப்பாடும் சுகாதாரத் தேவைப்பாடும் மக்கள் அவசியம் தெரிய வேண்டிய தகவல்கள்



யாழ் குடாநாட்டில் போதிய தரைக் கீழ் நீர் வளம் இல்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.




- ✔ நிலத்தடி நீரை நம்பி உருவாக்கிய பல நீர் வழங்கல் திட்டங்கள் நீர் தரம், குறிப்பாக உப்பாதல் மற்றும் நீரின்மை பிரச்சினையால் கைவிடப்பட்டுள்ளன. உதாரணம்:- நாரந்தனை, புங்குடுதீவு காரைநகர், வட்டு தெற்கு முதலி கோவிலடி மற்றும் பழைய நீர் உள்ளெடுக்கும் நிலையங்களாகிய கட்டுடை வாதரவத்தை கண்பொல கந்தரோடை, நவாலி ஆகிய திட்டங்கள் இதற்குச் சான்றாகும்.
- ✔ நிலக்கீழ் நீர் போதாமை காரணமாக தற்போதைய நீர் வழங்கல் திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நீர் விநியோகத்தைக் கொண்டுள்ளன. இவை பொதுமக்களின் தேவைக்கேற்ப விஸ்தரிக்க முடியாதுள்ளது. இதனால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். (மட்டுப்படுத்தப்பட்ட ஒரு மணித்தியால நீர் விநியோகத்தை வரிசையில் நின்று பொதுக் குழாய் மற்றும் பவுசர்களில் பெற்றுக் கொள்கின்றனர்.

**யாழ் குடாநாட்டில் தரைக்கீழ் நீரின்**

- ❖ நைற்றேற் அளவு அபாயகரமான அளவு அதிகரித்துள்ளது
- ❖ பக்ரீரியாக்களின் அளவு அபாயகரமான அளவு அதிகரித்துள்ளது
- ❖ உவர்த்தன்மை அதிகரித்து வருகின்றது

இதனால் புற்று நோய், நெருப்புக் காய்ச்சல் முதலான பயங்கர நோய்கள் மக்களை வாட்டி வதைக்கத் தொடங்விட்டன. இதன் மூலம் எதிர்காலத்தில் இறப்புக்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

## இந்த ஆபத்தில் இருந்து விடுபடுவதற்கு வழி இல்லையா?



மாகாண ரீதியில் பாதுகாப்பான குழாய் மூலமான குடி நீர் வழங்கலை வட மாகாணம் 06 % மட்டுமே கொண்டுள்ளது. இதேவேளை, நாட்டின் சராசரி 45 % ஆகும். சர்வதேச, தேசிய இலக்கானது பாதுகாப்பான குடி நீர் மற்றும் சுகாதாரம் ஒவ்வொன்றும் 85% 2015 இலும், 100% 2025 இலும் எட்டப்பட வேண்டும் என்பதாகும்.



யாழ் கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் மக்களுக்கு பாதுகாப்பான குடி நீரை வழங்குவதுடன் சுகாதாரத்தை மேம்படுத்தி சர்வதேச, தேசிய ரீதியான இலக்குகளையும் அடையலாம்.

## யாழ் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்

மொத்த திட்ட செலவு : ரூபா 2,300 கோடி

திட்டப் பயனாளிகள்:

குடி நீர் வழங்கல் - 300,000 பேர் (யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில்)
கழிவகற்றல் சுகாதாரம் - 80,000 பேர் (யாழ். மாநகர சபை பகுதியில்)
நீர்ப்பாசனம் - 55,000 பேர் (கிளிநொச்சி விவசாயிகள்)

(C/13637)

**சுத்தமானதும் பாதுகாப்பானதுமான குடி நீர் வழங்கலையும், ஆரோக்கியமான எதிர்காலத்தையும் உறுதி செய்ய நடைமுறையிலுள்ள யாழ்- கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தை ஆதரிப்போம்!**

திட்டப் பணிப்பாளர் காரியாலயம், யாழ்ப்பாணம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

தொலைபேசி: 0212220256 தொலைநகல்: 0212220257 இணையதளம்: www.jkwssp.org



வட்டுக்கோட்டை அருள்மிகு பங்குரு கந்தசுவாமி ஆலய
ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹாயாக பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேக பெருந்திருவிழா

## சிறப்புமலர் 17-04-2014



### முதாதையர் தேடிவைத்த பெருஞ்செல்வம்



ஆலயம் ஆத்மாவை ஆற்றுப்படுத்தும் புண்ணிய நிலையம். தினமும் ஆலயத்தை வலம் வருபவரிடம் ஆன்மபலமும் ஆரோக்கியமும் நிறைவாகக் காணப் படும். எம் மூதாதையர் எமக்குத் தேடி வைத்த பெருஞ் செல்வம் திருக்கோயில்கள் என்றால் மிகை யாகாது. வட்டுக்கோட்டை அருள்மிகு பங்குருகந்தசாமி கோயில் மகா கும்பாவிஷேகம் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறோம். இவ்வாலயச் சூழலில் சிறுவர்களின் வாழ்வுக்கு உகந்த மழலைப் பாடசாலை அமைக்கப்பட்டு திறப்பது குறித்து பேருவகை அடைகிறோம். கடவுளும் குழந்தையும் ஒன்று. கள்ளம் கபடம் இல்லாச் சிறாரை கடவுளின் பெயரால் கல்விச்சாலை அமைத்து பராமரிக்கும் திட்டம் போற்றுதலுக்குரியது. அறங்காவலர் சு.புவனகுமார் அவர்களின் அயராத முயற்சியால் சிறப்புற்று விளங்கும் இவ்வாலயம் மேலும் சிறக்க பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

- ரிஷி தொண்டுநாதன்.

### அருட்கடாட்சம் கிட்டட்டும்



கால வரலாற்று பெருமை கொண்ட வட் டை பங்குரு கந்தசுவாமி கோயில் ஆலயம் ருமானின் அருட்கடாட்சத்தினால் இம் முறை ஷகம் காண்கிறது.

அறங்காவலராகிய நான் வெறும் கருவியே. திருப்பணிகள் ஆரம்பித்த நாளில் இருந்து எமது முயற்சிகள் தங்கு தடையின்றி நிறைவேறின. இப்பெரும் பணிக்கான பொருள் உதவியும், பண உதவியும், சரீர உதவியும், பெரியோருடைய ஆலோசனைகளும் எம்பெருமானின் உதவியால் கிடைத்து எம்மை உற்சாகப்படுத்தின. வட்டு. வாழ் மக்கள் துடிப்புடனும், துணிவுடனும் இயங்கும் இளைஞர்களும் எமக்கு பேருதவியாக இருந்தனர். இக் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக இடம்பெற உதவி புரிந்த அனைத்து உள்ளங்களும் எமது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்து எம் பெருமானின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல பங்குரு கந்தசாமியாரை வேண்டுகிறேன்.

அறங்காவலர் சு.புவனகுமார்.

### பெரும் பாக்கியம் கிடைப்பதாக



வட்டுக்கோட்டை அருள்மிகு பங்குரு கந்தசுவாமி ஆலயத்தில் புதிதாக வார்த்துச் செய்யப்பட்ட விநாயகர், வள்ளிதேவநாயகி சமேத சண்முகநாதப் பெருமான், சுமித்திர சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக் குக் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடை வது மட்டும் அல்லாமல் புதிய வருஷமாகிய ஜயவருஷத்தில் சித் திரை முதல் நாள் கண்திறத்தல் போன்ற அஷ்டாச கிரியைகள் நடைபெறுவதால் மேலும் மேலும் எனக்குத் தொழில் கிடைத்த பெரும்பாக்கியமாகக் கருதி ஆசி கூறி அமைகின்றேன்.

விஸ்வப்பிரம்மஸ்ரீ, சு.பாஸ்கரன் ஸ்தபதி, யாழ்ப்பாணம்.

### வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயம்



"கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலக முய்ய" என்கிறது கந்தபுராணம். இந்த வகையில் தோற்றம் பெற்ற முருகப் பெருமானை இந்து மக்கள் பண்டைக் காலத் திலிருந்தே தமிழ்த் தெய்வமாகப் போற்றி வழிபாடு செய்து வருகிறார்கள். வேல் கொண்டு வினை தீர்க்கும் வல்லமை யுள்ளவர் முருகப் பெருமான். இலங் கையின் வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தென்பகுதிப் பிரதேசங்களில் முருக வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

இவ்வகையில் யாழ் மாவட்டத்திலும் முருக வழிபாட்டில் ஒரு தனித் துவத்தைக் காண முடிகிறது. இங்கு முருகப்பெருமானது பல ஆலயங்கள் வரலாற்றுப் பெருமையும், தொன்மைச் சிறப்பும் கொண்டனவாக அமைந் துள்ளன. இவற்றுள் ஒன்றாக வட்டுக்கோட்டை பங்குரு முருகன் ஆலயத்தைக் குறிப்பிடலாம். இந்த ஆலயமானது நூற்றியிருபது ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு கொண்டது என்பதை அறிய முடிகிறது.

அருள்மிகு பங்குரு முருகன் ஆலயம், பரம்பரை வழிவந்த பரி பாலனத்திற்கு அமைய, இப்போது நண்பர் சுந்தரமூர்த்தி புவனகுமார் அவர்களின் நிர்வாகச் செயற்பாட்டில் சிறப்பாக இயங்கி வருவதைக் காண முடிகிறது. பழைய நிலையிலிருந்த ஆலயத்தில் அவ்வப்போது திருத்த வேலைகள் இடம்பெற்று வந்துள்ள போதிலும், இப்போது பெரிய புனருத் தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, ஆலய பிரமாணங்களுக்கும், விதிமுறைகளுக்கும் அமைய கருவறை, ஏனைய முன்மண்டபங்கள், வசந்த மண்டபம், நவக்கிரகங்கள் உட்பட பரிவார மூர்த்திகளுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டிருப்பதுடன், ஆலய சுற்று வீதியும், செப் பனிடப்பட்டு எழில்மிகு வகையில் காட்சியளிப்பதுடன், மகா கும்பாபிஷேகப் பெருவிழா காணவிருப்பதும் சிறப்புக்குரிய நிகழ்வாகும்.

அலங்கார உற்சவம் நடைபெற்று வந்த இந்த ஆலயத்தில், மகா கும்பாபிஷேகப் பெருவிழாவின் பின்னர் கொடியேற்றம், முருகப் பெருமான் தேரேறி வலம் வந்து பக்தர்களை அனுக்கிரகம் செய்யும் வகையில் இரதோற்சவம் மற்றும் தீர்த்தோற்சவம் என்பன உள்ளடங்கிய மகோற்சவப் பெருவிழா நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதை அறிந்து மகிழ்கிறோம். நண்பர் சுந்தரமூர்த்தி புவனகுமார் இத்தகைய ஆன்மீகப் பணியுடன் சமூக நல கல்விப் பணியாக ஆலயம் அமைந்திருக்கும் கிராம சூழலில் சிறுவர்களுக்கான முன்பள்ளியொன்றை அமைத்திருப்பதுடன், அதனுடன் இணைந்த வகையில் சிறுவர்கள் விளையாடு வதற்கான உபகரணங்களுடன் சேர்ந்த வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருப் பதும் பெரிதும் பாராட்டுதற்குரியது.

ஆலயத்தில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக அமைய வேண்டும் என ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவருள் துணைகொண்டு இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

க. சண்முகநாதன் தலைவர்,
ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் ஊரெழு.

(39619)(2.6.3)

ம்

சுப்பிரமணியம் பரசிரும்மம் பரமாகாசம்
பரோத்பவம்! சோம சேகர வன்னி நயநம்
குக ஸ்கந்தம் நமோ நமஹ!!

ஆறு முகத்தில் அதிபதி நான் என்றும்
கூறு சமயக் குருபரன் நான் என்றும்
தேறினார் தெற்குத் திரு அம்பலத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றானே.

### வட்டுக்கோட்டை ஸ்ரீ பங்குரு முருகன் ஆலய வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தெனவும், இரத்தினதுவீபம் எனவும் போற்றப்படும் இலங்காபுரியின் தமிழெழுடு சைவம் தகை பெற வளரும் யாழ்ப்பாணத்திற்கு அழகு சேர்க்கும் கிராமங்களில் வலிகாமம் மேற்கில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை என்னும் திருவூரும் ஒன்றாகும். இங்குள்ள மக்கள் பன்னெடுங் காலமாக ஏற்றிப்போற்றும் ஆலயங்களில் பங்குரு முருகன் ஆலயமும் ஒன்றாகும். இத் திருவாலயத்தை இவ்வூர் சைவவேளாண் குல திலகர் வைரவப் பொடி என்பவர் 1889 இல் ஸ்தாபித்து வழி பட்டுவரலானார். இவ்வாலயத்தை இங்குள்ள மக்கள் அனைவரும் தரிசித்து ஏற்றிப்போற்றி வழிபட்டு வந்தனர். உரு ஏற திரு ஏறும் என் பதற்கிணங்க ஆல்யத்திற்கு வழிபடுவோர்தொகை அதிகரித்தது. வைரவப்பொடி தனது மருமகனான முருகேசுவிடம் ஆலயபரிபாலனத்தைக் கையளித்தார். இவரும் முருகன் மீது அளவற்ற பக்திகொண்டுபரி பாலித்துவந்ததுடன் தமது மகனான கந்தையாவிடம் இதனைக்கையளித்தார். கந்தையா முருகனுக்கு ஓர் அழகான சிறு ஆலயம் அமைக்க ஆசைப்பட்டார்.

இதற்காக அவர் 1925 இல் மலேசியாசென்று அயராது உழைத்து சேமித்த பணத்தில் ஒரு பகுதியை முருகன் ஆலயம் அமைப்பதற்கு செலவிட்டார். அவருக்கு சின்னத்தம்பி, திருஞான சம்பந்த மூர்த்தி, சுந்தரமூர்த்தி என 3 புதல்வர்கள் 1925 முதல் 1952 வரை ஆலயத்தை பராமரித்து வந்த இவரின் இராண்டாவது புதல்வனாகிய திருஞானசம்பந்தமூர்த்தி 1952 இருந்து 1985 வரை ஆலயத்தை பராமரித்துவந்தார். இவரின் அயராது உழைப்பாலும் எம்பெருமானின் அருட்கடாட்சத்தாலும் 1957 ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப்பட்டு அருமையான குட முழுக்கையும் நிறைவேற்றினார். 1985 இல் இருந்து1994 வரை இவரின் மூத்த புதல்வரான சின்னத்தம்பி பொறுப்பேற்று பராமரித்து வந்தார். இவர் 1992 இல் மிகச்சிறப்பான குட முழுக்கை செய்துவைத்தார். 1994 இல் இருந்து 2013 ஆம் ஆண்டு வரை இவரது மகள் தபோதினி மருமகன் லோகநாதன் பொறுப்பேற்று ஆலயத்தை நிர்வகித்து வந்தார்கள். 2013 இல் இரவது இளைய புதல்வரான அமரர் சுந்தரமூர்த்தியின் புதல்வர்களான புவனகுமார், உருத்திருகுமார் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள்.

இவ்வாறு அயராத உழைப்பாலும் ஆலயத்தை விஸ்தரித்து முழுமைபெற்ற ஆலயமாக உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தினாலும் இவ்வாலயம் வசந்தமண்டபம், நவக்கிரகம், வாகன சாலை, மண்டபம், கொடிக்கம்பம், பரிவார மூர்த்திகளான ஆறுமுக சுவாமி, பிள்ளையார், சண்டேஸ்வரர் ஆகியவற்றை புதிதாக நிர்மாணித்து புதிய வீதியமைத்து ஆலயத்தை முழுமையாக்கி மகா கும்பாபிஷேகத்தை நடத்துகின்றனர்.

தற்பொழுது இவ்வாலயம் புதுப்பொலிவுடன் பொது நோக்கு மண்டபம், இதனைச் சுற்றி சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம், அறநெறி பாடசாலை, அத்துடன் கர்நாடக சங்கீதம், வயலின் வீணை போன்ற இசைக்கருவிகள், வாத்தியக் கருவிகள் கற்பதற்கும் வசதியாக நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

**தென் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட நாதஸ்வர வித்துவான்களும் ஈழத்துப் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான்களும்**

**"கான மழை"**

**பொழிய சுவாமி வீதியுலா வருவார்**

அடியார்கள் இத்தெய்வீகத் திருநாளில் வருகை தந்து அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், பழவகை, பூ, பூமாலைகள், கற்பூரம், சாம்பிராணி, தேங்காய் எண்ணெய், சமித்துவகை கொடுத்து உதவி எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும். அனைவரும் வருக! முருகப்பெருமானின் அருள் பெறுக! மங்கலம் பொங்குக!

ஆலய அறங்காவலர் சு.புவனகுமார்.




சக்தி கஸ்தம் விருபாக்ஷம் சிகி வாஹம்
சடானனம் தாருணம் ரிபோகக்னம்
பாவயேத் குக்குட துவஜம்.

உலகத்தில் உள்ள உயரமான இடமாக மலை உள் ளது. மலையைச் சார்ந்த இடமாக உள்ள இடத்தைக் குறிஞ்சி நிலம் என்று சொல்வர். அதற்கு அதிபதியாக கௌமாரத்தின் தெய்வமாக விளங்கும் முருகனை வழிபட்டார்கள். முருகனுக்கு குகன் என்று ஒரு நாமம் உள்ளது. உயிர்களின் மனக் குகையில் இருப்பதனால் குகன் என்று அழைப்பார்கள். இவ் வாறு சிறப்புக்கள் அமைந்த கலியுகவரதனாம் கந்தப்பெருமான் திருவாளர் சு.புவனகுமாரின் மனத்தில் தோன்றி தான் பிறந்து வளர்ந்து ஆளாக்கிய வட்டுக்கோட்டை என்னும் கிராமத்தில் பங்குரு கந்தசுவாமி ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். அவ்வாறு தீர்மானம் செய்து 30.10.2013 பாலஸ்தானம் செய்யப்பட்டு இந்திராதிதேவர்களும் வந்து இறங்கி தங்கள் கரங்குவிக்கும் வண்ணம் பலசித்திர வேலைப்பாடுகளுடன் மிளிர்கின்ற ஆலயத்தின் பெரும் சாந்தி விழா 17.04.2014 வியாழக்கிழமை விசாகநட்சத்திரம் கூடிய நன் நாளில் பகல் 09.52 மணி முதல் 11.51வரை உள்ள சுபவேளையில் நடைபெறுகின்றன. உலகத்தின் கண் உள்ள எல்லா உயிர் இனங்களும் எல்லா நலன்களும் பெற்று வாழ்வார்களாக.

கும்பாபிஷேக பிரதமகுரு
சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள் ஊரெழு.

### ஆலய குரு ஆசிச்செய்தி



*"துதிப்போர்க்கு வல்வினை போம்
துன்பம்போம் நெஞ்சிற் பதிப்போர்க்குச்
செல்வம் பலித்து கதித்தோங்கும்"*

"ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே" என்பது மெய்கண்டாரின் திருவாக்கு ஆகும். இறைசிந்தனையாளர்களுக்கு உருவமாக அருவமாக, அருவுருவமாக இறைவன் காட்சி தருகிறான். இம்மூன்று வடிவமாக வேறுபட்டும், ஒன்றுபட்டும் விளங்கும் இறைவனின் இருப்பிடம் திருக்கோயில்களாகும். திருக் கோயிலைக்கட்டியெழுப்பி திருவுருவச் சிலைகளை நிறுவி மந் திர தீர்த்தத்தால் திருமஞ்சனமாட்டுவது பெருஞ்சாந்தி ஆகும். அவ்வழியில் இத்தர்மப் பணியை உலகின் முதல் மொழியாகவும், தாய்மொழியாகவும், உள்ள தமிழ்மொழி போற்றிப்பேசும் முருகக் கடவுளை வழிபடும் பொருட்டு, சைவத்தொன்மையும், சீலமும் இயற்கை எழிலும், தெய்வீக சூழலும் நிறைந்த வட்டு நகர் மத்தியில் பங்குருவிற் பதியமர்ந்து திருவருள் சொரியும் ஸ்கந்தப்பெருமானுக்கு சிவதர்ம வள்ளல்கள் பெருஞ்சாந்தி விழா எடுப்பது குறித்து பெருமிதம் அடைகிறோம். புனித நன்னாளில் நிகழும் மஹா சாந்திக்கும் அது சார்ந்து வெளிவரும் சிறப்பு மலருக்கு அருளாசி கூறி நிற்பதோடு ஆலய மேலாண்மைக் குழுவினருக்கும், பக்த கோடிகளுக்கும் இறையருள் கிடைக்க வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

என்றும் இறைபணியில்
பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வரசர்மா ஷ.தேவஸ்தானம்.

### பொருள் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் ஆகியன அடியார்களுக்குக் கிடைக்க கும்பாபிஷேக நாளில் பிரார்த்திக்கின்றேன்



வட்டுக்கோட்டை பங்குரு முருகன் ஆலய மகா கும்பாபி ஷேகம் ஆண்டவன் அருளால் இனிதே நிறைவேற திருவருள் பாலித்துள்ளமை மட்டற்ற மகிழ்ச்சியையும், புத்தூக்கத்தையும், நமக்கெல்லாம் அருளையும் வழங்க அவனருளால் ஒப்பேறும் காரியமாகும். இவ்வாலயம் நூற்றியிருபது ஆண்டு கால வரலாறு கொண்டது. பெண் தெய்வ வழிபாடு சிந்து வெளி நாகரிக காலந் தொடக்கம் இன்றுவரையில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. அதற்கு முன்பதாகவே "வேல்" வழிபாடு இருந்துள்ளமையை வரலாறு எடுத்தியம்புகின்றது.

ஆன்மீகப் பணி புரியும் பலரைத் தன்னகத்தே கொண்ட, வட்டுக்கோட்டை பங்குரு முருகன் ஆலயமும் மகாகும் பாபிஷேகம் காண்பது தெய்வச் செயலன்றி வேறொன்றல்ல. மக்கள் நலனுக்காகவே இத்தகைய சமயக் கிரியைகள் இடம் பெறுகின்றன என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல.

எமது சமய நடவடிக்கைகள், கிரியைகள் அறிவியல்ரீதியான ஆழ்ந்த அர்த்தங்களைக் கொண்டுள்ளமையை நாம் எல்லோரும் அறிவோம். ஆகம விதிப்படியும் சாஸ்திர முறைப்படியும் தெய்வ ஊருவங்களில் சக்தியையும் கோபுர கலசத்தில் உருவேற்றிய சக்தியையும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊக்கப்படுத்தி மனித வாழ்க்கை மேம்படுவதற்காக நடைபெறுவதே மகா கும்பாபிஷேகம். மகா கும்பாபிஷேகத்தன்று முப்பத்து முக்கோடி தேவர்களும் நமக்கு ஆசி வழங்குவார்கள் என்பது ஆன்றோர் வாக்கு.

பொருள் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் என்கிற ஆறு குணங்களே ஆறுமுகம் என்பதன் தத்துவம். அவை அனைத்தும் அடியார்களுக்கு கிடைக்க இந்நாளில் வாழ்த்தி வணங்குகின்றேன்.

ஈ.சரவணபவன்,
உதயன் குழும நிர்வாக இயக்குனர்,
நாடாளுமன்ற உறுப்பினர், யாழ் மாவட்டம்.

**குறிப்பு: இன்று மாலை உற்சவத்தின்போது தென் இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்ட யானை சகிதம் பல வண்ண விளக்குகள் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எம்பெருமான் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.**


# மறிச்சுக்கட்டி மக்கள் அவலத்தை பார்வையிட்டது பிரஜைகள் குழு

## காணிப் பிரச்சினை குறித்தும் அங்கு ஆராய்வு

மன்னார்,ஏப்.17

மன்னார் மாவட்டம், முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மறிச்சுக்கட்டி கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து கொள்ளும் முகமாக மன்னார் பிரஜைகள் குழுவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அந்தப் பகுதிக்குச் சென்று கிராம மக்களுடனும், மதகுருமார்களுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை தலைமையில் குறித்த குழுவினர் சென்றிருந்தனர். அவர்களுடன் மன்னார், மூர்வீதி ஜும்மாப் பள்ளிவாசல் மௌலவி எம்.அசிம், தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் ஏ.சோதி குரூஸ் ஆகியோரும் சென்றிருந்தனர்.



மறிச்சுக்கட்டிக் கிராமத்துக்கு நேரில் சென்ற மன்னார் பிரஜைகள் குழுவினர் மக்கள் பிரச்சினையை கேட்டறிந்தனர்.

இடம்பெயர்ந்து மீள் குடியேறியுள்ள மறிச்சுக்கட்டி கிராமத்துக்குக் கடந்த வாரம் சென்ற பொதுபல சேனா அமைப்பினர் அந்தப் பகுதி மக்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டதோடு, அந்த முஸ்லிம் மக்கள் குடியேறியுள்ள இடம் வில்பத்து வனப்பகுதிக்குச் சொந்தம் என்றும் உடனடியாக அந்தப் பகுதியில் இருந்து அந்த மக்கள் வெளியேறவேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் அந்தப் பகுதியில் துயரங்களுடன் வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் சென்று ஆராய்வதற்காகக் குறித்த குழுவினர் அங்கு சென்றனர்.

மறிச்சுக்கட்டி பகுதியில் அமைந்துள்ள பொது மண்டபம் ஒன்றில் விசேட சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது அந்தக் கிராம மக்கள் மற்றும் அந்தக் கிராமங்களுக்குப் பொறுப்பான மௌலவிகளானஎம்.தௌபிக், மௌலவி எஸ்.எச். முபாரக், ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை தலைமையிலான குறித்த குழுவினருக்குத் தெரியப்படுத்தினர்.

தற்போது நாங்கள் குடியேறியுள்ள காணி வில்பத்துக்குச் சொந்தமானது என்று பொதுபலசேனா அமைப்பு கூறுகிறது. ஆனால் கடந்த நூறு வருடங்களாக எமது சந்ததியினர் அந்தப் பகுதிகளில் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன என்று மறிச்சுக்கட்டி கிராம மக்கள் தெரிவித்தனர்.

கிணறுகள், வீடுகள், கட்டடங்கள் கட்டப்பட்டமைக்கான அடையாளங்கள், இறந்தவர்களை அடக்கம் செய்த மையவாடி, குளம் போன்றவை இங்கு உள்ளன என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

எனவே எமது முன்னோர்கள் வாழ்ந்த காணியிலே மீண்டும் நாங்கள் குடியமர்ந்துள்ளோம். நாங்கள் வசிக்கும் காணி வில்பத்துக்குச் சொந்தமானதாக இருந்தால் அதற்குரிய திணைக்களம் மட்டுமே எங்களுடன் பேச வேண்டும். பொதுபல சேனாவுக்கு இங்கு என்ன வேலை என்று மக்கள் தெரிவித்தனர்.

எனவே முசலி பிரதேசத்தில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணியைக் கடற்படையினரும், இராணுவத்தினரும் பிடித்து வைத்துள்ளனர். அவர்கள் எங்களுக்குச் சொந்தமான காணிகளில் நெற் செய்கையில் ஈடுபடுகின்றனர். ஆனால் எங்களுடைய காணியில் எங்களை விவசாயம் செய்ய அல்லது மீள் குடியேற அனுமதிக்கின்றார்கள் இல்லை என்று மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

முள்ளிக்குளத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் சகோதரர்களுடைய காணிகளை அபகரித்து வருவது போன்றே எமது காணிகளையும் அவர்கள் அபகரித்து வருகின்றனர் என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் சுமார் 128 குடும்பங்கள்வரை தற்போது எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றோம். எமக்கு முதலில் எமது காணிகளைப் பெற்றுத் தர வேண்டும். நாம் குடியமர்ந்துள்ள காணிகள் எங்களுடையவையே என்பதற்கான சகல ஆவணங்களும் உள்ளன.- என்று மறிச்சுக்கட்டி கிராம மக்கள் குறித்த குழுவினரிடம் மேலும் தெரிவித்தனர். (ச-56)

## விளையாட்டு போட்டி

வவுனியா மாவட்டப் பொலிஸாரின் ஏற்பாட்டில் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி இடம்பெறவுள்ளது.

தமிழ் - சிங்களப் புத்தாண்டை சிறப்பிக்கும்முகமாகஎதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை விளையாட்டுமைதானத்தில் காலை 7 மணிக்கு போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறவிரும்புவோர் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வவுனியா மாவட்ட பொலிஸ் நிலையத்தில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளு மாறு மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-421)

## கிளிநொச்சியில் உளத் தாக்கத்துக்கு உள்ளாகும் மாணவர்கள் அதிகரிப்பு

### வலயக் கல்விப் பணிப்பாளர் கவலை

கிளிநொச்சி, ஏப்.17

கிளிநொச்சி வலயத்தில் பல மாணவர்கள் உளத் தாக்கங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இடப்பெயர்வுகள், நலன்புரி வாழ்வுகள் மீளக்குடியேற்றத்தின் பின்பு மாணவர்களின் வீடுகளில் காணப்படும் வறுமை நிலை என்பவற்றால் மாணவர்கள் உள ரீதியாக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.



க.முருகவேல்

இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படும் நிலை நிலவுகின்றது.

மாணவர்களின் வழி தவறிய செயற்பாடுகளுக்கும் உளத் தாக்கங்கள்தான் முக்கிய காரணமாக உள்ளன.

பெற்றோர்கள் மாணவர்களை அன்பாக அரவணைத்து கல்வியில் முன்னேற்றம் அடைவதற்கு எப்போதும் துணை நிற்க வேண்டும்.

பாடசாலைகளில் உளவளத் துணைச் செயற்பாடு கூடுதலாக இடம்பெற வேண்டும்

ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் கல்வியுடன் நம்பிக்கையையும் உருவாக்க வேண்டும் - என்றார். (ச-18)

## முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் உப உணவுப் பயிர்ச் செய்கை

### 3 குளங்களின் நீர்ப்பாசனம் மூலம்

கிளிநொச்சி, ஏப்.17

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மூன்று குளங்கள் மூலம் பெறப்படும் நீர்ப்பாசனத்தின் மூலம் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அம்பகாமம் குளநீர்ப்பாச ணம் மூலம் 40 ஏக்கரில் எள்ளுச் செய்கையும், தச்சடம்பன் குள நீர்ப்பாசனத்தின் மூலம் 34 ஏக்கரில் பயறு, கௌபி, நிலக்கடலை என்பன வும் - ஒலுமடுக் குள நீர்ப்பாசனத்தின் மூலம் 36 ஏக்கரில் பயறு, கௌபி, நிலக்கடலை என்பனவும் உப உணவுப் பயிர்ச் செய்கையாக இடம்பெறவுள்ளதாக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நீர் தட்டுப்பாடு காரணமாக இம்முறை உப உணவுப் பயிர்ச் செய்கையே இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

## நாச்சிக்குடா கிழக்கு மக்களுக்கு தண்ணீர் வழங்கல் இடைநிறுத்தம்

### பணம் செலுத்தாமையே காரணம்

பூநகரி, ஏப்.17

பூநகரி, நாச்சிக்குடா கிழக்குப் பகுதிகளில்குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு வழங்கி வந்த குடிதண்ணீர் வழங்கலை பூநகரிப் பிரதேச சபையினர் இடை நிறுத்தியுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

பிரதேச சபையால் வழங்கப்பட்ட குடிதண்ணீருக்குப் பணம் செலுத்தாமையாலேயே குடிதண்ணீர் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று மக்கள் கூறினர்.

இந்த விடயம் தொடர்பாகப் பூநகரி பிரதேச சபை செயலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஒன்றுவிட்ட தினத்துக்கு குடும்பம் ஒன்றுக்கு 25 லீற்றர் குடிதண்ணீர் வழங்குகிறோம். அதற்காக மாதம் 60 ரூபா பணத்தை பிரதேச சபை அவர்களிடமிருந்து அறவீடு செய்கின்றது. இந்தக் கட்டணத்தைப் பிரதேச சபைக்குச் செலுத்தாததன் காரணமாக குடிதண்ணீரைத் தொடர்ந்து வழங்குவதில் இடையூறுகள் ஏற்படுகின்றன.

தற்போது குடிதண்ணீரை பிரதேச சபையின் ஒழுங்குகளுக்கமைய வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-18)

## வங்கிக் கிளையில் திருட்டு

வவுனியா, ஏப்.17

வவுனியாவில் வங்கிக் கிளையொன்றில் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வவுனியா, ஓமந்தைப்பகுதியில்உள்ளஇலங்கை வங்கியின் வவுனியா கிளையில் இடம்பெற்றுள்ளது.

வங்கியின் முன்பக்கக் கதவுகளை உடைத்து திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் அங்கிருந்து எவ்வித பொருள்களும் திருடப்பட்டிருக்கவில்லை என்று ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் புத்தாண்டு களியாட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ள நிலையில் திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் ஏ-9 வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் காவற் கடமையில் ஈடுபட்டிருப்பது வழமை. எனினும் புத்தாண்டுக் களியாட்டத்தில் பொலிஸார் பங்குபற்றியிருப்பதை அறிந்த திருடர்கள் தருணம் பார்த்துத் தமது கைவரிசையைக்காட்டமுனைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-402)

## கிளைமோர் வெடிகுண்டு மீட்பு

கிளிநொச்சி, ஏப்.17

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் ரயில் நிலைய வளாகத்தில் உள்ள கிணற்றுக்குள் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை கிளைமோர் ரக வெடி குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ரயில் நிலையப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றை இறைத்துத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டவர்கள் சந்தேகத்துக்கிடமான குண்டு போன்ற பொருளொன்று கிணற்றினுள் இருப்பதைக் கண்டுள்ளனர்.

அதனையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அங்கு சென்ற கிளிநொச்சி பொலிஸாரும், இராணுவத்தினரும் வெடி பொருள் செயலிழக்கச் செய்யும் பிரிவினர் மூலம் குண்டை மீட்டுள்ளனர்.

இந்தக் கிணற்றினுள் வேறு வகையான வெடி பொருள்களும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட கிணற்றைத் துப்புரவு செய்யும் பணி இடைநிறுத்தப்பட்டது. (ச-416)



மண்முனைத்துறை புதிய பாலம்

## நிர்மாணப் பணிகள் பூர்த்தி; பாலம் சனிக்கிழமை திறப்பு

மட்டக்களப்பு.ஏப்.17

மண்முனைத்துறை புதிய பாலத்தின் நிர்மாணப்பணிகள் முற்றாக நிறைவு பெற்றுள்ளன. இந்தப் பாலத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு உத்தியோகபூர்வமாக மக்களிடம் கையளிக்கவுள்ளார். இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் மஹிந்த சிந்தனை திட்டத்துக்கமைய சுமார் 1870 மில்லியன் ரூபா பெறுமதியான ஜப்பான் நாட்டு அரச உதவி திட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையையும் எழுவான் கரையையும் இணைக்கும் கொக்கட்டிச்சோலை கேந்திரத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய பாலத்தின் ஊடாக கொக்கட்டிச்சோலை, மகிலடித்தீவு, மாவடிமுன்மாரி, அரசடித்தீவு, முதலைக்குடா, தந்தாமலை, முனைக்காடு, தும்பங்கேணி உட்பட பல கிராம மக்கள் பயனைப்பெறவுள்ளனர்.(ச)

## விபத்தில் ஒருவர் காயம்

மட்டக்களப்பு.ஏப்.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மாடு ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மாடு உயிரிழந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து கல்முனை, மட்டக்களப்பு பிரதான வீதியின் புதுக்குடியிருப்புப்படைமுகாமுக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியைக் குறுக்கறுத்துச் சென்ற மாட்டின் மீது மோதியுள்ளது. இந்தச்சம்பவத்தில் படுகாயமடைந்த மாடு உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக ஆரையம்பதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

# சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சு நடத்தப்பட வேண்டும்

## நிரந்தரமான சமாதானம் ஏற்பட இதுவே வழி என்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு.ஏப்.17

இலங்கையில் நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் சர்வதேச மத்தியஸ்தத்துடன் அரசு பேச்சு நடத்த வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பிளாந்துறையில் இடம்பெற்ற ஊஞ்சல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

**"தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசு பேசினால் மாத்திரமே ஜனாதிபதி கூறுகின்ற சாந்தி சமாதானம் நாட்டுக்குக் கிடைக்கும்.**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேசுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை மேற்கொண்டால் மாத்திரமே ஜனாதிபதி கூறுகின்ற அமைதியும் சமாதானமும் நாட்டில் ஏற்பட வழி பிறக்கும்.

தொடர்ச்சியாக இன்னல்பட்டு அடிமைப்பட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் தமிழர்கள். அதனால் எங்களுக்கு விமோசனம் தேவை-என்றார். (ச)

## யானைகளின் தாக்குதல்களால் மக்கள் தொடர்ந்து பாதிப்பு

மட்டக்களப்பு.ஏப்.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கெவுளியாமடு மக்கள் யானைகளின் தாக்குதலுக்குத் தொடர்ந்து உள்ளாகி வருகின்றனர்.



யானைத் தாக்குதலுக்கு உள்ளான வீடு

யானைத் தாக்குதல்களால் மக்களின் குடியிருப்புக்கள் தினமும் சேதத்துக்குள்ளாகி வருகின்றன. வீட்டில் சேமித்து வைத்திருக்கும் நெல், கௌபி, குரக்கன் போன்ற தானிய வகைகளையெல்லாம் யானைகள் உண்டு விடுகின்றன. அதனால் கெவுளியாமடு பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே யானைகளின் தாக்குதல் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கெவுளியாமடு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## மட்டக்களப்பில் யுவதியைக் காணவில்லை

மட்டக்களப்பு.ஏப்.17

மட்டக்களப்பு,களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிப்பாளையத்தில் இருந்து மட்டக்களப்பு நகரில் உள்ள தனியார் வங்கியில் பணம் பெற்றுக் கொண்டுவீடுதிரும்பிக் கொண்டிருந்த இளம் யுவதி ஒருவர் காணாமற்போயுள்ளார் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

செட்டிப்பாளையம் பிரதான வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் வைஸ்ணவி ( வயது-21) என்ற இளம்பெண்ணே மட்டக்களப்பில் உள்ள தனியார் வங்கியில் பணம் எடுப்பதற்காக சனிக்கிழமை காலை சென்றுள்ளார்.

இந்தப் பெண் குறித்த வங்கிக்குச் சென்று பணத்தை மீளப் பெற்றுக்கொண்டு சென்றுள்ள நிலையில் இதுவரையில் அவர் வீடு வந்து சேரவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச)

## 26 மீனவர்களுக்கு கிடைத்தது பிணை

திருகோணமலை.ஏப்.17

திருகோணமலைக்கடற்பரப்பில் சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 26 மீனவர்களைத் திருகோணமலை பதில் நீதவான் திருநாவுக்கரசு திருச்செந்தில் நாதன் சரீரப் பிணையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை விடுவித்துள்ளார்.

**"மீனவர்கள் ஒவ்வொருவரையும் தலா 50,000 ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவித்தார்**

இந்த மீனவர்கள் ஒவ்வொருவரையும் தலா 50,000 ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவித்த நீதிவான், அடுத்த மாதம் 11 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார்.

திருகோணமலை துறைமுக பரப்பில் நெய்மலைக்கு அருகில் 3 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே, கிண்ணியாவைச் சேர்ந்த இந்த மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்தனர்.

இந்த மீனவர்களைத் துறைமுக பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். அவர்களது படகுகள் கடற்படைத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 16 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் இணைப்புக்கள்

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காங்கேயனோடைக் கிராமத்தில்16குடும்பங்களுக்கு குடிதண்ணீர் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக நிதியுதவிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங் கப்பட்டன. இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5,480 ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.


## மரண அறிவித்தல்



### முருகேசு நாகராஜா

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.218, சில்வா வீதி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நாகராஜா 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமேனிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சின்னையா - பர்வதபத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும், சாரதா, ராஜன், சாவித்திரி, காலஞ்சென்ற ஈசன், சாந்தி, ஜெயந்தி மற்றும் கௌரி, வாசன், நேசன், சிவா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சொர்ணலிங்கம், வேலுப்பிள்ளை செல்லம்மா, பூபதி, ஆறுமுகம் (துரை), சற்குணம், இரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, ஆச்சிமுத்து, ஏகாம்பரம், அன்னம்மா, கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், குலேந்திரன், சுதாகினி, மகாதேவன், புஸ்பநாதன், செரி, கிரிஜா, காலஞ்சென்ற சிவரூபி மற்றும் கௌசி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷோபியா, அபிநயா, நிவேதிகா, கிஷோனா, சந்தோஷ், கியுரிஜா, ஸ்ரெபியா, இலக்கியா, சாயிரா, சித்தார்த், சயுரா, காலஞ்சென்ற லதுர்சிகன் மற்றும் ருஜாந், சஜானா, கேதிஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் இல.6, கரடிப்போக்கு, கிளிநொச்சி (இலங்கை வங்கி முன்பாக) எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 06, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

(43438)(12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி வாசுகி சிறிரஞ்சன்

யாழ்.உயரப்புலத்தைப் பிறப்பிட மாகவும், கைவிக்கம் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாசுகி சிறிரஞ்சன் 14.04.2014 திங்கட்கிழமை (தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று) சிவபதம் அடைந்தார்.

அன்னார் சின்னத்துரை சிறிரஞ்சனின் பாசமிகு மனைவியும், லக்ச்மன், ரூபன், மயூரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு.திருமதி கந்தப்பிள்ளை தம்பதியரின் (இளைப்பாறிய கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள்) சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும், அனபாயன் (ஜீவா - கனடா), பார்த்திபன், சுமதி, பதுமினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிலானி (கனடா), அன்பழகன், சங்கர் ஆகியோரின் மைத்துனியும், அபிராமி, வைதேகி, வைஸ்ணவி, கௌதம், மாதுளன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ராகுல், பீஸ்மர், வைசாலி ஆகியோரின் அன்பு மாமியும், கமலா கதிர்காமத்தம்பி, விமலா சண்முகராசா, வசந்தா - குணரட்ணம், ரஞ்சிதற்குமார், காலஞ்சென்ற கலாரஞ்சிதம் - குகனேஸ்வரன் மற்றும் மோகனரஞ்சன் ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு 4 Eastern dene, Hazlemere, Bucks HP15 7BT நடைபெற்று, பி.ப.01.00 மணியளவில் Chilterns Crematorium, Whielden Lane, Amersham, Bucks HP7 ONDஇல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
Husband: Sriranjan - 00441494718430 / 00447841511514
Brother: Parthipan - 00447971486921
Cousin Sister: - 0776086217

(46820)(12)(3)

தகவல்:
குடும்பத்தினர்.

# இணைய குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகள்

கொழும்பு,ஏப்.17
இணையக் குற்றச் செயல்கள் தொடர்பிலான 500 சம்பவங்கள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்த விசாரணைகளை புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்று குறிப்பிடப்படுகிறது.
இணையக் குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் 5 வழக்குகள் ஏற்கனவே தொடரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உயர் நீதிமன்றில் ஐந்து சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மாவட்ட நீதிமன்றங்களில் 30 குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
இணையத்தைப் பயன்படுத்திக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது. (ச)

# இலங்கையில் பேஸ்புக் ஊடான துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு

## அனோமா திஸாநாயக்க குற்றச்சாட்டு


அனோமா திஸாநாயக்க

கொழும்பு,ஏப்.17
பேஸ்புக் சமூக வலைத்தளம் ஊடாக சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுதல் நாட்டில் அதிகரித்துள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.
கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டார். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருவர் சந்தேகத்தின் பேரில் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.
வெளிநாட்டவர்களால் கடந்த காலங்களில் இவ்வாறான குற்றங்கள் இழைக்கப்பட்ட போதிலும், தற்போது இலங்கையர்களே அதிகளவில் இத்தகைய குற்றங்களில் ஈடுபடுகின்றனர் என்று அவர் கூறினார். (ச)

> **வெளிநாட்டவர்களால் கடந்த காலங்களில் இவ்வாறான குற்றங்கள் இழைக்கப்பட்ட போதிலும், தற்போது இலங்கையர்களே அதிகளவில் குற்றங்களில் ஈடுபடுகின்றனர்**

# பேக்கரி உற்பத்திகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

## அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தகவல்

கொழும்பு,ஏப்.17
எதிர்வரும் நாள்களில் பேக்கரி உற்பத்திகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.
பேக்கரித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களில் பெரும்பாலானோர் புத்தாண்டை முன்னிட்டு தத்தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளமையே தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவிக்கின்றார்.
இந்த நிலைமையின் கீழ். பேக்கரி உணவு உற்பத்திகள் தற்காலிகமாக தடைப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினார்.
நாடளாவிய ரீதியில் பேக்கரி ஊழியர்களில் 75 வீதமானவர்கள் சுமார் ஐந்து நாள்கள் வரை விடுமுறையில் சென்றுள்ளனர் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.
வருடந்தோறும் பண்டிகைக் காலப்பகுதியில் இந்த நிலைமை ஏற்படுவதுடன், அதன்மூலம் மக்கள் தற்காலிகமாக அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

> **பேக்கரித் தொழிலில் ஈடுபட் டுள்ள ஊழியர்களில் பெரும்பாலானோர் புத்தாண்டை முன்னிட்டு தத்தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளமையே தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது**

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் அதிகளவில் பெண்கள் கைது

## அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை வேண்டும் என்கிறது பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு

கொழும்பு,ஏப்.17
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் கைது செய்யப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், அண்மைய நாள்களாக அதிகளவான பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களில் ஒருவராக அடையாளப்படுத்தப்பட்ட கோபி என்பவருடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் அடிப் படையிலேயே பல பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கோபி மற்றும் அவரது சகாக்கள் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளனர்.
எனினும், அவர்களுடன் தொடர்புகளைப் பேணியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் பூசா உள்ளிட்ட தடுப்பு முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதே வேளை கைது செய்யப்பட்ட பெண்கள் சாதாரண கைதிகளுக்கு நிகரான வகையில் நடத்தப்படவேண்டும் என்றும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும் என்று பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பெண்கள் மற்றும் பதின்ம வயது சிறுமிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும்.
அல்லது கைது செய்யப் பட்டவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள் ளது. (ச)

# வெலிக்கடை சிறைக்குள் வீசப்பட்ட பொதிக்குள் ஹெரோயின் மீட்பு

கொழும்பு,ஏப்.17
வெலிக்கடை சிறை மகளீர் பிரிவுக்குக் கிடைத்த பொதி ஒன்றில் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.
சிறைச்சாலைக்கு வெளியில் இருந்து வீசப்பட்ட பொதி ஒன்றை சோதனை செய்தபோதே அப் பொதிக்குள் இருந்து ஹெரோயின் மீட்கப்பட்டது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
சவர்க்காரக் கட்டிகளுள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 ஹெரோயின் பைக்கற்றுக்கள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 5 சிம் காட்கள் குறிப்பிட்ட பொதிக்குள் இருந்துள்ளது. (ச)

# இரண்டு சீன நபர்கள் கைது

கொழும்பு,ஏப்.17
இரண்டு சீன நபர்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறியதற்காக கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நேற்று புதன் கிழமை தெரிவித்தார்.
எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று அவர் கூறினார்.
வங்கி அருகே உள்ள பகுதிகளில் வெள்ளிப் பொருள்களை விற்பனை செய்து கொண்டிருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்ட சீன நபர்களிடமிருந்து பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.
இதேவேளை, சுற்றுலா விசாவில் வருகை தந்து இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட இரு சீன நபர்கள் ஏற்கனவே கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

90ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்
அன்னை மடியில் 05.10.1984
இறை அடியில் 18.01.2014
அமரர் கனகசுந்தரம் தேவரஜீவ் (ரஜீவன்)
கடந்த 18.01.2014 சனிக்கிழமை அகால மரணமடைந்த காரைநகர் பத்தர்கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது சிரேஷ்ட புத்திரனின் வீட்டுக்கிருத்தியம் நாளை (18.04.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது என்பதை உற்றார், உறவினர், துயரில் பங்கு கொண்டோர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
ஆகவே அனைவரையும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
திரு.திருமதி கனகசுந்தரம் குடும்பத்தினர்.
பத்தர்கேணியடி, காரைநகர். (46787)(12.6.3)



ஓராண்டு நினைவஞ்சலி
திருமதி விஜயலக்சுமி சாந்தகுமார்
(ஆசிரியர் யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்)
தோற்றம் 22.03.1961 மறைவு 27.04.2013
ஓராண்டு கடந்த போதிலும் என்றும் உங்கள் நினைவில் வாழும். (46832)(2.6.3)
அடைக்கல நாயகி வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை. 021 321 0918 குடும்பத்தினர்.



11ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் கந்தசாமி சிவநாயகி (கிளி)
தோற்றம் 15.01.1945 மறைவு 19.04.2003
திதி:- திருதியை 17.04.2014
எங்கள் அன்புத் தெய்வமே, பாசத்தின் பிறப்பிடமே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பதினொரு ஆண்டுகளானாலும்
ஆறவில்லை எம் மனம் என்றும்
உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல வெள்ளைப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.
20, முதலாம் ஒழுங்கை.
சின்னப்புதுக்குளம், வவுனியா.
- குடும்பத்தினர். (46788)(2.6.3)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர்க் குற்றங்களுக்குள் இந்தியாவும் இழுபடும் ஆபத்து

இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் இலங்கைப் படைகளுக்கு உதவும் விதத்தில் இந்தியப் படையணி ஒன்று இரகசியமாகக் களத்தில் இறக்கப்பட்டு யுத்தம் புரிந்தது என்றும், சீக்கிய கொமாண்டோ தளபதி ஒருவர் தலைமையில் இந்த அணி இயங்கியது என்றும் குற்றம்சாட்டி இதுகுறித்து விசாரணை செய்வதற்கு விசேட நீதி ஆயம் ஒன்றை அமைக்க உத்தரவிடக் கோரி இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டுள்ளது. டில்லி தமிழ்ச் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ராம் சங்கர் கடந்த வாரம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மனு மீதான விசாரணை இன்று இந்திய உயர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. இந்த மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். ஆனால் 2009 இறுதி யுத்தத்தின் போது புலிகளைத் தோற்கடிப்பதில் இந்தியாவின் பங்களிப்புக் குறித்து இந்தியா உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டும்.

2008, 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கைப் படைகள் கட்டவிழ்த்துவிட்ட யுத்தத்தின் போது அந்தப் படைகளுக்கு உதவும் விதத்தில் இந்திய இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் துருப்புகள் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு அனுப்பப்பட்டு அங்கு களம் இறக்கப்பட்டன என்றும் டில்லி தமிழ்ச் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளரின் மனுவில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இந்தியாவின் உதவியின்றி புலிகளுடனான போரில் வென்றிருக்க முடியாது என்று போரின் பின்னர் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தமை, இலங்கைக்கு எதிராக போர் முடிவடைந்த பின்னர் கனடாவால் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இலங்கையைப் பாராட்டும் விதத்தில் இந்தியாவால் மாற்றப்பட்டமை, அமெரிக்கத் தீர்மானங்களின் கடுமையான பதங்கள் குறைக்கப்பட்டு நீர்த்துப்போக வைக்கப்பட்டமை, ஐ.நா. தலைமையிலான விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உள்விவகாரங்களில் தலையீடு என்று குற்றஞ்சாட்டி இலங்கைக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது நடுநிலைமை வகித்தமை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, இலங்கைக்கு ஆதரவான இந்தியாவின் செயற்பாடுகளுக்கு ஒரு பின்னணி இல்லாமல் இருக்கமுடியாது. இலங்கை உட்பட இந்துமகா சமுத்திர நாடுகளில் பலம்பெற்றுவரும் சீனாவின் செல்வாக்கு மட்டும் இதற்குக் காரணமாக இருக்கமுடியாது.

1991 ராஜீவ் காந்தி கொலைக்கு புலிகளைப் பழிவாங்க இந்தியா முனைந்திருக்கலாம். ஆனால் அப்பாவி மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர். போரின் இறுதியில் 40ஆயிரம் மக்கள்வரை கொல்லப்பட்டனர் என்று தருஸ்மன் தலைமையிலான ஐ.நா.நிபுணர்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக அனைத்துலக விராணை நடத்தப்படவேண்டும் என்று நவநீதம்பிள்ளை ஜெனிவாவில் சமர்ப்பித்த தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் அனைத்துலக விசாரணை என்ற சொல்லைப் பிரயோகிக்காமல் ஐ.நா. மனித உரிமைகள் செயலாளர் நாயகம் தலைமையிலான விராணை என்று குறிப்பிட்டிருப்பதும் அனைத்துலக விசாரணைக்குச் சமனானதே. உண்மையில் இது அனைத்துலக விசாரணைதான்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவின் விசாரணைக் காலம் 1983இல் இருந்து விசாரணை செய்யும் விதத்தில் விஸ்தரிக்கப்பட்டிருப்பதும் 2009 இறுதிப் போரின்போது இந்தியப் படைகளின் நேரடிப் பங்களிப்புக் குறித்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதும் போர்க் குற்றத்துக்குள் இலங்கையை மட்டுமல்ல இந்தியாவையும் இழுத்துவிடும் ஆபத்தைத் தோற்றுவித்துள்ளது.

1988இல் ஒப்பரேஷன் பவான் என்ற பெயரில் இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்தில் நடத்திய தாக்குதல்களில் 20ஆயிரம் மக்கள் வரை கொல்லப்பட்டனர் என்று இந்திய இராணுவத்தின் முன்னாள் மேஜர் ஜெனரல் ஒருவர் பிற்காலங்களில் தெரிவித்திருந்தார். ஆயிரக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர். நகைகள் அபகரிக்கப்பட்டன. பிற்காலத்தில் ராஜீவ்காந்தி பழிவாங்கப்பட்டதற்கு இந்தியப் படையினரின் அராஜகங்கள்தான் காரணமாக இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. ஆகவே 1987இல் இருந்து இரு வருடங்கள் இடம்பெற்ற சம்பவங்களுக்கும் 2009 போரின் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களுக்கும் இந்தியாவும் பொறுப்புக் கூறவேண்டிய நிலைமையில் உள்ளது. இரண்டும் காங்கிரஸ் ஆட்சியில்தான் இடம்பெற்றுள்ளன. தற்போதைய தேர்தலின் பின்பு பதவியேற்கவுள்ள புதிய அரசாவது இலங்கைப் பிரச்சினையில் நீதியாகவும் நியாயமாகவும் செயற்பட்டு தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும்.

# இந்திய நாடாளுமன்றத் தேர்தல்



## எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுமா?

சேரலாதன்

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு சில மாநிலங்களில் ஆரம்பமாகியுள்ளது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் சுமார் 80 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். பரந்து விரிந்து காணப்படும் இந்தியத் துணைக் கண்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி முடிப்பது என்பது சாதாரணமானதொரு விடயமல்ல.

சுமார் 120 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்திய நாடு பல மாநிலங்களைக் கொண்டது. மொழி அடிப்படையிலேயே அநேகமான மாநிலங்கள் அமைந்துள்ளன. ஹிந்தி மொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தியாவின் ஆட்சி மொழியாக ஹிந்தி மொழியே விளங்குகின்றது. இதனால் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹிந்தி மொழி பேசுபவர்களாகவே காணப்படுகின்றனர்.

முன்பெல்லாம் ஹிந்தி மொழி பேசும் ஒருவரே பிரதமர் பதவியை வகிக்க முடியும் என்றதொரு நிலை காணப்பட்டது. இதற்கு ஏற்ற வகையில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய பெரிய மாநிலங்களிலிருந்து பெருமளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் தேசியக் கட்சிகளே அதிகளவு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. மாநிலக் கட்சிகள் பெரியளவில் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. இதனால் மத்தியில் தனியொரு கட்சியினால் ஆட்சியமைக்க முடிந்தது. இப்போதுள்ளதைப் போன்று கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே அப்போது இடமிருக்கவில்லை.

ஆனால் சமீப காலமாக இந்த நிலையில் தளர்வுப் போக்கொன்று காணப்படுகின்றது. பிராந்தியக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுவதால் தேசியக் கட்சிகள் அவற்றின் தயவைப் பெறவேண்டியதொரு நிலை உருவாகியுள்ளது. காங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சி ஆகிய பிரதான கட்சிகள் தனித்து ஆட்சியமைக்கும் நிலையில் தாம் இல்லை என்பதால் பல மாநிலங்களில் பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளன. உதாரணமாகத் தமிழ் நாட்டை நாம் எடுத்துக் கொண்டால் இந்தியாவின் மத்திய ஆட்சியில் அடுத்து அமரக் கூடுமென எதிர்பார்க்கப்படும் பாரதீய ஜனதாக் கட்சி ம.தி.முக., தே.மு.தி.க., பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்துள்ளது. அதிலும் கூட்டணிக் கட்சிகளுக்கு அதிக இடங்களை ஒதுக்கிக் கொடுத்துவிட்டு குறைந்தளவு தொகுதிகளிலேயே அது போட்டியிடுகின்றது. இவ்வாறுதான் ஏனைய அநேகமான மாநிலங்களிலும் கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிடுகின்றன. இந்த நிலையில் மத்தியில் கூட்டணி அரசு ஒன்றே அமையப் போகின்றது.

இது ஒரு புறமிருக்க, தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புக்களுக்கும் பஞ்சமில்லை. அவற்றின் முடிவுகளின் பிரகாரம் தற்போது எதிர்க் கட்சியாக வுள்ள பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகத் தென்படுகின்றன. ஆளும் கட்சியான காங்கிரஸ் பெரும் பின்னடைவுகளை எதிர்கொள்வதற்கான அறிகுறிகளும் தெரிகின்றன.

மக்களின் மனங்களைக் கவர்வதற்கு காங்கிரஸ் அரசு என்னதான் தலைகீழாக நின்றாலும் மக்களின் மனங்களை அதனால் வெல்ல முடியவில்லை. குடும்ப ஆட்சி என்ற நடைமுறையை இந்திய மக்கள் வெறுக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மன்மோகனைப் பிரதமர் பதவியில் பெய ருக்கு அமர்த்திவிட்டு அதிகாரத்தைத் தனது கரங்களில் எடுத்துக்கொண்ட சோனியாவின் செயற்பாடுகளை இனியும் மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. எது எப்படியோ நேரு குடும்ப ஆட்சிக்கு முடிவு ஏற்படப் போகின்றது என்பது நிச்சயமாகத் தெரிகின்றது.

இந்த நிலையில் சில மாநிலங்களின் கட்சித் தலைவர்கள் பிரதமர் பதவிக்கான கனவுகளில் மூழ்கியிருக்கின்றனர். மேற்கு வங்காள முதல்வர் மம்தா மற்றும் தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் இவர்களில் பிரதானமானவர்கள். ஜெயலலிதா இதற்கான முன்னேற்பாட்டுடன் தமிழ்நாட்டின் சகல தொகுதிகளிலும் தமது கட்சி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளார். தமிழகத்தின் 39 தொகுதிகளும் புதுவை மாநிலத்தின் ஒரு தொகுதியும் சேர்ந்து மொத்தமாக 40 தொகுதிகளிலும் அதிக எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் அவர் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றார். தமது கட்சி அதீக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தால் மத்தியில் தமது பேரம் பேசும் சக்தியை அதிகரித்துக் கொள்ள முடியும் என்பது இவரது திட்டமாகும். மேலும் காங்கிரஸ் கட்சியோ அல்லது பாரதீய ஜனதாக் கட்சியோ அதிக எண்ணிக்கையில் வெற்றி பெறும்போது அதில் ஏதாவதொரு கட்சியில் பின்னர் இணைந்து கொள்ளலாம் என்பதும் இவரது வியூகமாகும். இதனால்தான் தற்போது இந்த இரண்டு கட்சிகளுடனும் ஒட்டாத வகையில் அவர் நடந்து கொள்கின்றார். ஜெயலலிதாவுக்குப் பிரதமராகும் வாய்ப்புக் கிடைக்குமாயின், முதலாவது தமிழரொருவர் இந்தியப் பிரதமராகப் பதவி வகித்த பெருமை அவருக்குப் போய்ச் சேரும். ஆனால் எண்ணியவாறு எல்லாமே நடந்தேறினால் மட்டுமே இது சாத்தியமாகும்.

இதேவேளை மேற்கு வங்காள மாநிலத்தின் முதலமைச்சரான மம்தா, முன்னாள் உத்தரப் பிரதேச முதலமைச்சர் மாயாவதி ஆகியோருக்கும் பிரதமராக வரும் எண்ணம் இருப்பதாகத் தெரியவருகின்றது. காங்கிரஸ் கட்சி தமது எதிர்காலப் பிரதமர் ராகுல் காந்தியே என்று அறிவித்துள்ள நிலையில், அந்தக் கட்சி தேர்தலில் தோல்வியையே சந்திக்கு மெனத் தெரிய வருகின்றது. இதனால் ராகுல் காந் தியின் அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறக்கூடிய நிலை உருவாகி யுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி தெரிவித்துள்ள சில கருத்துக்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை ஆகும். அவர் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும்போது; எமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்காள தேசம், இலங்கை, சீனா ஆகியவற்றின் எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் விதத்தில் இந்தியா பலம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. அதன் பலவீனம் துலாம்பரமாகத் தெரிகின்றது. இந்த நாட்டைப் பலப்படுத்துவதன் மூலமே எதிரிகளைச் சமாளிக்க முடியும். ஆனால் தற்போது ஆட்சியில் அமர்ந்துள்ள காங்கிரஸ் ஆட்சியினால் இது முடியவே முடியாது. எம்மால் மட்டுமே முடியும் எனக் கூறி யுள்ளனர்.

இந்தியாவைப் பொறுத்தவரை அதன் உறுதியில்லாத வெளிநாட்டுக் கொள்கை காரணமாக அண்டை நாடுகள் அதனுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதில் தயக்கம் காட்டி வருகின்றன. இந்த இடைவெளியை சீனா இராஜதந்திர ரீதியில் நிரப்பிக் கொண்டுள்ளது. சீனாவின் ஆதரவு கிடைப்பதால் இந்த நாடுகள் இந்தியாவை ஒரு பொருட்டாக மதிப்பதாகத் தெரியவில்லை.

சிலவேளை பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்படுமென நாம் எதிர்பார்க்க முடியாது. கடந்த கால வரலாறுகள் இதைத்தான் எடுத்துக் கூறுகின்றன.

அந்தக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்கப்படுமென அக்கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர். ஆனால் வாஜ்பாய் தலைமையில் இந்தக் கட்சி ஆட்சியில் இருந்தபோது என்ன நடந்தது என்பதை அனைவரும் அறிவார்கள்.

ஆகவே இந்திய நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக வெளியில் இருந்து அக்கறை காண்பிப்பதில் பயனெதுவும் இல்லை. ஏனென்றால் இந்தத் தேர்தல் முடிவுகளால் பெரிய மாற்றங்கள் எதுவும் இடம்பெறப் போவதில்லை. மேலும் மத்தியில் கூட்டணி அரசு ஒன்று அமைவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகளவில் காணப்படுவதால் கொள்கைகளை வகுத்துச் செயற்படுவதிலும் இழுபறி நிலை ஏற்படும். ஆகவே ஒரு நாடாளுமன்றத் தேர்தல் என்ற வகையில் இதை நோக்கலாமே தவிர பெரிய எதிர்பார்ப் புக்களுடன் காத்திருப்பது பயன் தரப் போவதில்லை.





# வேலைசார் அழுத்தம் அல்லது நெருக்கடி

நடேசன்
உதயசேகர்




எல்லா மனிதர்களினதும் வாழ்வில் வேலை சார் அழுத்தம் அல்லது நெருக்கடி என்பது வெவ்வேறு காலகட்டத்தில் பல்வேறு கோணங்களில் இனங்காணப் படுகின்றது.

வேலைசார் அழுத்தம் அல்லது நெருக்கடி என்ற பதம் பொதுவாகத் தீமையான காரணியாக நோக்கப்படுகின்ற போதிலும் உண்மையிலே குறித்த மட்டம் வரையான வேலை சார் நெருக்கடி நன்மையான பல விடயங்களைச் செயற்படுத்த ஊக்கும் ஒரு கருவியாகவே அடையாளம் காணப்பட்டுள்ளது.

பொதுவான சிந்தனையில் இந்தப் பதமானது மிகவும் கடிமான பௌதிக, உளவியல் சார் சூழல் காரணிகளின் தாக்கங்களையும் அதன் காரணமாக உருவாக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் நெருக்கடிகளின் உணர்ச்சிவசப்பட்ட, உடல் மன நல மின்மையை வெளிப்படுத்தும் குறிகாட்டி யாகவும் கொள்ளப்படுகின்றது. உதாரண மாக ஓர் இறுதிப் பரீட்சைக்குத் தயாராகும் பரீட்சார்த்தி, தனது தேர்வு நெருங்கும் காலத்தின் ஊடாக, பரீட்சை மண்ட பத்தை அடையும் வரைக்கும் அனுபவிக்கும் அழுத்தம் பரீட் சையின் உயர்ந்த பெறு பேற்றை நோக்கியதாக வும் பாடப்பரப்பு மற்றும் கேள்வி யின் வகை அமைப்பு, தேர்வின் படி நிலை சார் நெருக்கடிகளின் ஒரு மித்த செயற்பாட்டு விளை வுகளை எதிர்காலத்தில் எவ்வாறு நோக்கு வது என்பது சம்பந்த மாகவும் அமையப் பெறும். எனினும் தொழில் சார்முறைஅழுத் தங்கள், நெருக்கடி கள் குறித்த தொழில் அல்லது வகை, தகுதி நிலை, இடர்முகாமைத்துவத்தின் தன்மை, வள ஒதுக்கீடு, திட்டமிடலும், அமுல்படுத்தலும், பொது நிர்வாகத்திறன், தொடர்பாடல், நிறுவனத்தின் உளவியல்சார்பங்கு, மனித வளப்பயன்பாடு என பல்வேறு காரணிக ளுடன் புறக் காரணிகளான சமூக, பொருளா தார, அரசியல், தொழில்நுட்ப, சட்டக்கார ணிகளின் செல்வாக்கினையும் கொண்ட தாகக் காணப்படும்.

குறிப்பாக அழுத்தம், நெருக்கடி சமூக, தனிநபர் மற்றும் தொழில்துறைசார் கார ணிகள் ஊடாக உற்று நோக்கப்படுகின்றது. சமூக மட்டத்திலான அழுத்தம் மக்கள் சேவையின் மேல் ஒரு நெருக்கடியைத் தோற்றுவிப்பதாகவும் தனிநபர் மட்டத்தினை அழுத்தம், நெருக்கடி நோய், சுகவீனத் தன்மையை மற்றும் நடத்தையில் மாற் றங்களை ஏற்படுத்துவதையும் தொழில்



துறைசார் நெருக்கடி, அழுத்தம் வினைத் திறன் அற்ற தன்மை மற்றும் விபரீத விபத் துக்களை ஏற்படுத்துவதையும் அனுபவ ரீதியாக அறிய முடிகிறது.

எனினும் மேல் குறிப்பிட்டவாறு குறித்த ஒரு மட்டத்தினை அழுத்தம், நெருக்கடி அவசியமானதொரு செயற்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கோ அல்லது அடையக் கூடிய ஓர் இலக்கினை எட்டுவதற்கோ தூண்டுதல் சக்தியாக அமைவதையும் அனுபவ வாயிலாக உணர முடியும். ஓட்ட வீரன் ஒருவன் கடினப் பயிற்சியின் பின் வெற்றி வாகை சூடுவதும், தலைவர்கள் கடின உழைப்பின் பயனாக வாழ்வின் உயர் நிலை அடைவதும் இதற்கு ஒரு சில எடுத்துக் காட்டுகள்.

இருப்பினும் இன்றைய அதிநவீன உலகின் சர்வதேச மயமாக்கலும், தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அசுர வளர்ச்சியும் தொழிலாளர் வேலைப்பளுவை குறிப்பிட் டளவு இலகுபடுத்தினாலும், மறுபுறத்தில் வேலை இல்லாப் பிரச்சினையும் அதனுடன் தொடர்புபட்ட பொருளாதார நிதியியல் நெருக்கடி நிலைமைகளும் முழுச் சமுதாயத் துக்குமே நெருக்கடியைப் பல்வேறு வழிகளில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. பொது வான வேலைசார் அழுத்தம் குறித்த

> வேலைசார் அழுத்தம் அல்லது நெருக்கடி என்ற பதம் பொதுவாகத் தீமையான காரணியாக நோக்கப்படுகின்ற போதிலும், உண்மையிலே குறித்த மட்டம் வரையான வேலை சார் நெருக்கடி நன்மையான பல விடயங்களைச் செயற் படுத்த ஊக்கும் ஒரு கருவியாகவே அடையா ளம் காணப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் கட்டமைப்பு, அதன் கலாசாரம், உள்ளார்ந்த தகவு, சட்டம், தொடர்பாடல், தொழில்தன்மை, தொழில் விவரணம், தனிநபர் உறவு, தொழில்சார் முன்னேற்றம் மற்றும் தொழில் திருப்தி ஆகிய காரணிகளில் பெரிதும் தங்கியுள்ளது.

இதனுடன் தொடர்பாக தனிநபர் காரணிகளான பௌதிகத் தோற்றம், உடல் தகுதி நிலை, உளநல செயற்பாடுகள் என்பனவும் குறித்த தொழில்சார் நெருக்கடியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகக் கொள்ளப்படு கின்றன.

இவ்வாறான அழுத்தம், நெருக்கடிகள் பௌதிகப் பிரச்சினைகளாகவும், மனநலமின்மைப் பிரச்சினைகளாகவும் நடத்தையில் மாற்றங்க ளாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. உயர் குருதி அழுத்தம், இதயநோய்கள் பேரன்ற கடின அபாயம் தரும் தோல்கள் தொடக்கம் தலைவலி, ஒவ்வாமை, நித்திரையின்மை, உணவு உட்கொள்ளாமை அல்லது அதிகமான அளவு உணவு நுகர்வு, குடல் அழற்சி அல்லது வயிற்றுப் புண் போன்ற நோய்க்குறிகளை உருவாக்கும் தன்மை உடலியற் பிரச்சி னைகளாக இனங்காணப்பட்டுள்ளன. உளநல மின்மை சம்பந்தமாக, அளவுக்கு அதிகமாக உணர்ச்சி வசப்படல், அக்கறையின்மை, அசட்டைத் தன்மை, உற்றுநோக்கும் தன் மையை இழத்தல், மறதி, தன்நம்பிக்கையினை இழத்தல் கவலை மற்றும் உதவியற்ற நிலைமை போன்று உணர்தல் ஆகிய செயற் பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வேலைசார் அழுத்தம், நெருக்கடியினை முகாமை செய்வதன் ஊடாக சிறந்த வினைத் திறன் மிக்க தொழிலாளர் வளத்தைப் பேணி தனிநபர் இலக்குகளை அடைவதன் மூலம், உரிய இலக்குகளை எட்டி, உள மற்றும் பொரு ளாதார ரீதியில் வெற்றியடையலாம்.

---

## தவக்காலச் சிந்தனை



# பெரிய வியாழனின் செய்தி

இந்த வருடம் பெரிய வியாழன் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதியாகும். இயேசு கிறிஸ்து சிலுவையிலே அறையப்பட்ட தினத்துக்கு முந்திய தினமாக பெரிய வியாழன் அமைகின்றது. இதனை ஆங்கிலத்திலே maundy thursdayஎன்பர். அந்த நாளின் இரவு நேரத்தில்தான் இயேசுக் கிறிஸ்து யூதர்களினாலும், உரோமப் போர் வீரர்களினாலும் பிடிக்கப்பட்டார். அவர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் தமது சீடர்களோடு இரவு உணவை உட்கொண்டார். அத்துடன் திருச்சபையிலே நற்கருணை விருந்து அல்லது திருப்பலி என்ற சடங்கு ஆரம்பமாகின்றது.

அன்றிரவு தமக்கு நடக்கவிருக்கும் துயரத்தை இயேசு பிரான் அறிந்திருந்தார். பெரிய வியாழன் இயேசுவின் வாழ்க்கையிலே மிகவும் பயங்கரமான இரவாகும். தன்னுடைய சீடர்கள் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பதையும் அவர் அறிந்து இருந்தார்." மேய்ப்பனை வெட்டுவேன். மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்" என்று எழுதியிருக்கிறபடி இந்த இரவிலே நீங்கள் எல்லோரும் என் விடயமாய் இடறி விழுவீர்கள் என்றார். அப்பொழுது பேதுரு என்ற பிரதான சீடன் உமது விடயமாய் எல்லாரும் இடறினாலும் நான் ஒருக்காலும் இடறேன் என்றார்.

யூதாசைக் குறித்து இயேசுபிரான் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.

இராப் போசனம் முடிந்த பின்பு அவர்கள் ஒலிவமரத் தோப்புக்குச் சென்றார்கள். இயேசு பிரான் எதிர்பார்த்த பயங்கர சம்பவம் நடைபெற்றது. யூதாஸ் அவரை முத்தமிட்டு உரோமப் போர் வீரருக்கும், யூதருக்கும் காட்டிக் கொடுத்தார். சீடர்கள் நாலாதிக்கும் பயந்து ஓடினார்கள். பேதுரு உமது விடயமாய் எல்லாரும் இடறினாலும் நான் ஒருக்காலும் இடறேன் என்று கூறியிருந்தார்.

ஆனால் அன்று அவரும் சேவல் கூவுவதற்கு முன் மூன்று தரம் இயேசுக் கிறிஸ்துவுக்கும் தனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. நான் அவரை அறியேன் என்று மறுதலித்துவிட்டார்.

அந்தப் பயங்கரமான இரவிலே அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும், அவரை மூன்று முறை மறுதலித்த பேதுருவும் என்ன செய்தார்கள் என்று சிந்தித்துப் பார்ப்பது நமது ஆன்மாவுக்கு ஆரோக்கியமான விடயமாகும். பேதுரு தன்னுடைய செயலை நினைத்து மெய்யாகவே மனம் வருந்தினார். ஆனால் அவரோடு மூன்று வருடங்கள் நெருங்கிப் பழகியதினால் அவரிடத்தில் இரக்கமும், மன்னிப்பும் உண்டென அறிந்திருந்தார். எல்லாவற்றையும் அறிந்திருக்கிற ஆண்டவர் உயிர்த்து எழுந்த பின் சீடர் எல்லாருக்குள்ளும் பேதுருவுக்கே முதலில் காட்சி அளித்திருந்தார். கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதற்காக உரோமாபுரி வரையும் சென்றார்.

ஆனால் யூதாஸ் இயேசுக் கிறிஸ்துவோடு மூன்று வருடம் நெருங்கி வாழ்ந்த பொழுதிலும் அவரை பூரணமாக அறியவில்லை. இயேசுவைக் காட்டிக்கொடுத்தது குறித்து அவன் மிகவும் வேதனை அடைந்தான். தனக்குக் கொடுக்கப்பட்ட 30 வெள்ளிக் காசை பிரதான ஆசாரியரிடத்துக்கும், மூப்பரிடத்துக்கும் திரும்பக் கொண்டு போய் கொடுக்க எத்தனித்தான். அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கவே அந்தப் பணத்தை தேவாலயத்தில் எறிந்து விட்டு நான்று கொண்டு செத்தான். நம்மிலும் பலர் யூதாஸ்காரியோத்தை போல் இருக்கின்றனர். தவறு செய்து விட்டால் மன்னிப்பே கிடையாது என்று வேதனைப் படுகின்றனர். கவிஞர் கண்ணதாசன் யூதாஸின் மரணத்தைக் குறித்து பின்வருமாறு எழுதினார்.

"அன்னையின் வயிற்றில் பிறந்த உயிர் முழக்கயிற்றில் தொங்கட்டும் சாவே வாராய்"

ஓர் இறையியல் அறிஞர் யூதாஸ் காரியோத்து கயிற்றில் தொங்காமல் இயேசுவின் கழுத்தில் தொங்கி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நாம் எத்தகைய பாவத்தை செய்தாலும் அதற்காக மனங் கசந்து அழுதால் இறைவன் மன்னித்து விடுவார். பேதுருவுக்கு தெரிந்த இந்த உண்மை யூதாஸ்"க்கு தெரியவில்லை. பெரிய வியாழனன்று இதனைக் குறித்தே நாம் சிந்திக்க வேண்டும். சோதனைகள், துன்பங்கள் ஏற்படுகின்றபோது நாம் தவறிழைக்கின்றோம். ஆனால் அவற்றிலிருந்து மீண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டுமே ஒழிய நம்மையே நாம் அழித்துக் கொள்ளக் கூடாது.

**கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகள்**



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும். குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.



**இடபம்**: குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். உடன்பிறந்தவர்களின் நீண்டநாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.



**மிதுனம்**:வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.



**கடகம்**: முன்னர் முடிக்க முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.



**சிங்கம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப் போவீர்கள்.



**கன்னி**: வீண் பதற்றம் வந்து செல்லும். கடனாகக் கொடுத்த பணத்தைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.



**துலாம்**: அயலில் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். அடுத்தவர்களைக் குறை கூறுவதை நிறுத்துங்கள். மற்றவர்களுக்கு நியாயம் பேசப் போய் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரும். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம்.



**விருச்சிகம்**: பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.



**தனுசு**: வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வாகனப்பழுது நீங்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.



**மகரம்**: எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பாக்கிகளை விரைந்து வசூலிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.



**கும்பம்**: எதிலும் அவசரப்பட வேண்டாம். பிற்பகல் முதல் குடும்பத்தில் இருந்த சச்சரவு நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் உடனே முடியும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.



**மீனம்**: சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றப் போராட வேண்டியிருக்கும். எவருமே உங்களை புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள்.

## நாளை

**சித்திரை-05 வெள்ளிக்கிழமை | 18.04.2014**

திதி: திருதியை மு.ப.11.13 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.இ.10.34 வரை

சுபநேரம்: 06.03-07.33 வரை
இராகுகாலம்:.10.33-12.03 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### மன ஒருமைப்பாடு

'சுவாமி விவேகானந்தர் இரண்டாம் முறையாக 1899—1900 — இல் மேலை நாடுகளுக்குச் சென்றார். 1900 — ஆம் ஆண்டின் முற்பகுதியில், கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், அவர் அருட்பணி ஆற்றினார்.நான் சான்பிரான்சிஸ்கோ நகரத்தில் வசித்து வந்தேன். எனக்கு அப்போது வயது இருபத்திரண்டு... 1900 — ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து , மே மாதம் வரை அவர் நிகழ்த்திய சுமார் இருபது சொற்பொழிவுகளைக் கேட்டு, அவற்றில் பதினேழு சொற்பொழிவுகளை எழுதி வைத்திருக்கின்றேன்...

சான்பிரான்சிஸ்கோ, ஓக்லாந்து, அலமேடா ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தேவாலயங்களிலும், அலமேடா,சான்பிரான்சிஸ்கோ சத்திய இல்லங்களிலும், வாடகை மண்டபங்களில் இந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. நாள்தோறும் சுவாமிஜி பேட்டிகள் அளிப்பார் ; தனிப்பட்ட வகுப்புகள் நடத்துவார். இவை தவிர மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் முப்பது அல்லது நாற்பது முக்கிய சொற்பொழிவுகள் நிகழ்த்தி னார். என்னுடைய குறிப்புகளில் தவறுகள் பல இருந்தால் இந்தச் சொற்பொழிவுகளைத் திருப்பி எழுதி வெளியிட நான் நீண்டகாலம் தயங்கினேன். இந்தச் சொற்பொழிவுகளை பிரதி எடுத்த போதுதான் நான் புதிதாகச் சுருக்கெழுத்து கற்றுக் கொண்டிருந்தேன். சுவாமிஜியின் வெள்ளப் பெருக்கு போன்ற சொற்பொழிவை அப்புடியே எழுதுவதற்கு, நிமிடத்துக்குக் குறைந்தது முந்நூறு சொற்கள் எழுதும் வேகம் வேண்டும். இதில் பாதிக்கும் குறைந்த வேகமே எனக்கு அப்போது இருந்தது. மேலும், அந்தச் சமயத்தில், இந்த சொற் பொழிவுகள் என்னைத் தவிர மற்றவர்களுக்குப் பயன்படும் என்ற எண்ணமும் எனக்கு இல்லை. சுவாமிஜிக்கு வேகமாகப் பேசும் திறமையுடன் உயர்ந்த நடிப்பாற்றலும் இருந் தது. அவர் கூறும் கதைகளையும் அவற்றில் வரும் பாத்திரங்களையும் போல் அவர் நடிப்பதையும் காணும் ஒருவர், எழுதுவதை விட்டுவிட்டு அவர் பேச்சையும் நடிப்பையும் கண்டு அனுபவிப்பதில் தான் ஈடுபடுவார். நான் எடுத்த குறிப்புகள், தொடர்பற்று ஓரளவு துண்டு துண்டுகளாக இருந்தாலும், அதன் கருத்துக்கள் போற்றிப் பாதுகாக்கத்தக்கவை. எனவே அவற்றை வெளியிட வேண்டும் என்ற கருத்துக்கு இணங்கினேன்.

## நான்கு கை, கால்களுடன் பிறந்த குழந்தை

சீனாவில் பிறந்த ஒரு ஆண் குழந்தைக்கு நான்கு கைகள் மற்றும் கால்கள் இருந்தன. இந்தக்குழந்தையை பரிசோதித்து அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்கள் வெற்றிகரமாக கைகள் மற்றும் கால்களைப் பிரித்தெடுத்தனர்.



கருவில் இரட்டைக் குழந்தைகளாக இருந்த குழந்தைகளில் ஒன்று சரியான வளர்ச்சி பெறாததால் மற்றொரு குழந்தையின் உடலில் அதிக எண்ணிக்கையில் கைகள் மற்றும் கால்கள் வளர்ந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பிறந்த இந்த குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள், கருவில் இரட்டைக் குழந்தைகளாக இருந்த குழந்தைகளில் ஒன்று சரியான வளர்ச்சி பெறாததால், மற்றொரு குழந்தையின் உடலில் அதிக எண்ணிக்கையில்' கைகள் மற்றும் கால்கள் வளர்ந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்தக்குழந்தை பிறந்த போது 3 கிலோ எடையுடன் இருந்ததாகவும், அறுவைச் சிகிச்சைக்கு முன்னதாக நிமோனியா மற்றும் இதய நோயால் குழந்தை பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் குழந்தையின் தந்தை சென் கூறுகையில் எனது மனைவி கர்ப்பிணியாக இருந்தபோது 5 பரிசோதனை மையம் மற்றும் மருத்துவமனைக்குச் சென்று பரிசீலனை செய்தோம். ஆனால் எந்த ஒரு மருத்துவரும் குழந்தை இயற்கைக்கு மாறாக உள்ளது என்று தெரிவிக்கவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 3 | | 6 | 2 | 9 | |
| | | 2 | | 5 | | | 8 | |
| 9 | | | | | 4 | | 6 | |
| 2 | 3 | | 9 | 6 | 7 | 5 | | |
| 1 | | | | | | | | 7 |
| | | 8 | 4 | 1 | 5 | | 2 | 3 |
| | 1 | | 6 | | | | | 2 |
| | 2 | | | 7 | | 4 | | |
| | 9 | 3 | 8 | | 2 | | | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 1 | 5 | 2 | 6 | 3 | 4 | 9 |
| 6 | 5 | 9 | 4 | 7 | 3 | 1 | 2 | 8 |
| 2 | 4 | 3 | 8 | 1 | 9 | 6 | 5 | 7 |
| 8 | 6 | 2 | 1 | 5 | 4 | 7 | 9 | 3 |
| 3 | 1 | 5 | 7 | 9 | 2 | 8 | 6 | 4 |
| 9 | 7 | 4 | 6 | 3 | 8 | 5 | 1 | 2 |
| 1 | 2 | 8 | 9 | 6 | 7 | 4 | 3 | 5 |
| 4 | 3 | 6 | 2 | 8 | 5 | 9 | 7 | 1 |
| 5 | 9 | 7 | 3 | 4 | 1 | 2 | 8 | 6 |

## இனி ஒரு உலகம் செய்வோம்.....

மனிதத்துக்கு அர்த்தம் கொடுத்து
வாழ்வின் உண்மையையும்
உண்மையான மனிதர்களையும்
தேடிய போது,
எஞ்சியது 'தேவைகள்'
மட்டுமே! வேறெதுவுமில்லை
தேவைகளைத் தேடிய போது
தேடிய இடங்களிலெல்லாம்
இயந்திர வாழ்க்கையும்
இறுகிப் போன சூழலும்
இத்துப் போகும்
மாண்புமிகு வாழ்க்கையுமே!

மானுடத்தின் நேசமும்
ஆதரவும் ஆன்மிகமும்
புன் சிரிப்பும் புனிதமும்
உள்ளார்ந்தமும் போய்
இறுக்கத் தனமும்
இறுகப்பற்றும்
செயற்கைத்தனமுமே
எங்கும் நிறைந்திருக்கின்றன
சூனியமான வாழ்க்கைக்கு
முற்றுகை போட்டு...
புன்னகைத்து பேசுதலுக்கும்
உண்மைக்கும்
இறை தரிசனத்துக்கும்
அர்த்தம் கொடுத்து
இனி ஒரு புது உலகம் செய்வோம்

உலகிற்கேற்ப பலர்
மாறுகிறார்கள் - ஆனால்
ஒரு சிலர் உலகை தமக்கேற்ப மாற்ற
முனைகிறார்கள்...
எதுவாயினும்
எல்லோரும் இன்புற்றிருக்க
மனிதத்துவம் மேலோங்கும்
புத்தெழுச்சி தரும்
புது உலகு செய்வோம்!



## இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம் நேற்றைய நினைவுகள்

### விமர்சனம்

இன்றைய இளம் சமுதாயத்தினர் ஒவ்வொருவரும் ஏதோ ஓர் இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைய இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம் நேற்றைய நினைவுகளா? நாளைய கனவுகளா? என்று பார்க்கும்போது நேற்றைய நினைவுகள் தான் அவசியம் என்றுதான் கூறவேண்டும்.

அந்த வகையில் கலாசாரத்தைப் பார்க்கும் போது அந்த நாள் கலாசாரம் பெரியோரை மதித்துப் போற்றத்தக்க ஒரு கலாசாரமாகக் காணப்பட்டது. இன்றைய நாள்களில் பெரியோரின் அறிவுரையைப் பிள்ளைகள் ஏற்று நடப்பதென்பது நூற்றுக்கு பத்து வீதமானதாகத்தான் இருக்கும்.

கைத்தொழில் பொருளாதாரத்தில் கூட அன்றைய நாள்களில் அவர்கள் சிரமப்பட்டு வேலை செய்தார்கள். ஆனால் அவர்களுக்கு எந்த நோய் நொடி கூட இல்லை. தற்காலத்தில் ஒவ்வொரு வேலைகளுக்கும் ஒவ்வொரு இயந்திரங்களைப் பாவித்து நோய் நொடிகளால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

அன்றைய நாள்களில் சீரான மழையால் விவசாயத் துறையில் பல முன்னேற்றங்களைக் கண்டார்கள். தற்காலத்தில் மழை வேண்டிக் கொடும்பாவி எரிக்கிறார்கள். அந்த அளவுக்கு இன்றைய சமுதாயம் சீரழிந்து செல்கிறது.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் கஷ்டப்படக் கூடாதென்று தான் நினைப்பார்கள். ஏனெனில் தாம் பட்ட கஷ்டங்களைத் தமது பிள்ளைகளும் படக் கூடாது என்று சொல்லிச் சொல்லி வளர்ப்பார்கள். இதன் மூலம் பிள்ளைகள் நல்லதொரு எதிர்காலத்தை நோக் கிப் பயணிப்பார்கள்.

எனவே இன்றைய இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம் நேற்றைய நினைவுகள்.

*இனியவள், புலோலி.*

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.............................................

முகவரி :-.........................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**இளவல்கள் வட்டம்** ,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நீங்களும் எழுதலாம்....

**இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம்**

**நேற்றைய நினைவுகளா? நாளைய கனவுகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## காதல்

பூவுக்குள் -புயல் வீச
உணர்வுக்குள் உயிர்துடிக்க
யாருக்கு தெரியும்...?
யாருக்குத் தான் சொல்வது
எப்படி இதை வெல்வது...?

காற்றில்லை பறக்கிறேன்
கண் மூடிச் சிரிக்கிறேன்
பல நிறங்களில் பலவிதமாய்
பட்டாம் பூச்சி
கனவா..., அல்ல
நனவா?
தெரியவில்லை எனக்கு

காதலின் மகிமை
சொல்ல வந்து
மூச்சிரைத்து - நிற்கிறேன்
முடிந்தால் நீயும் (காதலி)




*சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி.*

## ஏமாற்றம்

மௌன சங்கீதமாய்
என் மனதில்
அமர்ந்திருந்து
காதல் புரட்சி செய்த
என்னவள்
இன்று
அடுத்தவனுக்கு
மாலை இடுவதற்கு
மண மேடை வருகிறாள்

*இடைக்காடு, க.செல்வமலர்.*



## சிந்தித்தால் வாழ்வில் வெற்றி

குறிக்கோளில் செலுத்தும் கவனத்தைப் போலவே, அதை அடையும் பாதையிலும் கருத்தைச் செலுத்துங்கள். ஒவ்வொரு உயிரிலும் உறைந்திருக்கும் தெய்வீக சக்தியை வெளிக்கொண்டு வருவது தான் நம் வாழ்வின் இலட்சியம்.

தன்னை அடக்கியாளப் பழகியவன் ஒருபோதும் புற உலக விடயங்களுக்கு அடிமையாகமாட்டான். அத்தகையவனே உலகில் வாழத் தகுதி படைத்தவன் ஆகிறான். ஒருவன் நெருப்பில் கூட தூங்க முடியும். ஆனால், வறுமை நிலையில் கண்மூடித் தூங்க முடியாது.

மனமும், உடலும் ஒருமித்து இருக்கும்போது எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதில் வெற்றியே கிடைக்கும்.

பசியால் நலிந்து வாடும் ஏழைகளிடம் ஆன்மிகம் பேசுவது அவர்களை அவமதிப்பதாகும்.



கிருபா, கொடிகாமம்.

# அரசு தனது இருப்பை தக்க வைக்க மீண்டும் புலிப் பூச்சாண்டி காட்டுகிறது

## சரத் பொன்சேகாவுடனான சந்திப்பில் மனோ தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.17

இலங்கை அரசு தனது இருப்பை தக்க வைப்பதற்காக நாட்டில் மீண்டும் புலிப் பூச்சாண்டி காட்டுகின்றது. இந்தப் புலிப்பூச்சாண்டி தொடர்பில் சிங்கள மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு, சிங்கள எதிர்க் கட்சிகளுக்கு உண்டு. அந்த வகையில் ஜனநாயகக் கட்சி இதனை மக்களிடம் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். இவ்வாறு ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவுடனான சந்திப்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியினருக்கும், ஜனநாயகக் கட்சியினருக்கும் இடையேயான கலந்துரையாடல், ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஜனநாயகக் கட்சியின் தலைவர் மனோகணேசன் கருத்துத் தெரிவிக்கையில்:-

**புலிப் பூச்சாண்டி**

புலிகள் இயக்கம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு வருகிறது என்று கூறித் தமிழ் மக்கள் மீது புதிய பொலிஸ் - படைத்தரப்பு கெடுபிடிகளை முன்னெடுக்கும் முயற்சிகள் தென்படுகின்றன.

இந்த முயற்சிகளின் பின்னால் உள்ள அரசியலை சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மிகத்தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் சரியும் செல்வாக்கை நேர்ப்படுத்த அரசு திட்டம் போடுகிறது. இந்தப் புலிப் பூச்சாண்டி அரசியலைத் தொடர விட்டால் அது இந்த நாட்டில் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிரணிக் கட்சிகளுக்குக் கூட தமது ஜனநாயக அரசியலைச் செய்யமுடியாத நிலைமையை உருவாக்கிவிடும்.

புலிகள் இயக்கத்தை மீண்டும் உயிர்ப்பிக்கவேண்டிய அரசியல் சூழல் தமிழ் மக்கள் மத்தியில் இன்று கிடையாது. ஐக்கிய இலங்கைக்குள் தமது தேசிய அரசியல் உரிமைகளை பேச்சு, ஜனநாயக போராட்டங்கள், சர்வதேச நகர்வுகள் மூலமாகவே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இன்று தமிழ் மக்கள் திடமாக இருக்கின்றார்கள்.

புலி உறுப்பினர்கள் என்று சொல்லப்பட்ட சிலர் கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் கொல்லப்பட்ட சம்பவங்கள் மக்கள் மத்தியில் பலதரப்பட்ட கேள்விகளை எழுப்பியுள்ளன.

இந்தப் புதிய சூழல் மீண்டும் பழைய கெடுபிடிச் சூழலை உருவாக்கி விடுமோ என தமிழ் மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். வெளிப்படைத் தன்மையற்ற செய்திகள் காரணமாக, சிங்கள மக்கள் மத்தியிலும் இச்சம்பவங்கள் பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளன.

**ஜெனிவா பலிக்கவில்லை**

மேல்மாகாணத்திலும், தென்மாகாணத்திலும் நடந்து முடிந்த மாகாணசபை தேர்தல் முடிவுகள் மூலம் அரசின் செல்வாக்கு சரிந்து வருவது தெரிகிறது. ஜெனிவா மனித உரிமை சபைக் கூட்ட தொடர் வேளையில் திட்டமிட்டு இங்கு தேர்தல்கள் நடத்தப்பட்டாலும் ஜெனிவா மனித உரிமை சபையுடன் தொடர்புபடுத்தி அரசு மேற்கொண்ட பரப்புரையை சிங்கள மக்கள் கணக்கில் எடுக்கவில்லை.

எனவே ஜெனிவாவை விட்டுவிட்டு இங்கே வடக்கில் மீண்டும் புலிகள் வந்துவிட்டார்கள் என்ற பரப்புரையை அரசு கையில் எடுத்துள்ளதா என்றும், இதன் மூலம்சிங்களமக்களின் மனதைவென்றுதனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள இந்த அரசு முயற்சி செய்கிறதா என்றும் கேள்விகள் தென்னிலங்கையிலே எழுந்துள்ளன. இந்தப் புலி பரப்புரையை முன்னிறுத்தி பரவலாக நாடு முழுவதும் கைதுகள் இடம் பெற்றுள்ளன. கொழும்பிலும் இடம்பெற்றுள்ளது. மீண்டும் பழைய சோதனைச் சாவடிக் கால கட்டம் வந்துவிடுமோ என்ற கேள்விகள் எழுகின்றன. ஆயுத கலாசார நோக்கங்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் இடம் இல்லை. இந்த நிலையில் மீண்டும்கெடுபிடி யுகத்துக்குள் பிரவேசிக்கத் தமிழ் மக்கள் தயார் இல்லை என்ற செய்திகளை பெரும்பான்மை கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்- என்று சந்திப்பில் தாம் குறிப்பிட்டதாக அவர் தெரிவித்தார். (ச-5)

---

## மரண அறிவித்தல்



**திருமதி சந்திராதேவி இராஜதுரை**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பரவிப் பாஞ்சான் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும், வெள்ளவத்தை கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திராதேவி இராஜதுரை கடந்த 15.04.2014 இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லை நாதன் - பானுமதி தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்ற ஐயாத்துரை இராஜதுரையின் (தொழில்நுட்ப உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி) அன்பு மனைவியும், வாசுகி (ஓய்வுபெற்ற ஆசிரியை - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற ஜெகதீசன், வேலீசன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற மனோகரன், சசிகலாதேவி ஆகியோரின் மாமியும், சாரதாஞ்சலி (உதவி பிரதேச செயலாளர் - வவுனியா), சண்முகப்பிரியா (Call Centre Manager Chinese Dragon Cafe), ராஜீசன் (Commercial Credit & Finance PLC), பிரதீசன் (First Source Dialog Solutions PVT Ltd) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (17.04.2014) வியாழக்கிழமை காலை முதல் பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின் மாலை 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் (சி.13360)(45.6.3)

077 659 9791/ 077 733 7419

---

## பொதுக் கூட்டம்

வரணி, ஏப்.17

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சத்தியசீலன் இந் நிகழ்வுக்கு அதிதியாகக் கலந்து கொள்வார். (வ-122)

◆◆◆

வரணிப் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு சங்கத் தலைவர் மருத்துவர் வீ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெறும். கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (வ-122)

◆◆◆

கல்வளை முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தலைவர் ஆ.தம்பாப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)

---

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பௌதீகவியல் ஆசிரியர்

சோ.சசிகரன் அவர்களின் தந்தையார்

**சாமிகந்தையா சோமசுந்தரம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு: அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்கு சகல ஆசிரியர்களையும் இன்று (17.04.2014) காலை07.30 மணிக்குப் பாடசாலை முன்றிலில் கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(46849) (12.3.6) ஆசிரியர் வட்டம், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

---

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி மதுரா சிவகலாபன்**



மண்ணுலக வாழ்வின்
இன்பங்கள் வேண்டாமென்று
விண்ணுலகு சென்றவளே!
அங்கு உம் வாழ்வு இன்பமாக
அமைய இறைவனை
பிரார்த்திப்பதோடு, அன்னாரின்
பிரிவால் துயருறும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
**பாலதர்ஷி ஸ்ரோர்ஸ்.**
மாவிட்டபுரம் வீதி, கோப்பாய். (46850) (4.3.6)

---

## 24 ஆம் ஆண்டு நினைவலைகள்

**திருமதி பூரணம் இளையதம்பி**



(தேவி ஆச்சி,
ஏழாலை தேவி கோயில் ஸ்தாபகர்)

தோற்றம் 05.07.1908 — மறைவு 11.05.1990

திதி: துதியை

ஏழாலைக்கென்றோர் எழிலார் துர்க்காதேவிக்கு
வாழாலையஞ் சமைத்த வல்லாட்டியே
என்றும் உங்கள் நினைவுடன் பாதம் பணிந்து நிற்கும்

(46841)(2.6.3)

ஏழாலை மேற்கு, ஏழாலை. மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

---

## மரண அறிவித்தல்

**திருமதி மேரீஸ்ரெலா (டெய்சி) நீற்ரையா**



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிஸ்ரெலா (டெய்சி) நீற்ரையா 14.04.2014 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை எலிசபெத் தம்பதியினரின் மகளும், நீற்ரையாவின் அன்பு மனைவியும், சகாயராணி(சுவிஸ்), விஜியராணி(கனடா), மரியநேசன்(கனடா), லூட்ஸ் சுதர்ஷினி(சுதா), பஸ்ரியண்டினேஸ் ஆகியோரின் பாசமிகு தாயும், யோகபாலன்(சுவிஸ்), குயின்ரன்(கனடா), தர்ஷிகா(கனடா), நிமல்யூட் (மலேசியா), ஜெயனி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான பட்டுத்துரை, பொலின் மற்றும் அன்ரனி பெர்னாண்டோ சந்தியாப்பிள்ளை, இம்மானுவேல் ஆகியோரின் சகோதரியும் விவேக் றெக்னோ, றெபேக்கா, ஜோனாத்தன், ஜெசிக்கா, மிக்ஸ்ரிக்கா, றொம்ஸ்ரன், றெனோன், நிலுக்சன், நிரேக்கா, மெலோனி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (21.04.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33A.P Lane, Navanthurai, Jaffna.
T.P 075 040 3675, 077 697 4058

(46790) (4.3.6)

தகவல்: குடும்பத்தினர்.

---

## பொலிஸ் ஜீப் ஹைஏஸ் விபத்து

பொலிஸ் ஜீப்பும் ஹைஏஸ் வாகனமும் மோதிக் கொண்டதில் இரண்டு வாகனங்களும் சேதம் அடைந்த போதிலும் குறிப்பிட்ட விபத்தில்எவரும்காயம் அடையவில்லை.

நேற்றுமுன்தினம்மாலை காங்கேசன் துறை வீதியின் மல்லாகம் மில் ஒழுங்கையில் பொலிஸாரின் ஜீப் திரும்ப முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. உடனடியாக குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-86)

---

## கண்ணீர் அஞ்சலி

**சாமிகந்தையா சோமசுந்தரம்**

(த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் - முன்னாள் பணியாளர்)



கடந்த 14.04.2014 இறைவனடி சேர்ந்த எமது முன்னாள் பணியாளர் சாமிகந்தையா சோமசுந்தரம் அவர்களின் பிரிவால் துயருற்றுள்ள அன்னாரது குடும்பத்தின ருக்கு எமது அனுதா பங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**உரிமையாளர்களும், பணியாளர்களும்**


த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ், த.குமாரசாமி அன் சன்ஸ்,
42, 44, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி13640) (12.3.6)

# 8 ஆவது வாரப் பரிசு மழையில் நனைந்த வெற்றியாளர்கள்



அ.வசந்தகுமாரி, அ.அக்ஷனா ஆகியோருக்கான பரிசுக்கூப்பன்களை உதயன் ஆசிரியர்களுள் ஒருவரான எஸ்.பெருமாள் வழங்கினார்.



க.தர்சனா, இ.சுமதி, அ.பிறிற்ரிகா ஆகியோருக்கான பரிசுக் கூப்பன்களை எம்.சி.எஸ். ஐ.ரி.கம்பஸ் இயக்குநர் சி.சிவாஸ்கரன் வழங்கினார்.



செ.தம்பு, செ.தமிழினி ஆகியோருக்கான பரிசுக்கூப்பன்களை எம்.சி.எஸ். ஐ.ரி.கம்பஸ் சீமா கற்கைநெறி இணைப்பாளர் ப.கோகுலன் வழங்கினார்.



ஜெ.சசீலா, ஸ்ரீ.வித்தியசாளினி ஆகியோருக்கான பரிசுக்கூப்பன்களை உதயன் நூலகப் பொறுப்பாளர் எஸ். செல்வராசா வழங்கினார்.



பா.சுவர்ணகுமாருக்கான பரிசுக்கூப்பனை உதயன் விளம்பரப் பகுதிப் பொறுப்பாளர் எம்.சதீஸ் வழங்கினார்.



க.ஜீவிதா, நா.கல்யாணி ஆகியோருக்கான பரிசுக் கூப்பனை சந்தைப்படுத்தல் விரிவாக்கல் அலுவலர் தி.மயில்வாகனம் வழங்கினார்.



மு.ஜெகரோம், தா.செல்வநாதன் ஆகியோருக்கான பரிசுக்கூப்பன்களை சந்தைப்படுத்தல் விரிவாக்கல் அலுவலர் ஆர். விநோதன் வழங்கினார்.



சி.தவராசா, அ.அபினா ஆகியோருக்கான பரிசுக்கூப்பனை குழுமத் தலைவர் பணிமனை அலுவலர் க.இந்திரமோகன் வழங்கினார்.

யாழ்ப்பாணம், ஏப்.17

சூரியகாந்தியின் கொண்டாடுங்கள் குதூகலியுங்கள் பரிசு மழையில் 06.04.2014 ஆம் திகதி வெற்றியாளர்களுக் கான பரிசுக் கூப்பன்கள் வழங்கும் நிகழ்வு புதன் கிழமை உதயன் பணிமனையில் நடைபெற்றது.

உதயன் ஆசிரியர்களில் ஒருவரான எஸ். பெருமாள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 50 வெற்றியாளர்களுக்கு பரிசுக்கூப்பன்கள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கான பரிசுக் கூப்பன்களை யாழ்ப்பாணம் எம்.சி.எஸ் ஐ.ரி கம்பஸ் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 பரிசுக் கூப்பன்களையும் யாழ்ப்பாணம் ஈ.கொம் கொம்பியூட்டர் ரிரெய்னிங் சென்ரர் தலா 3500 ரூபா பெறுமதியான 10 பரிசுக் கூப்பன்களையும் யாழ்ப்பாணம் ஜேர்மன் இன்சிரியூட் தலா 5000 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும் யாழ்ப்பாணம் நளின் இன்வோமேஸன் ரெக்னோலோஜி தலா 5000 ரூபா பெறுமதியான 2 பரிசுக் கூப்பன்களையும் சுன்னாகம் அபி பேபி மாட்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும் யாழ்ப்பாணம் வணிகா சேர்ஜிகல்ஸ் தலா 500 ரூபா பெறுமதியான 2 பரிசுக் கூப்பன்களையும் கோண்டா வில் தபேசன் அக்ரோ ஸ்ரோர் தலா 500 ரூபா பெறு மதியான 2 பரிசுக் கூப்பன்களையும் யாழ்ப்பாணம் நளின் இன்வோமேஸன் ரெக்னோலோஜி தலா 500 ரூபா. பெறுமதியான பெறுமதியான 2 பரிசுக் கூப்பன்களையும் பளை மோகன் ஸ்ரோர்ஸ் தலா 200 ரூபா பெறுமதியான 2 பரிசுக் கூப்பன்களையும் புதுக்குடியிருப்பு பொதிகை மல்ரி சென்ரர் தலா 200 ரூபா பெறுதியான 5 பரிசுக் கூப்பன் களையும் பருத்தித்துறை கனன் போட்டோ தலா 200 ரூபா பெறுமதியான 5 பரிசுக் கூப்பன்களையும் வழங்கியிருந்தனர். பரிசுக்கூப்பனில் குறிப்பிடப் பட்டுள்ள நிறுவனங்களில் பொருள்களை கொள்ள வனவு செய்ய முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10-21)

## மனிதனுக்கு கிடைக்கும் சுதந்திரத்தை எவ்விதம் பயன்படுத்த வேண்டும்

பிரித்தறியும் திறனைக் கடவுள் மனிதனுக்கு வழங்கியுள்ளார். அவன் இத்திறனை புலனடக்கத்துக்கும், புலன்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கும் உபயோகித்தல் வேண்டும். பிரித்தறியும் திறனை மனிதன் தவறாக உபயோகித்து, புலன்களுக்கு அடிமையாகி தவறான பாதையினை மேற்கொள்வானாகில், அவன் பயனுள்ள முறையில் செயற்படவில்லை என்றாகும்.

மனிதன் தனக்குக் கிடைத்த சுதந்திரத்தைப் புலனடக்கத்துக்கும், தன்னையும் அடக்கிக் கொள்ளவும் உபயோகித்தல் வேண்டும். அவன் புலன்களது சுதந்திரத்துக்கல்லாது. புலன்களினின்றும் சுதந்திரம் பெறவே முயல வேண்டும். உண்மையான சுதந்திரம் என்பது புலன் களையும் தன்னையும் கட்டுப்படுத்தி, தன் உணர்வு பெறச் செய்துஎல்லையில்லா ஆத்மானந்தத்தை அனுபவித்தல் ஆகும்.



நன்றி:தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

## விபத்துக்களைக் குறைப்பதற்கு புதிதாக 100 வீதி சமிக்ஞைகள்

### மே மாதம் முதல் அறிமுகம்

கொழும்பு,ஏப்.17

எதிர்வரும் மே மாதம் முதல் வீதி விபத்துகளின் எண்ணிக்கையை குறைக்கும் எண்ணத்துடன் அரசு புதிதாக 100 வீதி சமிக்ஞைகளை அறிமுகம் செய்யவுள்ளது.

சர்வதேச வாகனப் போக்குவரத்து சட்டவிதிகளுக்கு அமையவே அவை தயாரிக்கப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த இரு வாரங்களுக்குள் இதற்கான விசேட அரச வர்த்தமானி வெளியிடப்படும்.

பாதசாரிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள சமிக்ஞைகள், வீதிகள் மூடப்பட்டிருப்பதற்கான சமிக்ஞைகள், ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்கள் செல்வதற்கு தடைவிதிக்கும் சமிக்ஞைகள் ஆகியவற்றுடன் எரிவாயு உட்பட எரிபொருளை ஏற்றிச் செல்லும் வாகனாங் களுக்கான தடைகள் பற்றிய சமிக்ஞைகளும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

தற்போது பயன்படுத்தப்படும் வீதி சமிக்ஞைகளில் மாற்றங்களை செய்வதற்காகவே இந்தப் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இனி மேல் வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் இந்தப் புதிய 100 சமிக்ஞைகள் குறித்தும் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமாகும். என்று அவர் தெரிவித்தார். (ச)

### வாராந்த ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, ஏப்.17

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "அலங்காரம் பாடி அழகனைத் தொழுவோம்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை ஓய்வு நிலை இந்து கலாசார உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நிகழ்த்துவார். (வ-173)

### பாங்குரு கந்தசுவாமி ஆலய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.17

வட்டுக்கோட்டை பாங்குரு கந்தசுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன நவகுண்ட பஷ மஹாயாக பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 9.52-11.51 மணி வரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். (வ)

### மூத்த உறுப்பினர்களின் உருவப்படங்கள் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.17

நல்லூர் சங்கிலியன் மன்றம் அதன் ஆரம்பகால மூத்த உறுப்பினர்களின் உருவப்படங்களை இன்று வியாழக்கிழமை மன்றத்தில் திரை நீக்கம் செய்து வைக்கவுள்ளது.

இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் மன்றத்தின் மூத்த உறுப்பினர்களான அமரர்கள் அ.கோபாலரட்ணம், ந.விஜயேந்திரன், செ.காங்கேயன், செ.வைத்தியநாதர், செ.சண்முகதாஸ் ஆகியோரின் உருவப் படங்கள் திரை நீக்கம் செய்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் -2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக் கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE 6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப் படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள் சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

01. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
02. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப் படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப் படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் விதிக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா நூறு (100/-) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
02. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படா திருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தால் பூர்த்திசெய்யப் பட்டு "செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு" என்ற முகவரிக்கு 10.05.2014 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக் குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
04. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
05. ஆள்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னவராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பதிலும் விண்ணப்பம் நிராகரிக்கப் படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

பதவிகள் பற்றிய விவரங்கள்

| பதவி இல | பதவிகள் |
|---|---|
| 01 | வேலைத் தொழிலாளி – தரம் 111 |
| 02 | சுகாதாரத் தொழிலாளி – தரம் 111 |

சம்பள அளவுத்திட்டம் -

PL-1-2006A (11730-10X120-10X130-10X145-12X160-17600)

கல்வித் தகைமை

தரம் 8 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

கு.மிதிலைநாதன்,
செயலாளர்,
பிரதேசசபை புதுக்குடியிருப்பு

(C/13643)(10.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

அருள் ஒளி தர்சன மாலையும் சித்திரை புதுவருட விசேட பூஜையும்



வரமருளிக் காத்தருள்ள இராஜேஸ்வரி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் சித்திரை புதுவருட விசேட பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

நடமாடும் தெய்வமாகவும், அன்பான தாயாகவும், நல்வழிகாட்டும் குருவாகவும் விளங்கும் அபிராமி உபாசகித் தாயாரின் திருவடி பூஜையில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் நல்எண்ணமும், உள்ளத்தில் சாந்தியும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நோய் நொடியற்ற சுபீட்சமான வாழ்வும், தெய்வத்தின் அருட்கடாட்சமும் நிறைவாக கிட்டும்.
அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க விரும்பும் பக்தர்கள், அன்றைய தினம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

இடம் :
திவ்வியஜீவன சங்க மண்டபம்,
சட்டநாதர் கோயிலடி, நல்லூர்
காலம் : 20.4.2014
ஞாயிற்றுக்கிழமை
பகல் : 11 மணி

திருவருள் நிகழ்வுகள்:

- மங்கல வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்,
- காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆகியன வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திருப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் தொடர்புக்கு: Tel: 0045 97180192, 0045 40413431 Fax: 0045 97184192
யாழ் தொடர்புக்கு: 077 699 3861, 077 982 5004
www.abiramiamman.dk
www.nisaart.com

இந்த புது வருடத்தில் எல்லா மக்களும் சீரும் சிறப்பும் பெற்று ஆரோக்கியமாகவும் லட்சுமிகரமாகவும் வாழ எல்லாம் வல்ல அன்னையின் அருட்கடாட்சம் கிடைப்பதாகுக.

(46798)(5.6.3)

## வடக்கு மாகாண கல்வி மேம்பாட்டுக்கான மீளாய்வு மாநாடு

வடக்கு மாகாணசபையின் கல்வியமைச்சரின் கருத்துக்கமைவாக வடக்கு மாகாணத்தின் தற்போதைய கல்வி நிலையை ஆராய்ந்து அவற்றை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாணத்தின் கல்விமான்களை உள்ளடக்கிய பின்வரும் ஆறு பிரதான குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

01) கற்றலும் - கற்பித்தலும்
02) மாணவர் - ஆசிரியர் ஒழுக்கமும் ஆலோசனையும்
03) ஆசிரியர்கள், நிர்வாகிகள் சம்பந்தமானவை
04) நிதி தொடர்பானது - உத்தியோகத்தர் தேவைகள், மாணவர் தேவைகள்
05) கல்வி நிர்வாக அமைப்புக்களும் அதற்கான மாற்றீடுகளும்
06) திட்டமிடல் மற்றும் தரவுமையமான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்.

இக்குழுக்கள் வடக்கு மாகாணத்தின் கல்விசார் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் இனங்காணும் படிமுறைகளில் ஒன்றாக வடக்கு மாகாணத்தின் பொதுமக்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பொது அமைப்புக்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து கல்விசார் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுகளுக்கான முன்மொழிதல்களையும் எதிர்பார்த்து நிற்கின்றன.

பொதுமக்கள், பங்குதாரர்களிடமிருந்து அவர்களின் அபிப்பிராயங்கள், தகவல்கள், சிந்தனைக் கருத்துக்களை செயற்குழுவின் கவனத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரும் இதனையொத்த விளம்பரம் ஒன்று ஒக்ரோபர் 2013இல் அனைத்து வடக்கு மாகாண தமிழ், சிங்கள பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டது. அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் துலங்கல்களைப் பெற்றுக்கொண்டோம். அனைவருடனும் கலந்தாலோசித்துப் பெற்றுக்கொண்ட ஆலோசனைகளின் தொகுப்பு அறிக்கையில் பிரசுரிக்கப்படுகின்றது. இவ் விளம்பரம் அச்சந்தர்ப்பத்தினைத் தவறவிட்டவர்களுக்காகப் பிரசுரிக்கப்படுகின்றது.

தங்கள் கருத்துக்களையும் முன்மொழிதல்களையும் 21.04.2014இற்கு முன்பாக தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அனுப்பி வைத்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தபால் முகவரி:**
கலாநிதி நா.எதிர்வீரசிங்கம்,
இணையக் கற்கைநெறி நிறுவனம்,
66, கட்டைப்பாலி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி -ethirveerasingam@gmail.com

த.குருகுலராசா,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

(சி13640)
(12.3.6)

## பெயர்மாற்றம்

சிலாவத்தை தெற்கு, முல்லைத்தீவைச் சேர்ந்த மரியதாஸ் மேரி கிப்பொலிற்றா ஆகிய நான் 16.04.2014 முதல் மரியதாஸ் கிப்பொலிற்றா என பெயர்மாற்றம் செய்துள்ளேன் என அறியத்தருகின்றேன்.

## கொழும்பு திரும்புவதற்கு விசேட பஸ், ரயில் சேவை

கொழும்பு,ஏப்.17

சிங்கள, தமிழ் புத்தாண்டையொட்டி சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள், உறவினர் வீடுகளுக்குச் செல்லவும் கொழும்பு திரும்பவும் வசதியாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் விசேட ரயில் மற்றும் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சொந்த இடங்களில் இருந்து கொழும்பு வரவும் தூர இடங்களுக்குச் செல்லவும் நேற்றுமுன்தினம் முதல் விசேட பஸ் சேவை நடத்தப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மேலதிக விசேட தனியார் பஸ் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயணிகளின் தேவைக்கேற்ப பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பயணிகளிடம் கூடுதல் கட்டணம் அறவிடும் நடத்துநர்கள் குறித்து பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது என்று ஆணைக் குழு தெரிவித்துள்ளது. தேவைக்கு ஏற்ப சேவையில் ஈடுபடுத்த மேலதிக பஸ்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை விசேட ரயில் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று போக்கு வரத்து அமைச்சு கூறியுள்ளது. (ச)

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கலைஞர் நீரில் மூழ்கி சாவு

கொழும்பு,ஏப்.17

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் புகைப்படக் கலைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். ஜனாதிபதி ஊடகப் பிரிவில் கடமையாற்றி வந்த விராஜ் சிரந்த அமரக்கோன் என்பவர் தங்காலை மெத கட்டிய கடலில் குளிக்கச் சென்றபோது, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தங்காலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மரண அறிவித்தல்

### செல்லையா ஞானசீலன்



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ஞானசீலன் 14.04.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா-சந்திரமதி தம்பதியரின் அன்பு மகனும், தவநிதியின் அன்புக் கணவரும், ஞானுசா, வேனுசா ஆகியோரின் தந்தையும், பாஸ்கரன் (கனடா), பாலகேதீஸ்வரி, உதயகுமார் (சுவிஸ்), செல்வக்குமார் (கனடா), நிர்மலா (கனடா) ஆகியோரின் சகோதரரும், விமலாதேவி (கனடா), முருகதாஸ் (குவைத்), மாலா (சுவிஸ்), சுமித்திரா (கனடா), அன்ரன் (கனடா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலியிலுள்ள இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

(46688) (10)

## மரண அறிவித்தல்

### செல்வி தமயந்தி தம்பித்துரை



அச்சவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தமயந்தி தம்பித்துரை நேற்று (16.04.2014) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் தம்பித்துரை - சந்திரகாந்தி (சந்திரா) தம்பதியரின் பாசமிகு மகளும் ஜெயந்தி, வசந்தி, விசியந்தி ஆகியோரின் பாசமிகு தங்கையும் சுதேஸ்வரன் (சுரேஸ்), சிறிதரன், கோகுலன் ஆகியோரின் மைத்துனியும் யதுஸ், பவிசன், அக்சயன், சிறிலக்சன், டனுசி, டக்சன் ஆகியோரின் பாசமிகு சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தமேனி, அச்சுவேலி

தகவல்: தம்பித்துரை (தந்தை)

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை தேவராஜா



சரசாலையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை தேவராஜா நேற்று (16.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் கனகரத்தினம், கமலாம்பிகை, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் தனலட்சுமியின் அன்புக்கணவரும் லமிர்தா, தேனுகா, ராஜதேவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பா வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி, 021 3008823

தகவல் குடும்பத்தினர்

## நெடுஞ்சாலை பயணங்களால் 133 இலட்சம் ரூபா இலாபம்

கொழும்பு,ஏப்.17

கொழும்பு - கட்டுநாயக்க மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனப் பயணங்களுக்கான கட்டண அறவீடு மூலம் கடந்த13ஆம், 14 ஆம் திகதிகளில் மட்டும் 133 லட்சம் ரூபா இலாபம் கிடைத்துள்ளது என்று அதிவேக நெடுஞ்சாலை முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது. (ச)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு சுப்பிரமணியம்

(வர்த்தகர் - உடுப்பிட்டி)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின் னப்பு சுப்பிரமணியம் (வர்த்தகர், உடுப்பிட்டி) நேற்றுமுன் தினம் 15.04.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-அம்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்க ளான செல்லையா- வெள்ளையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், தமிழ்ச்செல்வன், கலைச்செல்வன், செந்தூர்ச்செல்வன், அருள்ச்செல்வன், தயாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


விக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்: குடும்பத்தினர்.

(C/13364)(10)

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் கைலாசநாதன்



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 8ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கைலாசநாதன் நேற்று முன்தினம் (15.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-தங்கம்மா இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், தம்பியப்பா-சின்னம்மா தம்பதியரின் மருமகனும், தியாகராஜா, நடராஜா, சோதிநாதன், சுப்பிரமணியம், சங்குவதி, விநாயகமூர்த்தி, தில்லம்மா, சண்முக ரத்தினம், செல்லம்மா ஆகியோரின் சகோதரனும், மோகனராஜா (உருத்திரபுரம்), வனிதாதேவி (ஊற்றுப்புலம்), கைலாச வாசன் (கொட்டடி), கருணாகரன் (ஜேர்மனி), நிர்மலாதேவி (ஸ்கந்தபுரம்), ஸ்ரீகாந்த தேவி (மண்டைதீவு), ஜெயசீலன் (ஜேர்மனி), கமலேந்திரன் (கிளி, ஜெயந்தி நகர்), சுகந்தன் (மண்டைதீவு), ஜெயந்தன் (சுவிஸ்), கமலேஸ்வரி (தாவடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசாமி, லலிதாம்பாள், வசந்மதமாலா, மங்களஜோதி (ஜேர்மனி), தங்கலிங்கம், சிவயோகராஜ், தர்சினி (ஜேர்மனி), கனிஸ்டாரூபினா, காஞ்சனா, கஜனி (சுவிஸ்), றமணன் ஆகியோரின் மாமனும், சிறிவாணி, காலஞ்சென்ற நந்தினி மற்றும் சாந்தினி, தர்சினி, சுகந்தினி, பிரதீபா, கஜன், கயந்தன், அஜந்தன், துசன், கஜீவன், ஜீவிதா, கையிலினி, பௌசிகா, அனுசன், கிந்துஜா, துளசிவாசன், கஜிதன் (ஜேர்மனி), கீர்த்திகன் (ஜேர்மனி), டக்ஷன் (இளங்கோ), டிலானிகா, சுரேன் அஜீத் பவதாரன் கஜோஜினா ஜெனிதன் (ஜேர்மனி), வாணுஜன் (ஜேர்மனி), இந்துஜன் (ஜேர்மனி), தேனுஜா, பாருஷா, தவசிகா, ஜபிஷன், பரணிகா, டிசாலினி, தனுஷக்கா, கஜேஸ் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், புகழினி, டிலைக்சிகா, சதுர்சன், பிரசாந், பூவிழி, சாகித்யா, சிந்துஜன், குயிழவன், மகிழவன், கஜிவன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மண்டைதீவு முகவரியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் வட்டாரம், மண்டைதீவு.
T.P: 077 056 9992

தகவல் : பிள்ளைகள்.

(46689)(10.6.3)

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் வசிக்கும் மூன்று பேர் கொண்ட வைத்திய குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு - 072 2242220, 077 9672613, 021 2053401

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் சர்வதேச நெருக்கடியை அதிகரிக்கும்

## ஊடகவியலாளர் செல்வதீபன் தாக்குதல் தொடர்பில் சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

வவுனியா, ஏப்.17

ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களின் குரல்களை நசுக்குவதற்காக அவர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன. இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் இலங்கை மீதான சர்வதேச நெருக்கடி இன்னமும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் அடையாளம் தெரியாதோரால் தாக்கப்பட்டுப் படுகாயம் அடைந்தமை தொடர்பில் தாம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

மக்களுக்காக பணியாற்றிவருகின்ற ஓர் ஊடகவியலாளரான சிவஞானம் செல்வதீபன் அடையாளம் தெரியாதோரால் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் படுகாயம் அடைந்திருக்கின்றார். அவர் ஓர் ஊடகவியலாளர் என்பதுடன் தனது சகோதரன் கடத்தப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பகிரங்கமாக சாட்சியமளித்தபோது, தமது குடும்பத்துக்கு நிகழ்ந்த அநீதி தொடர்பில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

காணாமல் போனோர் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தே இலங்கை அரசினால் ஜனாதிபதி ஆணைக் குழு அமைக்கப்பட்டது. குறித்த ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தமைக்காக பழிவாங்கும் நடவடிக்கையாகவே குறித்த ஊடகவியலாளர் மீதான தாக்குதலைக் கருத முடியும். இந்தச் சம்பவம் வன் மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

இந்த நடவடிக்கையும் பலத்த கண்டனத்துக்கு உரியது என்பதுடன் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தயங்கும் பொலிஸ் துறை தமது பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்-என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ற-402)

# செய்தியாளர் தாக்கப்பட்டமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது

தினக்குரல் பத்திரிகையின் வடமராட்சியின் ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் இனம் தெரியாதோரால் புதுவருட தினத்தன்று இரவு 8 மணியளவில் வல்லைப் பகுதியில் வைத்து மிகவும் காட்டுமிராண்டித்தனமாக கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதலை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று வட மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அவர் வடமராட்சியில் இடம் பெறும் அனைத்து விதமான செய்திகளையும் மிகவும் துணிவுடன் அறிக்கையிட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேரினவாத அரசானது தொடர்ச்சியாக எங்களது இளைய சமுதாயத்தை அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் ஜனநாயக முறையில் தொடர்ச்சியாக எங்களது உரிமைகளைப் பெற்று அமைதியான வாழ்க்கையை வாழத் துடிக்கும் எமது சமுதாயத்தைச் சீண்டிப் பார்க்கும் செயற்பாட்டை அரசு திட்டமிட்டு நடத்தி வருகின்றமை அனைவரும் அறிந்த உண்மை. இந்த நிலைமையானது மறந்து இருக்கும் எமது பழைய நினைவுகளை தூசு தட்டுவதற்குச் சமமான தாகும். ஆகவே எம் மீது பிரயோகிக்கப்படும் [illegible]க்குமுறைகளை நிறுத்தி பிறந்திருக்கும் புத்தாண்டிலாவது எமது இளைய சமுதாயம் அச்சமற்ற சூழலில் வாழ்வதற்கான சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கித் தரவேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன். (வ)

## மரண அறிவித்தல்

### திருமதி பூமலர் நவரத்தினம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூமலர் நவரத்தினம் கடந்த 14.04.2014 திங்கட்கிமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, கனகரத்தினம் மற்றும் கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரவி, காலஞ்சென்ற ஜெயசிறி மற்றும் ஜெயபதி, ஜெயவதனி, ரகுலேஸ்வரன், நிமலேஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், தனலட்சுமி, செல்வரத்தினம், நேசராசா, ஜெயராஜா, காலஞ்சென்ற காஞ்சனாதேவி மற்றும் கலாவதனி, மேனகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 075 068 6596
(46689) (10)

## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் சொரூபகாந்தன்



யாழ்/வண்ணை வீரமாகாளிஅம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சொரூபகாந்தன் நேற்று முன்தினம் (15.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசேந்திரம்- வாலாம்பிகை தம்பதியரின் புதல்வனும், ஜெயதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருளானந்தம்-சிவபாக்கியரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியவாணி (லண்டன்), சத்தியப்பிரியா (லண்டன்), சத்தியசாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பரஞ்சோதி தர்மேசின் (லண்டன்) அன்பு மாமனும், துஷாந்தின் பாசமிகு பேரனும், சிறிகாந்தா, ரூபகாந்தன், சொரூபகாந்தி, இந்திர காந்தன், சந்திரகாந்தி, காலஞ்சென்ற ராஜகாந்தன் மற்றும் கௌரிகாந்தி, குபேரகாந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அசோகலிங்கம், காலஞ்சென்ற சத்தியேந்திரன் மற்றும் சிறிஸ்கந்தராஜா, ரதிதேவி, காலஞ் சென்ற ஜெயநாதன் மற்றும் சாரதாதேவி, லோகேந்திரன், சுசிலா, ரதி, துசி, லைலாக்குமாரி, சண்முகராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
தகவல்:
குடும்பத்தினர்.
(சி/13362) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி தருமலிங்கம் (பப்பன்)



நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தருமலிங்கம் (பப்பன்) நேற்று (16.04.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-பொன்னு தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், தருமலிங்கம் (பப்பன்) அவர்களின் அன்பு மனைவியும், புஸ்ப ராசா அவர்களின் அருமைச் சகோதரியும், சந்திரகுமார் (கனடா), சந்திரகாந்தன், கமலகாந்தன், ஜெயக்குமார், விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரேணுகா, காயத்திரி, சந்திரிகா ஆகியோரின் அன்பு மாமியும், றொசானி (கனடா), சஜித்தா (கனடா), பிரார்த்தனா, மருசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2014) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை.
T.P : 077 711 1054
தகவல் : த.கமலகாந்தன் (மகன்)
கமலகாந்தன் நகைத் தொழிலகம்
சங்கானை.
(46800) (7.6.3)

## மரண அறிவித்தல்



### செல்லையா பாலச்சந்திரன்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாலச்சந்திரன் நேற்று (16.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், சோதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், சிவராம், ஜெயராம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திலகவதி, விஜயச்சந்திரன், யோகேஸ்வரன், விமலச்சந்திரன், யோகவதி, சோமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜஸ்மிளா, சுசாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பபினாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப.02.00 மணியளவில் மகிந்த மலர்ச்சாலை - கல்கிசையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்- 077 770 1782,
மருமகள் - 072 742 5251

இல.26, 1/3 ஏர் வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு - 06
(சி13361)(12)(3.8)

## கண்ணீர் அஞ்சலி



திரு. திருமதி கந்தப்பிள்ளை (முன்னாள் ஆசிரியர்கள், கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் மகளும், திரு.ஸ்ரீரஞ்சன் (ஸ்தாபகர், OSA-London-K.H.C), முன்னாள் தலைவர் OSA (London) K.H.C அவர்களின் மனைவியும், எமது கல்லூரி பழைய மாணவியும், பழைய மாணவர் சங்க உறுப்பினருமான **திருமதி வாசுகி ஸ்ரீரஞ்சன்** அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியினை காணிக்கையாக்குகின்றோம்.

பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

### சின்னப்பு தாமோதரம்பிள்ளை



(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபை உறுப்பினர் பொ.கருணாகரன் அவர்களின் அன்பு மாமனார் இறைபதம் அடைந்த செய்தி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி உள்ளது.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருடன் எமது துயரைப் பகிர்ந்து கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பர்வதவர்த்தனி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்
பரிபாலன சபை, உரும்பிராய். (48044)(5.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி யோகானந்தம்



மல்லாவி,2ஆம் பகுதி, அனிஞ்சியன்குளம், இல.108 ஐ நிரந்தர முகவரியாகவும் இல.19-D-10, உருத்திரபுரம்,கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி யோகானந்தம் 15.04.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் யோகானந்தத்தின் அன்பு மனைவியும், கீதா(மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), கீதன், திலீபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வசீகரன், தமிழரசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், பாதூரன், தீபிகா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.19-D-10, உருத்திரபுரத்தில் இன்று (17.04.2014)வியாழக்கிழமை பி.ப.2.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.19-D-10,
உருத்திரபுரம்,கிளிநொச்சி
தகவல்: குடும்பத்தினர்.
077 042 7804
(43440)(5.6.3)

# மின்னல் தாக்கத்தால் 131 பேர் உயிரிழப்பு

## கடந்த மூன்று ஆண்டுகளில்

கொழும்பு, ஏப்.17
கடந்த மூன்று ஆண்டுகள் இடைவெளியில் நாட்டின் பல பகுதிகளிலும் மின்னல் தாக்கத்தால் 131 பேர் உயிரிழந்துள்ளனர் என்று காலநிலை அவதான நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் அத்துல கருணா நாயக்க தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டில் 33 பேரும், 2012 ஆம் ஆண்டில் 51 பேரும், 2013 ஆம் ஆண்டில் 47 பேரும் மின்னல் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டின் இதுவரை காலத்துக்குள் 7 பேர் இவ்விதம் மின்னல் தாக்கம் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டில் பாடசாலைகள் மட்டத்தில் மற்றும் பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மின்னல் தாக்கம் சம்பந்தமாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்கள் காரணமாக இந்த ஆண்டில் மின் னல் தாக்கத்துக்கு உள்ளா னோர் தொகை குறைந் துள்ளது.

இடிமின்னலுடன் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமான தெளிந்த அறிவுடன் மிகக் கவனத்துடன் இருப்போமானால் மின்னல் தாக்க ஆபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்ளமுடியும் என்று காலநிலை அவதான திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கை

அந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி பங்கெடுத்திருந்தார். அங்கு அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு உணர்ச்சிபூர்வமாக உரையாற்றியுள்ளார்.

"காங்கிரஸ் கட்சி குறித்து யாரும் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன். இலங்கைத் தமிழர்களுக்காக காங்கிரஸ் கட்சி எதையுமே செய்யவில்லை என்று இங்குள்ள அரசியல் கட்சிகள் கூறுகின்றன. இலங்கைத் தமிழர்களுக்காக காங்கிரஸ் கட்சியை விடவும் எந்தக் கட்சி நன்மைகள் செய்தது என்று கூற முடியுமா?

அருமையான - உன்னதமான தலைவர் ராஜீவ் காந்தி, இலங்கைத் தமிழர்களுக்காக இரத்தம் சிந்தியதை மறக்க முடியுமா? அதைவிடவும் உயர்ந்த தியாகம் என்ன இருக்கின்றது. அரசியல் ஆதாயத்துக்காக காங்கிரஸ் கட்சியைக் குறை கூற வேண்டாம். இலங்கைத் தமிழர்களுக்கு காங்கிரஸ் கட்சி இனியும் உதவிகள் செய்யும். இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வுகாண போதிய நடவடிக்கை எடுத்துள்ளோம்"- என்று தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக அவர் குறிப்பிடுகிகையில், "மீனவர்கள் படும் துன்பம் எனக்குத் தெரியும்.

காங்கிரஸ் தலைமையிலான அரசு மீனவர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மீனவர் பிரச்சினை தொடர்பில் எமது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியால் எடுக்கப்பட்ட முயற்சிகள் தமிழ் நாட்டு அரசின் மந்தமான அணுகுமுறையாலேயே தொய்வடைந்துள்ளன."- என்று குறிப்பிட்டுள்ளார். (ற-5)

### யாழில்

ளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்த கலந்துரையாடல் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் முறையாக வவுனியாவில் இடம்பெற்றிருந்தது. அதன் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தது.

மூன்றாவது கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் எதிர் வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள் ளது. யாழ்.பொது நூலகத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்திலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபைகளில் நிலவி வரும் பிரச்சினைகள், ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் அதனோடிணைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள், இறுதியாக இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தென்னாபிரிக்கப் பயணம் என்பன குறித்து கலந்துரையாடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### முன்னைய

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட பாரவூர்தி உரிமையாளர்களே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

"யாழ்.மாவட்டத்தில் உள்ள பாரவூர்திகளின் உரிமையாளர்கள் கடன் சுமைக்குள்ளும் தொழில் வாய்ப்பு இல்லாமலும் முடக்கப்பட்டுள்ளனர். எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை வடமாகண சபை மேற்கொள்ள வேண்டும். வடமாகாண சபை எமக்கு ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையிலேயே வடமாகாண சபைக்கு மக்கள் வாக்களித்தனர்.

பாரவூர்தி உரிமையாளர்களின் பிரச்சினை தொடர்பாக வடமாகாண சபை முதல்வருக்கு இரு தடைகள் கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் வடமாகாண சபையால் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த காலங்களைப் போன்று பிரதேச செயலகங்கள் ஊடாக மாவட்டசெயலகத்தின் அனுமதியுடன் மணல் ஏற்றுவதற்கான அனுமதியை பெற்று மணல் ஏற்றுவதற்கும், சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பாரவூர்திகளில் பொதுமக்கள் தமது விருப்பத்துக்கு ஏற்ப எந்த பாரவூர்தியையும் மணல் ஏற்றுவதற்கு பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-14)

### நாடாளுமன்ற

தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது, அல்லது சில நெருக்கடியான நிலைமைகளின் போது படைகளை அனுப்பும் அதிகாரம் பிரதமருக்கு உள்ளது. 1989 இல் மாலைதீவில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்ட போது, அந்த நாட்டு அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தியப்படைகள் அங்கு அனுப்பப்பட்டன.

இலங்கையைப் பொறுத்த வரையில், 2008, 2009 இற்கு முன்னரே நெடுங்காலமாக நெருக்கமான பாதுகாப்பு உறவுகள், குறிப்பாக கடற்படையுடனான உறவுகள் இந்தியாவுக்கு இருந்து வந்துள்ளன. அதைவிட போரின் இறுதிக் கட்டத்தில், பாகிஸ்தானிடம் இருந்து ஆயுதங்களை வாங்குவதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது.

அப்போது இந்தியாவிடம் ஆயுதங்களை இலங்கை கோரியது. அதற்கு போருக்குப் பயன்படும் ஆயுதங்களை வழங்க முடியாது என்று இந்தியா கூறிவிட்டது. எனினும், விமானத் தாக்குதலில் இருந்து தடுப்பதற்கான சில ஆயுதங்களையும், ராடர்களையும் இந்தியா வழங்கியது.

எங்கும் களமிறக்கலாம் அவை போருக்குப் பயன்படாத ஆயுதங்கள் என்று இந்தியா கூறியது. பயிற்சி, ஆயுத உதவிகள் தவிர்ந்த இந்தியப் படைகள் அங்கு நேரடியாகப் போரில் பங்கேற்றதாக நான் அறியவில்லை. ஆனால், இந்திய நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி, படைகளை அனுப்பும் அதிகாரம் இந்தியப் பிரதமருக்கு உள்ளது. எனினும் பின்னர் அதுபற்றி நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இந்தியாவினது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று வரும் போது, அது உள்நாட்டிலாக இருந்தாலும், வெளிநாட்டிலாக இருந்தாலும் அதற்கெதிராக நடவடிக்கையில் இறங்க முடியும். விடுதலைப் புலிகள் இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருப்பதால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கையில் படைகளை ஈடுபடுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

### தென்னாபிரிக்கா

தலைமை தாங்கியவரும், கடந்த பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவுக்குச் சென்ற அரசதரப்புக் குழுவுக்கு தலைமை தாங்கியவருமான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவே இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிட்டது. அதற்கமைய தென்னாபிரிக்க ஜனாதிபதி இலங்கை விடயங்களை கையாள்வதற்காக சிறப்புப் பிரதிநிதியாக சிறில் ரமபோஷவை நியமித்திருந்தார்.

சிறில்ரமபோஷவின் அழைப்பை ஏற்று கடந்த பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவுக்கு இலங்கை அரச தரப்பினர் சென்றிருந்தனர். அதன் அடுத்த கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கடந்த வாரம் தென்னாபிரிக்காவுக்குச் சென்றனர். தென்னாபிரிக்காவிலிருந்து நாடு திரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தென்னாபிரிக்க அனுசரணையில் இலங்கை அரசுடனான பேச்சுக்குத் தயார் என்று அறிவித்திருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாட தயாராக இருக்கின்றோம். எனினும், தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைய வேண்டும் - என்று தெரிவித்தார். (ற-5)

### கொழும்பில்

சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டை அடுத்தே அதுகுறித்த விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

கணேஷ் என்பவர் பதிவு செய்துள்ள அந்த முறைப்பாட்டில் தனது சகோதரரான திலிப் மாரு சிறுநீரக மோசடியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

வேலை தேடி விசாகப்பட்டினம் செல்கின்றேன் என்று மாரு கடந்த மார்ச் 22 ஆம் திகதி வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். ஆனால் 6 நாள்களின் பின்னர் அவர் வேலை தேடி கொழும்புக்கு சென்றிருப்பது அவரது குடும்பத்தினருக்கு தெரியவந்துள் ளது.

திடீரென மாரு இறந்து விட்டதாக மார்ச் 30 ஆம் திகதி இலங்கை பொலிஸார் தொலைபேசி மூலம் அவரது குடும்பத்தினருக்கு அறிவித்துள்ளனர். மாரடைப்பு காரணமாக அவர் இறந்தாகவும் அவரது உடல் அரச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்திய அரசின் உதவியுடன் இறுதிக் கிரியைகளுக்காக ஏப்ரல் 3 ஆம் திகதி உடல் ஹைதராபாத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மாரு மாரடைப்பால் உயிரிழந்தார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில், கணேஷ் அவரது மின்னஞ்சல்களை தேடிப் பார்த்த போது கொழும்பில் இருந்து ஒருவர் மாருவின் சிறுநீரகத்தைக் கொள்வனவு செய்வதற்காக தொடர்பு கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.

15 லட்சம் ரூபாவுக்கு சிறுநீரகத்தைக் கொள்வனவு செய்ய மாருவுடன் பல்லராஜீ என்பவர் தொடர்பு கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. திலிப் மாருக்கு இலவச விமானப் பயணச் சீட்டு, விஸா மற்றும் தங்குமிட வசதிகளைச் செய்து தருவதாக கூறி கடவுச்சீட்டை பல்லராஜீ என்பவர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

சிறுநீரகம் எடுக்கப்பட்டதாக தாங்கள் கூறவில்லை எனவும் மாரு, சத்திர சிகிச்சையின்போதோ அல்லது அதற்குப் பின்னரோ உயிரிழந்திருக்கலாம் என்று ஹைதராபாத் பொலிஸார் கூறியுள்ளனர்.

மாருவின் மின்னஞ்சல்களின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட் டுள்ளதுடன், தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ் குற்றவியல் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்து பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ற)

### ஒருங்கிணைப்பு

செயலகத்தில் இடம்பெறவுள்ளது. பல ஆண்டுகளின் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைந்த தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணசபை அமைக்கப்பட்ட பின்னர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. அதில் இணைத் தலைமை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்படவில்லை. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள் யாரும் பங்கெடுக்கவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறும் யாழ்.மாவட்டஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், இணைத் தலைமை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்து யாழ்.மாவட்டஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ற-5)

### இறுதிப்

கெடுத்த முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சித் தலைவருமான சரத் பொன்சேகா இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இது உண்மையல்ல. வேண்டுமென்றே கூறப்பட்ட பொய் போன்று தோன்றுகிறது. அங்கு எவரது புடையினரும் எம்முடன் செயற்படவில்லை. தரைப் போரில் அங்கு இலங்கை இராணுவம் மட்டுமே சண்டையிட்டது. அங்கு வெளிநாட்டவர்களே கிடையாது.

அங்கு நாம் எவருடனும் ஒருங்கிணைந்து செயற்படக்கூட இல்லை. இத்தகைய தகவலைக் கேள்விப்படக் கூட இல்லை. போரில் சீக்கிய அதிகாரிகளைப் பயன்படுத்த எம்மிடம் எந்த தேவைகளும் இருக்கவில்லை. எந்த நிலைமைகளையும் தாக்குப்பிடிக்கக் கூடிய போதிய அதிகாரிகள் எம்மிடம் இருந்தனர். எமக்கு கட்டளையிடுவதற்கு எந்த வெளிநாட்டுத் தளபதியும் தேவைப்படவில்லை. நிலைமைகளை முற்றாக கையாளத் தக்க நிலையிலேயே நாம் இருந் தோம்.

சில நாடுகள், ஆயுதங்களைத் தந்து உதவின. சிலநாடுகள் உளவுத் தகவல்களைத் தந்துதவின. ஆனால் அதில் இந்தியா அடங்காது. இந்தியா எங்களுக்கு எந்த தடையையும் செய்யவில்லை. பிரச்சினையையும் தரவில்லை. நாங்கள் தான் எமது நடவடிக்கையை மேற்கொண்டோம்"- என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

### கனடாவின்

"பரஸ்பர மற்றும் தன்னார்வ நிதியம் பொதுநலவாய நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டது. தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான பொதுநலவாயத்தின் நிதியத்துக்கு கனடா நீண்ட காலமாக, பெறுமதிமிக்க உதவிகளை அளித்து வந்துள்ளது"- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

### மாகாணத்தின்

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"ஏனைய மாகாணங்களில் ஆளும் தரப்பினர் ஆட்சியில் இருப்பதால் மாகாணங்களில் பெரிதாக பிரச்சினைகள் ஏற்படப் போவதில்லை .

ஆனால் வடமாகாணத்துக்கென மாகாண சபையால் நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரங்கள் பல கிடப்பிலே உள்ளன. மாகாண சபை முன்னெடுக்கும் செயற்பாடுகளை மத்திய அரசு சீர்குலைக்கும் செயற்பாடுகளையே மேற்கொள்கிறது.

இதற்கு நாம் இடம் கொடுக்காமல் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு முயன்றளவு எமக்கான பயனைப் பெற வேண்டும். பொது மக்கள் தமது பிரதேச வளங்களைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். எமது வளங்களை நாம் தான் காப்பாற்ற வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற-14)

## புதிய பாரதி, ஆதவன் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப்.17
கரைச்சி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்களில் புதிய பாரதி இளைஞர் கழக அணி, ஆதவன் இளைஞர் கழக அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

முதலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை இளைஞர் கழகஅணிமோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் புதியபாரதி இளைஞர் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆதவன் இளைஞர் கழக அணியை எதிர்த்து விவேகானந்தா இளைஞர் கழகஅணிமோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆதவன் இளைஞர் கழகஅணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ரு-23)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்றுவியாழக்கிழமை மாலை 4.30மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து நவஜீவன்ஸ்விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரு-23)

* * *

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்நடத்தும்உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றறுவருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ரு-23)

## மானிப்பாய் பரிஸுக்கு கிண்ணம்

யாழ்ப்பாணம், ஏப்.17
வவுனியாபஸ்நிலையபிரன்ஸ் விளையாட்டுக்கழகம் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்திய 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வவுனியா பிரன்ஸ் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 19 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிதர்சன் 40 ஓட்டங்களையும்,வினோத்குமார் 33 ஓட்டங்களையும், சுபாஸ்கரன்29 ஓட்டங்களையும். தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வவுனியா பஸ் நிலைய பிரன்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் சுபாஸ் 3 இலக்குகளையும், சுதேஸ் 2 இலக்கினையும், கிருஷாந் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய வவுனியா பஸ் நிலைய பிரன்ஸ் விளையாட்டுக்கழக அணி 15பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சுபாஸ் 38 ஓட்டங்களையும், டினேஸ்11 ஓட்டங்களையும், ஜனகன் 10 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரதீபன், சுபாஸ்கரன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், ஹரிகரன், கிசோக்குமார் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி வீரன் நிதூர்சன் தெரிவானர். தொடர் ஆட்ட நாயகனாக மானிப்பாய் பரிஷ்விளையாட்டுக்கழக அணி வீரன் வினோத்குமார் தெரிவானார்.

சிறந்த பந்து வீச்சாளராக மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி வீரன் பிரதீபன் தெரிவானார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக வவுனியாபஸ்நிலையபிரன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் சுபாஸ் தெரிவானார். (ரு-23)



வெற்றிக் கிண்ணத்துடன் மானிப்பாய் பரிஸ் அணியினர்



வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தின் போது பந்தைப்பெற்று பரிமாற எத்தனிக்கும் நக்கீரன் அணி வீராங்கனை

## பருத்தித்துறை ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.17
சியாமினியின் இலக்குத் தவறாத பேறு எய்கையால் 19.9 என்ற புள்ளிகள் அடிப்படையில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், காஞ்சனா நகை மாளிகை மற்றும் காஞ்சனா மேக்கப் நிலையம் என்பவற்றின் அனுசரணையுடன்நடத்தியவலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் பருத்தித்துறைஐக்கியவிளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் அல்வாய் நக்கீரன் விளை யாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பத்தில் இரு அணி வீராங்கனைகளும்மிகத்திறமையாகவிளையாடி மாறிமாறிப் பேறுகளைப் பெற்ற போதும் நேரம் செல்லச் செல்ல பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக வீராங்கனைகளின் விளையாட்டில் புது உத்வேகம் தென்பட்டது.

அந்த அணியின் மத்திய பகுதி வீராங்கனையான தர்சினி மற்றும் பேறு எய்பவரான சியாமினி ஆகியோரின் அனல் பறந்த ஆட்டத்தின் முன்னால் எதிரணியின் ஆட்டம் எடுபடவில்லை. இதனால் 9.5 என்ற பேறுகள் அடிப்படையில் முதற் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந் தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணி வீராங்கனைகளும் தமது வியூகங்களை மாற்றி புதிய உத்வேகத்துடன் விளையாடினர். இரண்டாம்பாதி ஆட்டத்தில்10:4என்ற புள்ளிகள் அடிப்படையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமே முன்னிலை பெற்றது. இறுதியில்19.9என்றபுள்ளிகள் அடிப்படையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வென்று சம்பியன் கிண்ணத்தை தன தாக்கியது.

இந்தப் போட்டியில் சிறந்த வீராங்கனையாகப் பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக் கழக வீராங்கனை தர் சினி தெரிவுசெய்யப்பட்டார். (ரு-400)

## வெளியேறியது ஸ்ரீ அம்பாள்

யாழ்ப்பாணம்.ஏப்.17
வெற்றி பெறக் கூடிய சந்தர்ப்பங்கள் பல இருந்தும் அணியின் முன்கள வீரர்களின் நிதானமற்ற செயற்பாடுகளால் சமநிலை தவிர்ப்பு உதை வாய்ப்பில் தோல்வி அடைந்து வெளி யேறியது நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகம்.

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும், பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகிய மறுகணமே ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழக வீரர் கோபிநாத் பந்தை தட்டிச் சென்று கோலாக்க முனைய எதிரணி வீரர் தடுத்தாடினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பந்து அவரையும் கோல் காப்பாளரையும் ஏமாற்றி கோல் கம்பங்களுக்குள் சரணடைந்தது. இதனைத் தொடர்ந்து ஆட்டம் விறுவிறுப்படைந்தது.

இடை வேளைக்கு முன்னரும் இடைவேளைக்குப் பின்னரும் பெரும்பகுதி நேரம் ஸ்ரீ அம்பாள் அணி வீரர்களிடையே பந்து கட்டுப்பாட்டில் இருந்த போதும் அவர்களால் அதனைச் சரியாகப் பயன்படுத்த முடியவில்லை.

ஆட்டம் இடை வேளைக்காக நிறுத்தப்படுவதற்கு 2 நிமிடங்கள் இருக்கும் போது உடுப்பிட்டி யுத் அணியின் வலது கரை முன்கள வீரர் விமலேஸ் வரன் அற்புதமான கோல் ஒன் றைப் போட்டு கோலின் எண் ணிக்கையைச் சமப்படுத்தி னார். இந்தச் சூழ்நிலையில் 1:1 என்ற அடிப்படையில் ஆட் டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் மேலும் சூடு பிடிக்க இரு அணியினரும் வெற்றிக் கோல்களைப் போட கடும் பிரயத்தனம் செய்தனர். ஆட்டம் நிறைவடைய இரு நிமிடங்கள் இருக்கும் போது உடுப்பிட்டி யுத் அணியின் கோல் பகுதிக்கு அப்பால் ஸ்ரீ அம்பாள் அணிக்கு சுயாதீன உதை ஒன்று கிடைத்தது. அதனை நிரோஷன் நேராகக் கோல் கம்பங்களுக்குள் உதைக்க கோல் காப்பாளரின் தவறினால் அது கோலாக மாறியது. இதனால் ஸ்ரீ அம்பாள் வீரர்கள் உற்சாகமடைந்தாலும் மறு கணமே யுத் அணியின் தடுப்பு அரண் என வர்ணிக்கப்படும் பகிநாதன் தனக்குக் கிடைத்த பந்தொன்றை எதிரணி வீரர்களை ஏமாற்றிக் கொண்டு சென்று அருமையான கோல் ஒன்றைப் போட்டார். இதன் பின் இரு அணியினரும் மேலதிக கோல்களைப் போடாததால் 2:2 என்ற நிலையில் ஆட்டம் நிறைவடைந்தது.

இதன் பின்னர் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக வீரர்களான சங்கீதன், திலீப் ஆகியோர் இரு கோல்களையும் ஸ்ரீ அம்பாள் வீரர் கௌரி சங்கர் ஒருகோலையும் போட ஏனைய வீரர்கள் கோட்டை விட்டனர். இறுதியில்4:3என்றஅடிப்படையில்உடுப்பிட்டியுத்விளையாட்டுக்கழகம் வென்றது.

அதற்கு முன்னர் இடம்பெற்ற ஆட்டத்தில் அனுபவ வீரர்களைக் கொண்ட பலாலி விண்மீன் 'ஏ' அணியும் புதிய வீரர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மணற் காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. புதிய வீரர்களாக இருந்தாலும், விண்மீன் அணியினருக்கு கடும் அச்சுறுத்தலாக இருந்தனர் சென்.அன்ரனிஸ் அணி வீரர்கள். இருந்தபோதும் டேமியன், கெனடி மற்றும் காண்டீபன் ஆகியோரின் உதவியுடன் மூன்று கோல் களைப் போட்டு 3:0 என்ற நிலையில் வெற்றி பெற்றது பலாலி விண்மீன் அணி. (ரு-400)

## வவுனியா பிரன்ஸ் கழகத்தின் விளையாட்டு இறுதி நிகழ்வு

வவுனியா,ஏப் 17
வவுனியா பிரன்ஸ் விளையாட்டுக்கழகம் ஒவ்வொரு வருடமும் நடத்தும் விளையாட்டுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வு பிரன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் தலைவரும், வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் செயலாளருமான கு.சஜிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக மங்களவிளக்கேற்றல், கொடியேற்றலுடன் காலை 7 மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து 9 மணிக்கு இடம்பெற்ற வவுனியா பண்டாரி குளம் விபுலானந்தாக் கல்லூரி மாணவர் களுக்கும், வவுனியா மடுக் கந்த மகாவித்தியா லயத்துக்கும் இடையிலான கடினப் பந்து கிரிக்கெட் இறு திப்போட் டியில் பண்டாரி குளம் விபு லானந்தாக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமான கழகங்களுக்கு இடையிலான கடினப்பந்து கிரிக்கெட் இறுதிப்போட்டியில் வவுனியா பிரன்ஸ் அணிக்கும் யாழ். மானிப்பாய் பரிஸ் அணிக்கும் இடையிலானகடினப்பந்து கிரிக்கெட் இறுதிப்போட்டியில் யாழ். மானிப்பாய் பரிஸ் அணி வெற்றிபெற்றது.

மாலை 5.30 மணிக்கு நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில், வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக்கிண்ணமும், பணப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டன.

மாலை நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் தலைவரும்,முன்னாள் நகரசபை உறுப்பினருமான தேசமான்ய. எஸ்.குமாரசாமி வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும், பணப்பரிசும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் பிரதி அமைச்சரும், வன்னி மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளருமான பிரேமரத்னசுமதிபால, வவுனியா மாவட்ட தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சன அபயரத்ன , பண்டாரிகுளம் விபுலா னந்தாக் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் திரு. தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ரு-421)

# என்னை நீக்கியது ஏன்?



இந்திய கிரிக்கெட் சபையின் தலை வர் பதவி யில் இருந்து காரணமில் லாமல் என்னை நீக்கியது ஏன் என்று உயர் நீதிமன்றத்தில் என்.ஸ்ரீனி வாசன் மனுதாக்கல் செய்துள்ளார்.

ஆறாவது பிரிமியர் தொடர் சூதாட்ட வழக்கை உயர் நீதிமன்றம் விசா ரித்து வந்த நிலை யில். இதன் இடைக் காலத் தீர்ப்பின் படி இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் பதவி யில் இருந்து ஸ்ரீனிவாசன் விலக நேர்ந்தது. இந்நிலையில் இடைக்காலத் தலை வராக. இந்திய அணியின் முன் னாள் அணித் தலைவர் கவாஸ்கர் பொறுப்பேற்றார்.

இதனிடையே நேற்று முன் தினம் உயர் நீதிமன்றத்தில் ஸ்ரீனிவாசன் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள் ளார். அந்த மனுவில் குறிப்பிட்டுள்ள தாவது:-

கடந்த 27ஆம் திகதி நடந்த விசாரணை யில் சூதாட்டம் குறித்து நியாய மற்ற. ஆதாரமற்ற முறையில் என் மீது குற்றம் சுமத்தப்பட்டது. எவ்வித காரணமும் இல்லாமல். தலைவர் பதவியில் நான் தொடரக் கூடாது என உயர் நீதிமன்றம் ஏன் உத்தரவிட்டது?



எனது பதவிக்காலம் வரும் செப்ரெம் பரில் தான் முடிகிறது. இதனால் கடந்த 28 ஆம் திகதி அளித்த இடைக்காலத் தீர்ப்பை. மறுபரிசீலனை செய்து மீதமுள்ள எனது பதவிக்காலம் முடியும் வரை தலைவர் பதவியில் என்னைத் தொடர அனுமதிக்க வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக் கொள் கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ஹட்ரிக் அடித்த தென்னாபிரிக்கா

டெஸ்ட் தரவரிசையில் முன்னணியில் இருக்கும் சர்வதேச அணிகளுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில், டெஸ்ட் மற்றும் ஒருநாள் தரவரிசையில் சிறந்து விளங்கும் அணிகளுக்கு பரிசுப் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி வெளியிடப்பட்டுள்ள டெஸ்ட் தரவரிசையின் படி முதல் இடத்தில் தென்னாபிரிக்க அணியும். இரண் டாவது இடத்தில் ஆஸ்திரேலியா அணியும் உள் ளது.

இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்ததால் கடைசி நேரத்தில் மூன்றா வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. நான்காவது இடத்தில் இங்கிலாந்து அணி உள்ளது.


இதையடுத்து, முதலிடம் பெற்றுள்ள தென்னா பிரிக்காவுக்கு ரூபா 2.87 கோடி பரிசாக வழங் கப்பட்டது.

இரண்டாவது இடத்தில் உள்ள ஆஷ்திரேலியாவுக்கு ரூபா 2.24 கோடியும், மூன்றாவது இடம் பெற்ற இந்திய அணிக்கு ரூபா 1.6 கோடியும் வழங்கப் பட்டது. நான்காவதாக உள்ள இங்கிலாந்துக்கு ரூபா 97 லட்சம் கிடைத்தது.

தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக தென்னாபிரிக்கா முதல் பரிசை தட்டிச் செல்வது மட்டுமில்லாமல் இதற்கான கிண்ணத்தையும் தக்கவைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (த)

# ஜோன்சன் ஓய்வு

ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல ஜோன்சன். ஒருநாள் மற்றும் 20/20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற திட்டமிட்டுள்ளார். தனது வேகத்தால் எதிரணிகளை நடுங்க வைக்கும் திறன் படைத்தவர் ஆஸ்திரேலிய நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன். சமீபத்தில் பங்களாதேஷில் நடந்து முடிந்த 20/20 உலகக்கிண்ணத்தில் கால் விரல் காயத்தால் பங்கேற்கவில்லை. இந்நிலை யில். டெஸ்டில் மட்டும் விளையாட முடிவு செய் துள்ள ஜோன்சன் இதுகுறித்து கூறுகையில், டெஸ்ட் போட்டியில் தான் விளையாட விரும்புகிறேன். இதற்காக டெஸ்டில் மட்டும் கவனம் செலுத்த முடிவெடுத்துள்ளேன்.



2015 இல் நடக்க உள்ள உலகக் கிண்ணத் தொடரை விட இங்கிலாந்து மண்ணில் நடக்கவிருக்கும் ஆஷஸ் டெஸ்ட் தொட ரைத்தான் என் இலக்காக கொண்டுள் ளேன்.எனவே ஒருநாள். 20/20 போட்டி களில் இருந்து ஓய்வு பெற முடிவு செய் துள்ளேன் என்று கூறியுள்ளார். (த)

# இங்கிலாந்து பிராந்திய அணியில் இணைகின்றார் குமார் சங்கக்கார



இலங்கை கிரிக்கெட் அணியின் குமார் சங்கக்கார, இங்கிலாந்து பிராந்திய கிரிக் கெட் அணியான டெர்ஹாம் அணியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தெரிவித் துள்ளார். இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற் றுலாவை இலங்கை மேற்க்கொள்ளவுள் ளது.இந்த தொடருக்கு முன்னர் டெர்ஹாம் அணியுடன் இணைந்து கொள்வது நல்ல அனுபவத்தை அவருக்கு வழங்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

டெர்ஹாம் அணியுடன் இணைந்து கொள்வதனால் இங்கிலாந்து தொடருக்கு முன்னர் நடைபெறவிருக்கும் அயர்லாந்து தொடரில், இரண்டு ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில், குமார் சங்கார பங்குபற்ற முடியாமல் போகும். இலங்கை கிரிக்கெட்டின் தெரிவுக்குழுவினர் இதற் கான அனுமதியை இன்னமும் வழங்க வில்லை. இருப்பினும் அனுமதி வழங் கப்படும் என எதிர்பார்க்கப்படும் அதே வேளை, குமார் சங்கக்கார இரண்டு அல்லது மூன்று போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் எனக் கூறியுள்ளார். (த)

# இங்கிலாந்து பிரீமியர் லீக்கின் முதலிடம் கடும் போட்டியில்

இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரின் இறுதிக் கட்டம் நெருங்கி வரும் நிலையில், முதலிடத்துக்கான கடுமையான போட்டி இந்த வாரப் போட்டிகளை தொடர்ந்து ஏற்பட்டுள்ளது.


செல்சி, மன்செஸ்ரர் சிற்றி.லிவர்பூல் அணிகளுக் கிடையில் இந்தப் போட்டி நிலவுகின்றது. முதலிடத் துக்கு வரும் என எதிர்பார்த்த மன்செஸ்ரர் சிற்றி அணி ஆர்சனல் அணியிடம் தோல்வியடைந்ததன் மூலம் வாய்ப்புகள் குறைந்துள்ள அதேவேளை லிவர் பூல் அணி தனக்கான வாய்ப்புகளை அதிகரித் துள்ளது.

தற்போது ஆர்சனல் அணி முதலிடத்தில் இருக்கின் றமை குறிப்பிடத்தக்கது. இரண்டாமிடத்தில் உள்ள செல்சி அணி ஸ்வன்ஷி சிற்றி அணியை வெற்றி பெற்று இரண்டாமிடத்தை உறுதி செய்துள்ளது. (த)

BARCLAYS PREMIER LEAGUE

" முதலிடத் துக்கு வரும் என எதிர்பார்த்த மன்செஸ்ரர் சிற்றி அணி ஆர்சனல் அணியிடம் தோல்வி யடைந்ததன் மூலம் வாய்ப்புகள் குறைந்துள்ள அதேவேளை லிவர் பூல் அணி தனக்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளது.

# நடப்புச் சம்பியனை வீழ்த்தியது கொல்கத்தா



சுனில் நரைனின் சுழலில் சிக்கி சின்னா பின்னமாகியது மும்பை இந்தியன்ஸ். இதனால் மும்பையை 41 ஓட்டங்களால் வீழத்தயது கொல்கத்தா அணி

ஏழாவது ஐ.பி.எல்.. தொடரின் முதற்கட்ட போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சில் நேற்று ஆரம்பமாகின. நேற்று நடந்த முதல் போட்டியில் நடப்பு சம்பியன் மும்பை அணி. கொல்கத்தா அணியை சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

கொல்கத்தா அணிக்கு கம்பீர் டக்-அவுட் ஆகி ஏமாற்றினார். அதிரடியாக விளையாடிய கலிஸ். மனிஷ் பாண்டே ஆகியோர் அரை சதம் கடந்தனர் . கலிஸ் 46 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 72 ஓட்டங்களையும் பாண்டே 53 பந்துகளில் 6 நான்கு ஓட்டங்கள்2 ஆறுஓட்டங்கள்அடங்கலாக 72ஓட்டங்களையும் பெற்றதோடு ரொபின் உத்தப்பா. சாகிப் தலா 1 ஓட்டத்தில் ஆட்டமிழந்தனர். யாதவ் ஆட்டமிழக்காமல் கொல்கத்தா அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகள் இழப்பிற்கு 163 ஓட்டங்கள் எடுத்தது. பந்து வீச்சில் மலிங்க 4 இலக்குகளையும் சகீர்கான் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். அடுத்து 164 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய மும்பை அணி 2பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. மும்பை அணி இதனால்41 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. அவ்வணி சார்பாகஅம்பதி ராயுடு48 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 27 ஓட்டங்களையும் தரே 24 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர். பந்து வீச்சில்சுனில் நரைன்4 இலக்குளையும் மோர்கல். அல் கஷன். சவ்லா ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக கலிஸ் தெரிவு செய்யப்பட்டார். (400)

# 2015 உலகக் கிண்ணத்திலும் அணி தலைவராக மிஸ்பா



2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா. நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியின் தலைவராக 40 வயதை நெருங்கும் மிஸ்பா உல்-ஹக் தொடர்ந்து நீடிப்பார் என்று தெரிகிறது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் கூறுகையில். டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட்டில் வீரர்களை திறம்பட வழிநடத்தி வரும் மிஸ்பா உல்-ஹக்கை தலைவர் பதவியில் இருந்து மாற்றும் திட்டம் இல்லை.

இப்போது அவர் மிகவும் அனுபவம் பெற்றுவிட்டார். தனிப்பட்ட முறையில் அவரது ஓட்டக் குவிப்பும் தொடர்ந்து நிலையாக இருந்து வருகிறது.

ஆனால் முகமது ஹபீஸ் விலகி விட்டதால் 20/20 கிரிக்கெட்டுக்கான அணிக்கு புதிய தலைவரை நியமிக்க ஆலோசனை நடந்து வருவது உண்மை.

அப்ரிடி. உமர் அக்மல். அகமது ஷேசாத் உள்ளிட்டோரின் பெயர்கள் அந்த பதவிக்கு பரிசீலிக்கப்படுகின்றன. என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

# கம்பீருடன் மோதலால் பதவி விலகல்



கம்பீருடன் ஏற்பட்ட மோதலின் காரணமாக ஆடுகளப் பராமரிப்பாளராகப் பணியாற்றிய இந்திய அணி யின் முன்னாள் வீரரான வெங்கட் சுந்தரம் பதவி விலக முடிவு செய்துள்ளார்.

இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் கம்பீர் டில்லி. கொல்கத்தா அணிகளின் அணித் தலைவராக உள்ளார். உள்ளூர் தொடருக்காக டில்லி பெரோஷா கோட்லா மைதான ஆடுகளம் தயாரிக்கப்பட்டபோது. இதன் பராமரிப்பாளர் வெங்கட் சுந்தரத்துடன் மோதலில் ஈடுபட்டுள்ளார்.

இதனிடையே டில்லி கிரிக்கெட் சங்கத் துணைத் தலைவர் சேட்டன் சவுகானை சந்தித்து பேசிய வெங்கட் சுந்தரம் இது பற்றி கூறுகையில், கடந்த 25 மாதங்களாக் டில்லி கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து முடிந்தளவுக்குச் சிறப்பான பணியைச் செய்து வந்தேன்.

இப்போதுள்ள நிலையில், தனிப்பட்ட காரணங்களுக்காக ஆடுகளப் பராமரிப்பாளர் பணியில் தொடர விருப்பம் இல்லை. கடந்த சில தொடரில் எனது உதவியாளராக இருந்த அன்கித் தத்தா. இந்தப் பதவிக்குப் பொருத்தமாக இருப்பார்.

எவ்வித முறைப்படியான பணி அமர்த்துதல் உத்தரவும் எனக்கு கொடுக்கப்படவில்லை. அதனால் நான் முறைப்படியான பதவி விலகல் எதுவும் தரவேண்டியதும் இல்லை என்று கூறியுள்ளார். (த)

# இலங்கை வரலாற்றில் முதன்முறையாக சம்பியன்களுக்கு அதிகூடிய பரிசுத்தொகை



உலக 20/20 கிரிக்கெட் சம்பியன்களான இலங்கை அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் 25 மில்லியன் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒரே தடவையில் மிக அதிகத் தொகையை இலங்கை அணி வீரர்கள் பெற்றுக்கொள்வது இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் இதுவே முதல் முறையெனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை. ஐ.சி.சி மற்றும் இலங்கை கிரிக்கெட்டால் வழங்கப்படவுள்ள பரிசுத் தொகையும் 15 வீரர்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இதன்படி. சாம்பியன் அணி 2.8 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளவுள்ளது. (த)

# வீரர்கள் நெருக்கடி இல்லாமல் விளையாட ஐ.பி.எல் உதவும்



வீரர்கள் நெருக்கடியின்றியும், ரசித்து விளையாடவும் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி உதவும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்தார்.

7ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி 3 கட்டங்களாக நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக கோஹ்லி மேலும் கூறியிருப்பதாவது:-

கிரிக்கெட்டை எப்போதும் ரசித்து விளையாடுவோம். அதுவும் ஐ.பி.எல் தொடரில் கூடுதல் மகிழ்ச்சியுடன் ஆடுவோம். சர்வதேசப் போட்டிகளில் இருப்பதுபோன்று எவ்வித நெருக்கடியும் இருக்காது.

இந்த சீசனில் ஒருசில படிகள் முன்னேறிச்செல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது. திறமையான வீரர்கள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளனர். ஒவ்வொரு முறையும் கோப்பையை வெல்ல முயற்சி செய்கிறோம். இந்த முறை அனுபவம். இளமை என சரியான அளவில் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இதைப் பயன்படுத்தி கிண்ணம் வெல்ல முயற்சிப்போம் என்று குறிப்பிட்டுள்ளார். (த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வேலைவாய்ப்பு
SofTTech
COMPUTER EDUCATION
பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
- Computer Lecturer
- Office Administrator (Female)
- Lab Assistant (Female)

தகுந்த பயிற்சிகள் வழங்கப்படும்
விண்ணப்பதாரர்கள் 22.04.2014ற்கு முன் தங்களது சுயவிபரகோவைகளை(CV) தபால்/மின்னஞ்சல் முகவரி மூலம் அனுப்பிவைக்கவும்
306, கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.
softtech_ariyalai@hotmail.com
021-221-1220,077-9122997

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19.04.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. காலை 01.00-03.00
4. மாலை 03.00-05.00
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -
Only Official FRENCH Centre
பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு
FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITWZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.
புதிய வகுப்புக்கள் 26.04.2014 8.30 am இன்றே பதிவு செய்யுங்கள்
61 கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 021 2228093

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.